நூலாசிரியர் பற்றி...



குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர் அமரர் பொன். கணபதிப்பிள்ளை மற்றும் அமரர் சந்திரசோதி ஆகியோரின் மூத்த புதல்வரான இந் நூலாசிரியர் தற்போது மட்டக்களப்பு திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீட சிரேஷ்ட விரிவுரையாளராக் கடமையாற்றி வருகின்றார். இவர் ஏற்கனவே பௌதிக விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக 17 வருடங்கள் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி யிலும் பின்னர் 8 வருடங்கள் மட்டக்களப்பு சிவாநந்தா வித்தியாலயத்திலும் கடமையாற்றியுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானப் பட்டத்தைப் பூர்த்தி செய்த இவர். தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு உள்வாரி மாணவராகத் தெரிவு செய்யப் பட்டு அதில் சிறப்புச் சித்தியும் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமாணி மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுதத்துவமாணி ஆகிய பட்டங்களையும் பூர்த்தி செய்துள்ளார். தற்போது பேராதனை பல்கலைக் கழகத்தில் கல்வியில் கலாநிதி பட்டத்திற்காக ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து உள்ளார்.

சமூக சேவையில் ஈடுபாடு கொண்ட இவர் மட்டக்களப்பு நூற்றாண்டு நட்சத்திரங்கள் என்னும் அரிமாக் கழகத்தின் ஸ்தாபக தலைவராவார். கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம் , யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் என்பனவற்றின் வருகைதரு விரிவுரையா ளராகவும் கடமையாற்றி வரும் இவர், கல்விப்புலம் சார்ந்த 50 இற்கு மேற்பட்ட பல்வேறு கட்டுரைகளை பல நூல்களிலும் எழுதியுள்ளதோடு ஆசிரியம் வெற்றி பெற, ஆசிரியர்களுக்கான கல்விப் புள்ளிவிபரவியல் மற்றும் மகிழ்ச்சிகரமான பாடசாலை ஆகிய நூல்க ளையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது அனைத்து ஆக்கங்களும் ஆசிரிய வாண்மைத்துவத்தை அடிப் படையாகக் கொண்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்

- திருமதி சுஜாதா குலேந்திரகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாணம்

ISBN: 978-624-93759-0-1
9 786249 375901
விலை ரூபா 500.00

ஆசிரிய வாண்மைத்துவம்



Teacher Professionalism

க. ஞானரெத்தினம்

ஆசிரிய வாண்மைத்துவம்

க.ஞானரெத்தினம்

சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மட்டக்களப்பு

2024

ஆசிரிய வாண்மைத்துவம்

க.ஞானரெத்தினம் எழுதியது

© 2024, மே

வெளியீடு
வணசிங்க பிரிண்டர்ஸ்
496 A, திருமலை வீதி, மட்டக்களப்பு.

500 பிரதிகள்

பதிப்புரிமை ஆசிரியருக்கே

"Teacher Professionalism"
Writen By Mr. K. Gnanaretnam

© 2024 May

Published by Wanasinghe Printers
496 A, Trinco Road, Batticaloa.

500 Copies

Copyright by Author

ISBN 978-624-93759-0-1

சமர்ப்பணம்



வித்தியாநிதி பேராசிரியர்

சோ. சந்திரசேகரம்

அவர்களுக்கு

அணிந்துரை

ஆசிரியர் வாண்மைத்துவம் என்ற தலைப்பில், திரு. க.ஞானரெத்தினம் எழுதியுள்ள நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆசிரியர் வாண்மைத்துவம் என்பது வெறும் கற்பித்தல் திறன் மட்டுமல்லாமல், மாணவர்களை ஊக்குவித்தல், வழிகாட்டுதல் மற்றும் அவர்களின் முழு திறனை வெளிக்கொணர உதவுவதையும் உள்ளடக்கிய ஒரு பன்முக எண்ணக்கருவாகும். மாணவர் கற்றலின் வெற்றி மற்றும் ஆசிரிய தொழில் மீது பொது நம்பிக்கையை நிலைநிறுத்தவும், உயர்தரக் கல்வி முறைமை ஒன்றை உருவாக்குவதற்கும் ஆசிரியர் வாண்மைத்துவம் அவசியமானது. இது ஆசிரியர்களின் தன்னார்வ ஈடுபாடு, சுய மேம்பாடு மற்றும் கல்வி பணிக்கான ஆழமான அர்ப்பணிப்பைக் கொண்ட ஒரு தொடர்ச்சியான பயணமாகும்.

இந்த நூலில், நூலாசிரியர் ஆசிரிய வாண்மைத்துவ விருத்திக்கு அடிப்படை எண்ணக்கருக்களை விளக்கிச்செல்கிறார். வாண்மைத்துவம் என்றால் என்ன, அதன் முக்கியத்துவம், ஆசிரியர்கள் கற்பித்தலில் கொண்டிருக்க வேண்டிய ஒழுக்கம், வெற்றிகரமான ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள், ஆசிரியர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய மென் திறன்கள், மாணவர்களிடம் ஆசிரியர் விருத்தி செய்ய வேண்டிய திறன்கள், பல்தரக் கற்பித்தல் போன்ற முக்கியமான தலைப்புகளை ஆழமாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார்.

நூலாசிரியரின் எழுத்து நடை எளிதானது மற்றும் புரிந்துகொள்ளக்கூடியது. அவர் தனது சொந்த அனுபவங்கள் மற்றும் பிற ஆசிரியர்களின் வெற்றிகரமான நடைமுறைகளிலிருந்து உதாரணங்களை வழங்கி இருந்தால் இந்நூலின் ஒவ்வொரு தலைப்பும் மேலும் நடைமுறை சார்ந்ததாக இருந்திருக்கும். இந்த நூல் நிச்சயமாக அனைத்து ஆசிரியர்களுக்கும் குறிப்பாக புதிய ஆசிரியர்களுக்கும் ஒரு பெறுமதிமிக்க வளமாக இருக்கும். தங்கள் கற்பித்தல் திறனை மேம்படுத்தவும் மாணவர்களுடன் சிறந்த உறவை வளர்த்துக் கொள்ளவும் திறமையான ஆசிரியர்களாக மாறவும் விரும்பும் அனைவருக்கும் இந்நூலை பரிந்துரைக்கிறேன்.

பேராசிரியர். எப்.எம்.நவாஸ்தீன்

தலைவர்,
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித்துறை
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவலை
இலங்கை

முன்னுரை

கல்விபுலம் சார்ந்தவர்களின் பன்முகவிருத்திக்கு கல்விசார் நூல்கள் அவசியமானவை. தமிழ் மொழியில் இத்துறையில் போதுமான நூல்கள் இல்லை என்ற குறைபாடும் நிலவுகின்றது. இக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டியது கல்விப் புல விற்பன்னர்களின் முக்கிய கடமையாகும்.

இந்த வரிசையில் இது எனது நான்காவது நூலாகும். ஏற்கனவே 'ஆசிரியம் வெற்றிபெற' 'ஆசிரியர்களுக்கான கல்விப் புள்ளி விபரவியல்' மற்றும் 'மகிழ்ச்சிகரமான பாடசாலை' ஆகிய மூன்று நூல்களையும் வெளியிட்டிருந்தேன். கல்விச் சமூகம் வழங்கிய ஆதரவு, ஊக்குவிப்பு காரணமாக இந்நூல் மலர்ந்துள்ளது. இவ் அனைத்து நூல்களுமே கல்விப்புலம் சார்ந்ததாகவும் விசேடமாக ஆசிரியர்களுடன் தொடர்பு பட்டதாகவும் அமைந்திருந்தன. ஏற்கனவே 25 வருடங்கள் ஆசிரியாராக கடமையாற்றி தற்போது சுமார் 15 வருடங்கள் ஆசிரியரின் தொழில் வாண்மை விருத்திக்கு உதவுகின்ற பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் நான் ஆசிரியர் விருத்தி தொடர்பாக மிக்க ஆர்வம் கொண்டவனாவேன். கல்வியில் புதுமைகளை புரட்சியை ஏற்படுத்தவேண்டுமானாலும் அது ஆசிரியரின் விருத்தியிலே பெரிதும் தங்கியுள்ளது என்பது எனது நம்பிக்கையாகும். ஆசிரியர்களில் ஏற்படுகின்ற மனப்பாங்கு மாற்றம், அறிவுவிருத்தி, புத்தாக்க சிந்தனை போன்றவை மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் பாரிய செல்வாக்கை செலுத்தக் கூடியவை. இதன் காரணமாகவே எனது அனைத்து நூல்களிலும் ஆசிரியர்கள் மையப்படுத்தப்படுகின்றனர்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி ஆசிரியர்களின் வாண்மைத் துவத்திலே தங்கியுள்ளது. வாழ்நாள் மாணவர்களாகக் கருதப்படும் ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவத்தை இற்றைப்படுத்திக் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். இந்நூல் இதற்கு பங்களிப்பு செய்யும் என்பது என் நம்பிக்கையாகும். வெவ்வேறு காலப் பகுதிகளில் எழுதிய கட்டுரைகள் இற்றைப்படுத்தப்பட்டு இம்மலரை அலங்கரிக் கின்றன. தேவை கருதி சில ஆக்கங்களை மாத்திரம் வாசிக்கும் வாசகர்களுக்காக சில விடயங்கள் முன் கூட்டியே கூறிய விடயங்களாகவும் அமைந்துள்ளன.

இம் மலரை எனது முதல் கல்விப் பேராசிரியர் அமரர் சோ.சந்திரசேகரம் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்வதில் நான் மன நிறைவு கொள்கின்றேன்.

இந்நூல் சிறப்பாக வெளிவருவதற்கு எப்போதும் ஆசி வழக்கிக் கொண்டிருக் கின்ற எனது வழிகாட்டிகளுக்கும் என்மீது பெருமதிப்பு கொண்ட ஆசிரிய நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். விசேடமாக இந்நூலை அச்சிட்டு உதவிய வணசிங்க பிரிண்டர்ஸ் உரிமையாளர் மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்

– நூலாசிரியர்
(0777118429)

பொருளடக்கம்

1. ஆசிரிய வாண்மைத்துவம்

அறிமுகம்:

குழந்தைகளிடம் முடங்கிக்கிடக்கும் அறிவையும் திறன்களையும் வெளிப்படுத்தும் செயல்முறையாக கல்வி விளங்குகின்றது. "உலகை திறப்பதற்கான ஒரு திறவுகோல் கல்வி எனவும் இது சுதந்திரத்திற்கான கடவுட்சீட்டு" எனவும் கருப்படுகின்றது. அறிவுப் பெருக்கத்துக்கு உதவும் அனுபவங்கள் மட்டுமன்றி மாணவர்களது உடல்–உள வளர்ச்சி, மனவெழுச்சி, முதிர்ச்சி, சமூக வளர்ச்சி போன்றவற்றிற்குத் துணை செய்யும் அனுபவங்களும் இதில் அடங்கும். குழந்தைகளது இளமைப்பருவத்திலே, அவர்களது இளகிய உள்ளத்தில் பயனுள்ள பல அனுபவங்களைப் பதியவைக்கும் மிகமுக்கிய பொறுப்பினைப் பாடசாலைகள் நிறைவேற்றுகின்றன. இப்பொறுப்பினை நிறைவேற்றும் கதாநாயகர்கள் "ஆசிரியர்" ஆவார். இவர்கள் சமுதாயத்தில் சிறப்புமிக்க போற்றப்படும் ஒருவராவார். ஓர் ஆசிரியரது பிரதான பணி குறிப்பாக மாணவர்கள் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன் என்பனவற்றை விருத்தி செய்து அவர்களை வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி காட்டுவதாகும். இதனால் தான் கல்வியின் பிரதானமான இலக்கு "நற்பிரஜைகளாக வாழ வழிகாட்டுதல்" என்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சமூகத்தில் வேறு எந்தவொரு தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவரை விட ஓர் ஆசிரியரது தனிப்பட்ட சுதந்திரம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. அவரது நடத்தைக் கோலங்கள் மீது மாணவர் அக்கறை செலுத்துவார்கள். ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர். பழைய மாணவர், கல்விச் சமூகம் உட்பட அனைவரும் ஆசிரியர் மீது கவனஞ்செலுத்துவர். 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் ஆசிரியர் பற்றி பின்வருமாறு கூறப்படுகின்றது.

“பாடசாலை முறைமையில், மாணவர்களுக்கு அடுத்தபடியாக ஆசிரியர்கள் மிகமுக்கியமான மனித வளத்தொகுதியாகக் காணப் படுகின்றனர். வகுப்பறை ஒரு பாடசாலையில் “மைய நிலைமை” வகிக்கின்றது. இங்கு மாணவர்களும் ஆசிரியர்களுமே முதன்மை யான பங்காளிகளாவர். மாணவ – ஆசிரிய இடைத்தாக்கமே கற்றல், கற்பித்தலில் கூடிய செல்வாக்கு செலுத்துகின்றன. ஒரு வகுப்பறையின் வினைத்திறமை ஆசிரியர்களைப் பற்றிய புலக்காட்சியிலே பெரிதும் தங்கியுள்ளதென்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களை எந்தளவிற்கு உயர்வாக மதிக்கின்றார்களோ அந்த அளவிற்கே விளைவுகள் பயனுள்ளவையாயும் நிலை நிற்பனவாகவும் இருக்கும்”.

இத்தகைய ”சிறப்புமிக்க” பணியை ஆற்றுவதற்கு ஓர் ஆசிரியர் சிறப்பான இன்றியமையாத பல பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். இப் பண்புகள் இயற்கையாகவோ அல்லது பயிற்சி மற்றும் அனுபவம் ஆகியவற் றின் விளைவாகவோ ஒரு சிறந்த ஆசிரியரிடம் உருவாகலாம். இத்தகைய உயர் வாண்மைத்துவத்தை “ஆசிரியர் வாண்மைத்துவக் கல்வி” மூலம் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இத்தகைய வாண்மைத்துவக் கல்வி இலங்கையில் பிரதானமாக இரு வகைகளில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

1. ஆசிரியர்களின் தொடக்கநிலை வாண்மைத்துவக் கல்வி:

இது ஆசிரிய நியமனம் கிடைத்தவுடன் முதன் முதலில் பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். வகுப்பறைக்குச் செல்வதற்கு முன்பாக கற்பித்தல் அனுபவம் எதுவுமின்றி இக்கல்வியை ஆசிரியர் பெற்றுக்கொள்வதாகும். ஆரம்ப காலத்தில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியருக்கான முன்சேவைப் பயிற்சி இதற்கு சிறந்த ஒரு உதாரணமாகும்.

2. ஆசிரியர்களின் தொடருறு வாண்மைத்துவக்கல்வி:

ஆசிரியர்களின் சேவைக்காலத்தில் கிரமமாக வழங்கப்படுகின்ற வாண்மைத்துவ கல்வியை இது குறிக்கின்றது. தற்போது ஆசிரிய வாண்மைத்துவ நிலையங்களில் நடைபெறும் தடைதாண்டல் வகுப்புக்கள்

இதனுள் அடங்கும். இதனூடாக மீளக்கற்றல், புதியன புகுதல், இற்றைப் படுத்தல் என்பன நடைபெறுகின்றன. மாற்றமுறுகின்ற சீர்திருத்தங்கள், தகவல் தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி முடிவுகள் என்பனவற்றை இவற்றினூடாக ஆசிரியர் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது.

இவ் ஆசிரியர் கல்வியினூடாக மாணவர் பற்றிய உளவியல் விளக்கம், சாதகமான மனப்பாங்கு, நவீன கற்பித்தல் முறைகள், கல்வித் தத்துவங்கள், தகவல் நுட்பத்திறன், ஆலோசனை வழிகாட்டல், சமநிலை ஆளுமை, தமது தொழில் பற்றிய தெளிவான பார்வை, கணிப்பீட்டு-மதிப்பீட்டு உத்திகள் போன்றவற்றை ஆசிரியர்கள் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆசிரியரின் தொழில்வாண்மை:

ஒருவர் தம் பணியில் அல்லது தொழிலில் நிபுணத்துவத்தை அடைவதற்கு அவர் பெற்றுக்கொள்ளும் அறிவு, திறன், செயற்பாடுகள் யாவும் தொழில் வாண்மை எனப்படும். “தொழில்வாண்மை என்பது தகைமை, அந்தஸ்து என்பனவற்றை விருத்தி செய்தலாகும் என கார்கிறிவ்ஸ் (2000) கூறுகின்றார். இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டக முன் மொழிவுகளில், ஆசிரியரின் தொழில் வாண்மையானது தேர்ச்சி. செயலாற்றுகை, நடத்தை ஆகிய மூன்று பண்புக் கூறுகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இங்கு ”தேர்ச்சி” என்பது அறிவு, மனப்பாங்கு, திறன் மற்றும் ஆளிடைத் தொடர்பு என்பனவற்றின் சேர்க்கையால் உருவாகும் வாழ்க்கைப் பழக்கமாகும். இதனூடாக ஆசிரியர் ஒருவர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் தயார்நிலை, பாடரீதியான முழுமை யான அறிவு, வினைத்திறன் மிக்க கற்பித்தல் நுட்பங்களை பிரயோகித்தல் ஆகிய மூன்று விடயங்களையும் அடைந்து கொள்ள முடிகின்றது.

மேலும் பர்க் (1983) என்பவர் குறிப்பிட்ட ஒரு தொழிலுக்காக பின்வரும் தேர்ச்சிகள் அவசியமாகின்றன எனக் கருதுகின்றார்.

- தம் பணியில் விசேடத்துவம்.
- தம் பொறுப்பான பணிக்கு பொருத்தமான நுட்ப முறைகளையும், தொழில் நுட்பத்தையும் அறிந்திருத்தல்.
- ஒழுக்கக் கோவைக்கான ஒரு நடத்தைசார் அமைப்பு காணப்படல்,

- சேவையைப் பெறுவோரின் நம்பிக்கை சிதையாதவாறு செயற்படல்.
- தொழில்சார் குழுக்களின் ஒத்துழைப்புடன் செயற்படல்.

இவ் ஐந்து தேர்ச்சிகளையும் ஆராய்ந்து நோக்கும் பொழுது, ஆசிரியர் தொழிலுக்கு நியமிக்கப்படும் ஒருவர் அதற்காக அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதற்கு தன்னை தயாராக்கிக்கொள்ள வேண்டும் என்பது புரிகின்றது. பல வருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்ட தமது பட்டத்தை சமகால தேவைக்கேற்ப இற்றைப்படுத்திக் கொள்வது கட்டாய தேவையாகும். இவற்றை பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி ஆகிய பாட நெறிகளினூடாகவும் அவ்வப்போது நடைபெறுகின்ற தொடருறு வாண்மைத்துவ கல்வியினூடாகவும் பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது. இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் உலகம் போற்றும் விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல்கலாம் “21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்கள் மாணவர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான கருவிகளாக எதிர்பார்க்கப்படுகின்றனர்” என்பதோடு இதற்கான புலங்களாக ஆராய்ச்சி, புத்தாக்கம், உயர் தொழில் நுட்பப்பயன்பாடு, தலைமைத்துவம் என்பனவற்றை அடையாளங் கண்டுள்ளார்.

தொழில் வாண்மைத்துவத்தின் மிகமுக்கிய பண்புக் கூறாக தொழில் மகத்துவத்தை தருகின்ற ஒழுக்கக்கோவைக்கு கட்டுப்பட்டவராக ஆசிரியர் இருக்கவேண்டும் என்பதாகும். முன்மாதிரி, நேரம் தவறாமை, சமநிலை ஆளுமை, இனியவை கூறல், உண்மை பேசுதல், விட்டுக்கொடுத்தல் என்பனவெல்லாம் ஆசிரியர் ஒருவரை பெருமைப்படுத்தும் அணிகலன் களாகும். இவற்றினூடாக தம்மிடம் சேவை பெறுகின்ற மாணவர்களின் நம்பிக்கை, மரியாதை, அன்பு என்பனவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அத்துடன் பாடசாலையின் தொழில்சார் குழுக்களான சக ஆசிரியர்கள், பகுதித்தலைவர்கள், பிரதி அதிபர்கள், அதிபர். கல்வி நிர்வாகிகள் போன்ற ஆளணியினருடன் சுமுகமான உறவைப் பேணுவதனூடாக அவர்களின் உச்சநிலை ஒத்துழைப்பைப் பெற்று அதியுயர் சேவையை வழங்கமுடியும்.

வாண்மைத்துவத்தின் மற்றுமொரு பண்புக்கூறு ”உயர்மட்ட செயலாற்றுகை” என்பதாகும். இது கலைத்திட்டத்திலுள்ள எண்ணக்

கருக்களை கற்பிக்கக்கூடிய ஆசிரியரின் ஆற்றலில் வெளிப்படுத்தப் படுகின்றது. வகுப்பறையில் பாடவிடயம் தொடர்பான எண்ணக்கருவாக்கமே கற்றலின் வெற்றிக்கு இன்றியமையாததாகும். பொருத்தமான கற்றல் வளங்களைப் பயன்படுத்தி சிறந்த கற்பித்தல் முறைகளினூடாக சிறந்த எண்ணக்கருவாக்கத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்த முடியும்.

ஆசிரியரின் ”நடத்தை” வாண்மைத்துவத்தின் மற்றைய பண்புக் கூறாகும். ஆசிரியரின் ஆளுமை பண்புடன் இது தொடர்புபட்டது. இதனுடாக ஆசிரியரின் தோற்றம், முக பாவம், உடை, குரல்வளம், தொனி, கற்பித்தல் பாணி என்பன போன்றவை எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய ஒழுக்க கோவைக்கான கட்டுப்பாடு, உயர்மட்ட செயலாற்றுகை மற்றும், நடத்தை ஆகிய மூன்று பண்புக்கூறுகளுக்கும் மேலதிகமாக தொழில்வாண்மையில் செல்வாக்கு செலுத்தும் மற்றுமொரு காரணியாக “ஆசிரியர் வகிபங்கு” கருதப்படுகின்றது.

ஆசிரியர் வகிபங்கு:

ஒருவர் தனது தொழிலை சிறப்பிக்கவும் மேம்பாட்டை அடைவதற் காகவும் சேவையாளரின் ஆர்வத்தை அதிகரிப்பதற்காகவும் தான் ஏற்றுக்கொள்ளும் நடிபங்கே வகிபங்கு அல்லது வகிபாகம் எனப்படுகின்றது. தனது வயது. அந்தஸ்து, கௌரவம் என்பனவற்றை கருத்தில் கொள்ளாது சேவையாளரின் தேவை, கவர்ச்சி மற்றும் விருப்பிற்கேற்ப தன்னை உருமாற்றிக் கொள்ளவேண்டும். ஆசிரியர் வகிபாகம் குரு - சிஷ்ய முறையில் ஆரம்பித்து காலத்திற்கு காலம் மாறிக்கொண்டே வருகின்றது. இது புதியதோர் உலகு, விரைவாக மாறிவரும் விஞ்ஞான உலகு. தகவல் தொழில்நுட்பம் மற்றும் கோளமயமாதல் போன்ற காரணிகளால் புதிய எதிர் பார்ப்புகளும், பிரச்சினைகளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய புதிய அறைகூவலுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு மாணவர் சமூகத்தை உருமாற்றஞ் செய்யக்கூடிய “மாற்ற முகவர்” எனும் புதிய வகிபாகத்தை இன்றைய ஆசிரியர் ஏற்க வேண்டியுள்ளார்.

21 ஆம் நூற்றாண்டிற்கான ஆசிரியரின் "வகிபாகம்":

21ஆம் நூற்றாண்டிற்கான ஆசிரியரின் "வகிபாகம்" தொடர்பாக UNESCO இன் அறிக்கையானது பின்வரும் விடயங்களை எதிர்பார்க்கின்றது.

1. **பாடப்புலமை:**

   ஆசிரியர் ஒருவர் தான் கற்பிக்கும் பாடத்தில் போதிய புலமையுள்ளவராக இருத்தல் வேண்டும். விசேடமாக பாட அலகிலுள்ள ஒவ்வொரு எண்ணக் கருக்கள் தொடர்பாக தெளிவான விளக்கத்தை பெற்றிருக்க வேண்டும். இதற்காக ஆசிரியர் தொடர்ச்சியாக தேடல் மிகுந்தவராகவும், கற்றலில் வாழ்நாள் மாணவராகவும் இருப்பது அவசியமானதாகும். தாம் கற்பிக்கும் பாடத்துடன் தொடர்புபட்ட சகல நூல்களையும் தான் வைத்திருப்பது சிறந்தது. முக்கியமாக வகுப்பறைக்கு செல்லும் முன்னர் பாட ஆயத்தம் செய்து தைரியத்துடன் செல்வதும் ஆரோக்கியமானதாகும்.

2. **உயர் தொழிற்றகைமை:**

   ஆசிரியர் ஒருவர் உயர் தொழிற்தகைமை என்பதினூடாக கற்பித்தல் உத்திகள், உபகரணப் பயன்பாடு, புதிய தகவல் தொழினுட்பம் மாணவரின் உளவியல் தேவைகள், கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகள் என்பனவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது.

3. **தொடர்பாடலின் பிரத்தியேக திறன்:**

   கற்பித்தலின் வெற்றியைத் தீர்மானிப்பதில் முக்கிய காரணியாக ஆசிரியரின் தொடர்பாடல் திறன் கருதப்படுகின்றது. தான் நினைப்பதை, தான் எதிர்பார்ப்பதை மாணவர் புரியும் படியாகச் சொல்லக்கூடிய திறனை ஆசிரியர் ஒருவர் பெற்றிருக்க வேண்டும். சிறந்த குரல்வளம், தொனி, சைகைகள், முகபாவம் எல்லாம் இதற்கு அவசியமாகும். அத்துடன் தனது தாய்மொழிக்கு மேலதிகமாக சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றிருப்பது சமகாலத்தின் தேவையாகும்.

4. **கற்பித்தலில் மாணவர்களை பங்காளிகளாக பயன்படுத்தும் ஆற்றல்:**

   மாணவர்கள் அமைதியாக செவிமடுப்பவர்களாகவன்றி கற்றலில் பங்காளிகளாக மாற்றும் அக்கறை கொண்டவராக ஆசிரியர் இருத்தல்

வேண்டும். அப்போது தான் வகுப்பறையில் மாணவர் துலங்கல் ஏற்பட இடமுண்டு. குழச்செயற்பாடு மற்றும் முன்வைப்புச் செய்தல் போன்றவை கற்றலை மேலும் வளமுள்ளதாக்கும். அத்துடன் பல்வேறு திறன்களையும் மாணவர் விருத்தி செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

5. **படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவித்தலும் வரவேற்றலும்:**
தற்கால மாணவரின் ஆற்றல் அபாரமானது என்பது பலராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாகும். மாணவர்களிடம் முடங்கிக் கிடக்கின்ற பல்வேறு ஆற்றல்களை இனங்கண்டு, அதனை வெளிக் கொணர்வது ஆசிரியர்களின் முக்கிய கடமையாகும். பொருத்தமான ஊக்குவிப்புக்கள் வழிகாட்டல் மூலம் இதனை இலகுவாக சாதிக்கமுடியும். இன்று பிரபல்யம் பெற்றிருக்கின்ற அதிகமான சாதனையாளர்கள் அவர்களின் ஆசிரியர்களால் இனங்காணப்பட்டு, பொருத்தமான நேரத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டவர்களாவார். முக்கியமாக ஏதாவது ஒரு சிறிய படைப்பைக்கூட மாணவர் செய்யும் போது அதனை தட்டிக் கொடுத்து மேல் நிலைக்குக் கொண்டு வருவது அவசியமானதாகும்.

6. **பிரச்சினைகளை இனங்காணலும் தீர்த்தலும்:**
பிரச்சினை நிறைந்ததுதான் வாழ்க்கை. அத்துடன் பாடசாலை சிக்கல் நிறைந்த ஒரு நிறுவனமாகவும் கருதப்படுகின்றது. அங்கு பல்வேறு விதமான பிரச்சினைகள் மாணவருக்கு இருக்கும். உளவியல், ஒழுக்கம், நடத்தை, கற்றல், சமூகமயமாதல் போன்ற பல பிரச்சினைகளை மாணவர் கொண்டுள்ளனர். ஆசிரியர் தமது அனுபவம் மூலம் இவற்றை இனங்கண்டு, பொருத்தமான தீர்வை முன்வைப்பது அவசியமாகும். இதற்காக சிரேஷ்ட ஆசிரியர்களின் ஆலோசனை களையும் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.

7. **சமூக நீதிக்கு முக்கியத்துவம்:**
மாணவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் நிலை “மாதிரி” (Model) ஆக ஆசிரியர் கருதப்படுகிறார். இதனால் ஆசிரியர் ஒருவர் தான் உயர் விழுமியங்களை பேணும் ஒருவராக இருப்பது அவசியமாகும்.

அப்போது தான் மாணவரிடமும் இதனை ஏற்படுத்தலாம். பாடசாலை சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடிய உடை, நடத்தை, தோற்றம் கொண்டவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். அத்தோடு பாடசாலை பாரம்பரியத்தை மதிப்பவராகவும் போற்றுபவராகவும் அமைவது சிறப்பானது. தீர்மானங்களை மேற் கொள்ளும்போது நீதி தவறாமல், நேர்மையானவராக எந்தவொரு மாணவர்களும் பாதிக்காதவாறு செயற்படுவது ஆசிரியரின் உயர் தகைமையாகும். கனிவாக பேசுதல், மாணவர்களை ஏற்றுக்கொள்ளல், வாக்கு நாணயம் என்பனவெல்லாம் ஆசிரியர்-மாணவர் உறவை வளமாக்கக் கூடியவை. மாணவர்கள் தமது எதிர்பார்ப்புக்கு மாறாக நடக்கும் போது சகிப்புத்தன்மையுடனும் நிதானமாகவும் அதனை அணுகுவதன் மூலம் செயற்பாடுகளை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள முடியும் கடந்த காலங்களில் பல மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகியமைக்கான முக்கிய காரணியாக ஆசிரியரின் நடவடிக் கைகள் அமைந்திருந்ததாகவும் சில ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

8. **தொழில் மகத்துவம் பேணல்:**

ஆசிரியர் ஒருவர் தமது தொழிலை நேசிப்பவராகவும், அது தொடர்பாக நேர்மனப்பாங்கு கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். இச் சேவைக்கு விருப்புடனோ அல்லது விருப்பின்றியோ இணைந் திருக்கலாம். ஆனால் தொழிலை ஏற்றுக்கொண்ட பின்னர் அதனை மதித்து, அதற்காக தன்னை ஆயத்தம் செய்பவராக ஆசிரியர் மாற்றம் பெறவேண்டும். விரக்தி, விரும்பமின்மை, சலனம் இவற்றுடன் ஆசிரியர் வெற்றிகரமான கற்பித்தலை நடாத்த முடியாது. யாரோ ஓர் ஆசிரியரின் முயற்சியும், அர்ப்பணிப்பும், வழிகாட்டலும் தான் எம்மை உருவாக்கியது என்ப தனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய முக்கிய விடயமாகும். அத்துடன் ஆசிரியர் ஒருவர் தான் சேவை செய்யும் பாடசாலையின் பாரம்பரி யத்தை மதிக்க வேண்டியதும் சிறந்த பண்பாகும்.

முடிவுரை:

ஆசிரியரே பாடசாலையின் திறவுகோல், எத்தகைய மாற்றங்கள், சீர்திருத்தங்கள் என்பன அவ்வப்போது வந்தாலும் கூட, ஆசிரியர் ஒருவர் அதில் நாட்டமும் ஆர்வமும் உடையவராக இருந்தால் மாத்திரமே அது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அதிக வாய்புள்ளது. கடந்தகால பல ஆய்வுகள் ஆசிரியர் தொடர்பாக சாதகமான நிலையை தெரிவிக்கவில்லை. ஆசிரியர்களின் பாடப்புலமை, தொழிற்றகைமை. மனப்பாங்கு, நடத்தை எல்லாம் உரிய உயர் மட்டத்தில் இல்லை என்பத னையே இவை எடுத்துக் காட்டுகின்றன. தேசிய ரீதியான பல பாதமான விளைவுகள் இதற்கு உதாரணங்களாக எடுத்துக் காட்டப்படுகின்றன. கல்விச் சமுகம் எதிர்பார்க்கின்ற நோக்கங்களையும் தேர்ச்சிகளையும் உச்சநிலைக்கு கொண்டு வருவது ஆசிரியர்களின் கரங்களில் தான் உள்ளது. ஆசிரியரின் அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும், நேரான மனப்பாங்கும் இதற்கு உறுதுணையாக இருக்ககூடியவை. நாட்டின் எதிர்கால எஜமானர்கள் இன்று பாடசாலையில் ஆசிரியரின் முன்னால் மாணவர்களாக இருக்கின் றனர். இம்மாணவர் ஒவ்வொருவரும் நாட்டின் முதலீடுகள். இந்த முதலீட்டினூடாக நாட்டை வளமான நிலைக்கு கொண்டுவருவது ஆசிரியரின் பெரும் கடமையாகும். இதற்காக ஆசிரியர்கள் புதிய வகிபாகத்தை பொறுப்பேற்பது காலத்தின் தேவையாகும்.குறிப்பாக தற்போதைய யுகத்தில் மாணவர்கள் தொழினுட்ப ஈடுபாடு கொண்டவராக இருக்கின்றனர். இதற்கான செயற்பாடுகளை முன்னேடுப்பதற்கும் பொருத்தமான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் ஆசிரியர்கள் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியதும் முக்கிய பணியாகும்.

'நுணுக்கமான திட்டமிடலுடன் கூடிய
ஒரு நல்ல ஆசிரியர்,
தன்னைப் பயிற்றுவிப்பதற்கும்
மாணவர்களுக்கான அறிவைப் பெறுவதற்கும்
தயார்ப்படுத்துகின்றார்."

- Dr. அம்பேத்கர்

2. கற்பித்தல் ஒழுக்கம்

அறிமுகம் :

கல்வியின் பிரதான இலக்கு "ஜனநாயகப் பண்புடைய சிறந்த பிரஜைகளை உருவாக்குதலாகும்". இதற்காக ஆளுமை விருத்தி, சமூக விருத்தி , நற்குணவிருத்தி ஆகிய பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை கல்விச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக சமய நெறிகளும் மாணவரை அல்லது மனிதனை முழுமை பெற்ற, மனிதம் நிறைந்த மனிதனாக வாழ வழிகாட்டுகின்றன. முக்கியமாக கல்வி - ஒழுக்கம் என்பன ஒன்றைவிட்டொன்று பிரிக்கமுடியாத இறுக்கமான பிணைப்புகள் ஆகும். கல்வி கற்கின்ற ஒருவருக்கு ஒழுக்கம் அவசியம் என்பதும் கல்வி கற்பதினூடாக ஒழுக்கம் ஓம்பப்படும் என்பதும் நாம் அறிந்த விடயங்களாகும். மனிதப்பிறவியில் "ஒழுக்கம்" என்பது உயிரிலும் மேலாகப் போற்றப்படுகின்றது. வயது, இன, மத வேறுபாடின்றி அனைவரும் ஒழுக்க விதிமுறை களைப் பேணவேண்டியது கட்டாயமானதாகும். இதனையே சுவாமி விவேகானந்தர் "கடவுளுக்கு பயப்படுதல் அறிவின் ஆரம்பமாகும்" எனக் கூறுகின்றார்.

ஒழுக்காறு, மனப்பாங்கு, நல்லொழுக்கம் என்பனவற்றை பொதுவாக 'விழுமியம்' (Values) என்று கூறலாம். விழுமியம் என்பது மனிதனின் நல்லொழுக்க கற்றலிலும் நடத்தையிலும் உள்ள ஒரு விடய மாகும். இது ஒருவரது மனப்பாங்கில் ஆரம்பமாகின்றது. உடன்பாடான மனப்பாங்குகள் பல சேர்வதன் மூலம் விழுமியம் உருவாகின்றது அல்லது தோன்றுகின்றது எனலாம். விழுமியங்கள் நல்லொழுக்கத் தீர்மானங்களுக்கு தேவையான காரணிகளை வழங்குகின்றன.

நல்லொழுக்கத்தை கடைப்பிடிப்பதன் மூலம் ஒழுக்காறு தோன்றுகின்றது. “நல்லவை வளர்வதற்கும் தீயவை விலகிச் செல்வதற்கும் வழிகாட்டுகின்ற நடவடிக்கைகளின் நியமத் தொகுதியே நல்லொழுக்கம்” என எம். வீ. சீ ஜெப்ரீஸ் (1962) கூறுகின்றார். நல்லொழுக்கம் என்பது தத்துவங்களில் “சன்மார்க்க சாத்திரம்” (Ethics) எனவும் அழைக்கப் படுகின்றது.

ஒரு நிறுவனம் அல்லது பாடசாலையின் வெற்றிக்கு ஒழுக்கக் கோவை இன்றியமையாததாகும். அந்நிறுவனத்தின் பங்குதாரர் ஒவ்வொரு வரும் ஒழுக்க நெறிகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும். ஆசிரியர் ஒருவர் கற்பித்தலின் ஒழுக்க நெறிகளை பின்பற்றினால் மாத்திரமே வெற்றிகரமான கற்றல் செயற்பாட்டினை ஏற்படுத்தமுடியும். இதன் மூலமே மாணவர் கற்றலின் பால் ஈர்க்கப்பட்டு விளைவுகளும் மேலோங்கி காணப்பட அதிக வாய்புள்ளது. ஆசிரியர் அல்லது கற்பித்தல் தொடர்பான ஒழுக்க நெறிகள் பல கல்வியாளர்களினால் அவ்வப்போது முன்வைக்கப் பட்டு வந்துள்ளன. அவற்றுள் மிகமுக்கியமானதாகக் கருதப்படுகின்ற கற்பித்தலுக்கான “ஒன்பது ஒழுக்க நெறிகள்” இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

1. **பாடத்தேர்ச்சி**

ஓர் ஆசிரியருக்கு இருக்கவேண்டிய மிகமுக்கிய கற்பித்தல் ஒழுக்கம் பாடத்தேர்ச்சி அல்லது பாடப்புலமை என்பதாகும். தனக்குரிய கடமையை உச்சமட்டத்தில் மேற்கொள்ளுவதற்கு இது அவசியமாகும். மாணவர்களுக்கு சரியான “எண்ணக்கருவாக்கம்” ஏற்படுமாறு சிறப்பான கற்பித்தலை ஆசிரியர் நடாத்துதல் அவரது முக்கிய கடமையாகும். பல விடயங் களைத் தேடி அறிந்து போதிய பாட ஆயத்தத்துடன் வகுப்பறைக்குச் சென்று பொருத்தமான நவீன தர உ ள்ளீடுகள், கற்பித்தல் முறைகள் மற்றும் நுட்பங்களையும் ஆசிரியர் பயன்படுத்தவேண்டும். ஆசிரியர் ஒருவர் “ஓர் ஆராய்ச்சியாளர்” என்பதனையும், அதேவேளை “கற்றலின் வாழ்நாள் மாணவர்” என்பதனையும் ஏற்றுக் கொள்ளவேண்டியதும் முக்கியமாகும். நவீன யுக மாணவனுக்கு ஏற்ப தன்னை மாற்றியமைத்து புதுப்பித்துக்கொள்ள வேண்டியதும் சிறந்த ஆசிரியரின் கடமையாகும்.

2. **சிநேக பூர்வ கற்றல் கற்பித்தல் தேர்ச்சி**

தற்பொழுது "மாணவர் மையம்" பற்றிப் பேசப்படுகின்றது. வகுப்பறையில் மாணவனே எஜமான் ஆவான். வகுப்பறையிலுள்ள ஒவ்வொரு மாணவனையும் ஆசிரியர் ஏற்றுக்கொண்டு சிநேகபூர்வமான செயற்பாட்டை நடாத்துதல் வேண்டும். ஒவ்வொரு மாணவர்களும் "எதிர்கால தலைவர்கள்" என்பதனை மறந்துவிடலாகாது. கலந்துரையாடலுடன் கூடிய ஈடுபாட்டை வகுப்பறையில் ஏற்படுத்துவதோடு பொருத்தமான வேளையில் மாணவர்களை ஊக்கப்படுத்தி ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும். அத்துடன் அன்பாகவும், பண்பாகவும் மாணவருடன் பேசுதல் சிறந்த முன்மாதிரி ஆகும்.

3. **உணர்வு பூர்வமான அணுகுமுறை**

ஆசிரியர் தமது கடமைகளை உணர்வுபூர்வமாகச் செய்தல் வேண்டும். வகுப்பறையில் உள்ள ஒவ்வொருவரும் தமது சொந்தப் பிள்ளைகள் என்ற மனநிலையில் ஆசிரியர் கடமையாற்றுவது அவசியமானதாகும். இதற்காக ஆசிரியர் ஒருவர், பெற்றோர் ஆகவும் மூத்தோர் ஆகவும் தொழிற்படவேண்டியது இன்றியமையாததாகும். மாணவர்களின் உளவியல் மற்றும் பல்வேறு தேவைகளை அறிந்து பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பும் சிறந்த ஆசிரியருக்கு உண்டு. சிறந்த ஆசிரியர் மாணவர்களுக்கு உதவும்போது களைப்படையமாட்டார் என்பதும் பரவலாகப் பேசப்படும் ஒரு விடயமாகும்.

4. **மாணவர் அபிவிருத்தி**

மாணவரின் வளர்ச்சிக்கு ஏற்ப ஆசிரியரின் விருத்தியும் ஏற்படவேண்டும். பாடவிதானம், இணைப் பாடவிதானம் ஆகிய இரண்டிலும் மாணவர் விருப்புடன் ஈடுபட ஆசிரியர் வழிகாட்டுதல் அவசியமாகும். மாணவர்களின் பலம், பலவீனம் என்பதனை அறிந்து அதற்கான பரிகாரச் செயற்பாடுகளில் ஆசிரியர் ஈடுபடவேண்டியது முக்கிய கடமையாகும். தனியாள் வேறுபாடு காரணமாக ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு திறன்கள் மறைந்துபோய் இருக்கும். பொருத்தமான வேளையில் இவற்றை இனங்கண்டு மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஆசிரியர் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

விசேடமாக மாணவர் தொடர்பாக எந்தவிடயத்திலும் "வகை சொல்லும் பொறுப்பு" தமக்கு உரியது என்பதனை ஒவ்வொரு ஆசிரியர் களும் கருத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

5. **சிறந்த உறவுமுறை பேணல்**

மாணவர்கள் ஆசிரியரை நேசிக்கவேண்டும் என்பதும் கனம்பண்ண வேண்டும் என்பதும் முக்கியமானதாகும். இதனைப்போல் ஆசிரியரும் மாணவர்களை வெளிப்படையாக அதிகம் நேசிக்கவேண்டியதும் சிறப்புமிக்கதாகும். சம்பளத்திற்காக அன்றி மாணவனின் எதிர்காலம், நலன் என்பனவற்றிற்காக தமது சேவைகளை ஆசிரியர்கள் வழங்க வேண்டும் என்பதும் முக்கிய எதிர்பார்ப்பாகும். மாணவருக்கு ஏதும் இடர் ஏற்படின் முன்னின்று உதவுபவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். மாணவர்-அதிபர் ஆகியோருக்கிடையே ஓர் இணைப்பாளராகவும், தொழிற்பட வேண்டிய தேவை ஆசிரியருக்குண்டு. மேலும் எப்பொழுதும் மாணவர்களின் அனைத்து விடயங்களிலும் நேர்மையாக செயலாற்ற வேண்டியதும் ஆசிரியரின் முக்கிய கடமையாகும்

6. **இரகசியம் பேணல்**

சம காலத்தில் விருப்பு, வெறுப்பு, மனவெழுச்சி மற்றும் சமுகமயமாதல் போன்ற பல பிரச்சினைகள் மாணவர்களுக்கு ஏற்படுவதற்கு வாயப்புள்ளது. இதனை இவர்கள் மிகவும் நம்பிக்கைக்குரிய ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொள்வதன் மூலம் மன அமைதி அடைவதற்கு எதிர்பார்ப்பர். இவ்வேளையில் ஆசிரியர் இவற்றை அக்கறையுடன் கேட்டு பொருத்தமான ஆலோசனைகளை முன்வைப்பது மட்டுமல்லாமல் இவை தொடர்பாக இரகசியம் பேணுவதும் மிக முக்கியமானதாகும். மாணவர்களது தனிப்பட்ட அல்லது அந்தரங்க விடயங்களை சக ஆசிரியர்களிடமோ அல்லது அதிபரிடமோ கூறுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக கட்டிளமைப் பருவ மாணவர்களின் விடயங்களை ஆசிரியர் மிக்க அவதானத்துடன் கையாளுதல் சிறப்புமிக்கது. முக்கியமாக கட்டிளமைப் பருவ மாணவர்களின் இயல்புகள், தேவைகள் தொடர்பாகவும் ஒவ்வொரு ஆசிரியர்களும் அறிந்திருக்க வேண்டியதும் அவசியமானதாகும்.

7. **ஏனைய ஆசிரியர்களை மதித்தல்**

மாணவரது முழுமையான வெற்றி ஆசிரியர்களின் கூட்டு முயற்சியிலே தங்கியுள்ளது. இதன் காரணமாக ஆசிரியர்களிடையே புரிந்துணர்வு, குழு ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு என்பன அவசியமானவையாகும். ஒவ்வொரு ஆசிரியர்களும் தம்மைப்போல் ஏனைய ஆசிரியர்களையும் மதிக்க வேண்டும். அனுபவம் குறைந்த ஆசிரியர்கள் சிரேஷ்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோரை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுபோல் சிரேஷ்ட ஆசிரியர்கள் இளம் ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக நடப்பதோடு அவர்களை ஊக்கப்படுத்தி பாடசாலையில் பல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் அவசியமாகும். அத்துடன் பாடசாலையில் நடைபெறும் எந்தவொரு செயற்பாடும் “மாணவர்களின் நன்மைக்காகவே” என்பதனைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆசிரியர் களிடையே அரசியல், சமய மற்றும் கலாசார வேறுபாடுகள் இருப்பதும் ஏனைய ஆசிரியர்களை விமர்சிப்பது மற்றும் குறை காண்பது போன்றவை யும் தவிர்க்கப்பட வேண்டியவை. தமது நிறுவனத்தின் வெற்றியே அந் நிறுவனத்திலுள்ள அனைவரினதும் பொது நோக்காக இருக்கவேண்டும்.

8. **மாணவர்களின் மதிப்பீட்டுத் தராதரம்**

வகுப்பறைக்குச் செல்லுகின்ற ஆசிரியர் ஒருவரின் நோக்கம் நிறைவேறி யுள்ளதா? என்பதனை அறிவதற்கு மதிப்பீடு அவசியமாகும். இதனால் மதிப்பீடு பொருத்தமானதாகவும் தராதரம் உடையதாகவும் இருத்தல் வேண்டும். எதனை? எப்படி? எப்போது? மதிப்பீடு செய்வது என்பதில் மிகவும் சிறப்பான திட்டம் ஆசிரியரிடம் இருத்க வேண்டியதும் பக்கம் சாராமல் மதிப்பீடு செய்வதும் முக்கிய கடமையாகும். அத்துடன் மதிப் பீட்டினை அடிப்படையாகக் கொண்டு பின்னூட்டல், மற்றும் ஆலோசனை களை மேற்கொள்ளவேண்டியதும் முக்கியமாகும்.

9. **பாடசாலையைக் கனம் பண்ணல்**

ஒவ்வொரு பாடசாலைகளும் ஒவ்வொரு பாரம்பரியம் கொண்டதாக இருக்கும். இப் பாரம்பரியம் நீண்ட காலமாக கட்டிக் காக்கப்பட்டும் வந்திருக்கும். அப்பாடசாலையில் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு

ஆசிரியர்களும் இப்பாரம்பரியங்களை கனம் பண்ணுதல் அவசியமாகும். பாடசாலைக் கொடி, பாடசாலைக் கீதம், பாடசாலைச் சமூகம் என்பனவற்றை ஒவ்வொரு ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டு கனம் பண்ணுதலும் சிறந்த பண்பாகும். தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடுக்காது பாடசாலை பாரம்பரியத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வதும் சிறந்த ஒழுக்கமாகும். தமது அணுகுமுறை, உடை, நடை, பேச்சு என்பன பாடசாலை பாரம்பரியத்தோடு இணைந்ததாக அமைந்திருப்பதும் சிறப்பானதாகும்.

முடிவுரை :

ஒரு பாடசாலையின் சிறப்பு அங்கு கடமையாற்றும் ஆசிரியர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. நல்ல ஆசிரியர் குழாம் பாடசாலையில் இருக்குமாயின் அங்கு நல்ல கவின்நிலை உருவாகி கற்றல் பேறுகள் மேலோங்கி காணப்படும். அதேவேளை அப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களிடையே சிறந்த உயர் பண்பும் தனித்துவமும் காணப்பட வாய்ப்பு அதிகமாகவுள்ளது. இதனால் ஆசிரியர் ஒருவர் தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு அப்பால் சென்று தியாக உணர்வுடன் சேவையாற்ற வேண்டியவராகின்றார். கல்வியின் இலக்குகளை நிறைவாக அடைவதற்காகவும், மாணவரிடையே சிறந்த ஒழுக்கம் மற்றும் உடன்பாடான மனப்பாங்குகளை நிலைநாட்டுவதற்காகவும் ஒவ்வொரு ஆசிரியர்களும் "கற்பித்தல் ஒழுக்கத்தை" பின்பற்றி நடக்கவேண்டியது அவசியமாகின்றது. இதன்மூலம் ஒவ்வொரு ஆசிரியர்களும் இறைவனுக்கு சேவை செய்வதோடு மாணவர்களின் மனங்களில் என்றும் வாழ்வதுடன் பாடசாலையின் வரலாற்றிலும் அவர் என்றும் போற்றப்படுவார்.

> உலகில் உண்மையான அமைதியை ஏற்படுத்த
> வேண்டுமாயின் நாங்கள் ஒழுக்கக் கல்வியை
> மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.
> - மகாத்மாகாந்தி

3. வெற்றிகரமான ஆசிரியரின் பண்புகள்

அறிமுகம் :

உலகிலுள்ள தொழில்களிலே மிகவும் உன்னதமானதும், புனிதமானதுமாக ஆசிரியர் தொழில் போற்றப்படுகின்றது. இது சமூகத்தால் கௌரவமாக மதிக்கப்படும் சிறப்புமிக்க சேவையுமாகும். முக்கியமாக மாணவர்கள் தாம் தொடர்பு கொள்ளும் நபர்களில் அவர்களின் மனதைக் கவர்ந்த முதன்மையானவர்களாக ஆசிரியரே கருதப்படுகின்றார்.

பாடசாலை முறைமையில் மாணவர்களுக்கு அடுத்தபடியாக ஆசிரியர்களே மிகமுக்கிய மனிதவளத் தொகுதியாகவும் காணப்படுகின்றனர். "வகுப்பறை ஒரு பாடசாலையின் மையநிலை வகிக்கின்றது. இங்கு மாணவர்களும் ஆசிரியர்களுமே முதன்மையான பங்காளிகளாவார்" என முதலாவது தேசியக்கல்வி ஆணைக்குழு அறிக்கை (1992)சுட்டிக் காட்டுகின்றது.

உலகிலே தலைசிறந்த பத்துப் பேரிடம் "உங்களின் தற்போதைய நிலமைக்கு காரணம் யார்?" என வினவப்பட்டபோது அவர்களின் எட்டுப்பேர் "தமது ஆசிரியர்" என விடையளித்திருந்தனர். இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் "21ம் நூற்றாண்டின் ஆசிரியர்கள், மாணவர்களின் ஆற்றலை கட்டியெழுப்புவதற்கான கருவி" எனக் குறிப்பிடுகின்றார் மாவீரன் அலெக்சாண்டரிடம் உங்கள் வெற்றிக்கு காரணமாக இருந்தவர்கள் யார்? என வினவப்பட்டபோது

"நான் இந்த உலகிற்கு வந்தமைக்கு காரணம் என் பெற்றோர்கள் இந்த உலகம் என்னிடம் வந்தமைக்கு காரணம் என் ஆசிரியர் அரிஸ்டோட்டிஸ்" எனப் பதிலளித்தார்.

இலவசக் கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கரா அவர்கள் "பிள்ளை விருத்தியில் ஆசிரியரின் ஆளுமை கொண்டிருக்கும் வகிபங்கு குறித்து ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். மேலும்"கல்வியூட்டுவதில் பிள்ளை மீது ஆசிரியர் கொண்டிருக்கும் செல்வாக்கு அவரது அறிவின் பாற்பட்டதல்ல, மாறாக அவரது தனித்துவம், அவரது விழுமியங்களில் தங்கியுள்ளது" எனவும் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு சமூகத்திலே ஆசிரியர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ஆசிரியர்களை தெய்வத்திற்கு சமமாகப் போற்றப்படுகின்ற நிலமையும் இந்து தருமத்தில் காணப்படுகின்றது. மாணவர்கள் ஆசிரியர்களின் பாதங்களில் விழுந்து வணங்குகின்ற சம்பிரதாயங்களும் அவதானிக்கப்படுகின்றன. இத்தகைய பெருமைக்குரிய ஆசிரியர்கள் தம் பணியின் மகிமை உணர்ந்து தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டியது முக்கியமானதாகும். எதிர்காலச் சந்ததியினராகிய மாணவர்களை பெருமைக்குரியவராக உருவாக்குவதற்கான சக்தி ஆசிரியர் ஒருவரிடமே உள்ளது. தமது அறியாமை, பலவீனம், கவலையீனம், அலட்சியப்போக்கு என்பனவெல்லாம் ஒரு சமூகத்தை அழித்துவிடும் என்பதனையும் ஆசிரியர் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தம் குடும்பம், உறவு, தனிப்பட்ட விருப்பு - வெறுப்பு, தேவைகள், உடல் கஸ்ரம் இவற்றிற்கு அப்பால் தமது கடமையை செவ்வனே செய்ய வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்குண்டு. ஆசிரியர் ஒருவர் விரும்பியோ அல்லது விரும்பாமலோ மற்றும் இதன் பொறுப்பு கருதாமலோ இச் சேவைக்கு வந்திருக்கலாம். இருப்பினும் இதனை ஏற்றுக்கொண்ட பின்னர் இதனை ஒரு அர்ப்பணிப்புள்ள சேவையாகவே கருதவேண்டும். ஆசிரியர் ஒருவர் பல வருடங்களுக்கு முன்னரான தமது பாடசாலைக்காலத்தை அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டும். தாம் அக்காலத்தில் எத்தகைய மாணவராக இருந்தோம் என்பதனையும், தமது தற்போதைய உயர் நிலைமைக்கு தமக்கு கற்பித்த நல் ஆசிரியர்களே காரணம் என்பதனையும் மறக்கலாகாது.

ஆசிரியர் தமது அறிவு, ஆற்றல், நுட்பம், மனப்பாங்கு இவற்றை எல்லாம் மாற்றியமைத்து நவீன யுகத்தின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப

மாணவர்களை வழிநடாத்த வேண்டிய பொறுப்பு மிக்கவராவார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு வெற்றிகரமான ஆசிரியர் ஒருவரின் பண்புகள் எவ்வாறு அமைய வேண்டும்? அவரது பொறுப்புமிக்க சிறப்பான கடமைகள் என்ன? கல்விச் சமூகம் எத்தகைய விடயங்களை தற்கால ஆசிரியரிடம் எதிர்பார்க்கின்றது? போன்ற வினாக்களுக்கு விடை காண்பதே இவ் ஆக்கத்தின் பிரதான பணியாகும்.

வெற்றிகரமான ஆசிரியரின் பண்புகள்

பேராசிரியர் Robert J. Walker என்பவரால் 2008 ஆம் ஆண்டு அமெரிக்காவின் அலபாமா பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஆய்வில் வெற்றிகரமான ஆசிரியருக்கு இருக்கவேண்டிய பன்னிரெண்டு பண்புகள் இனங்காணப்பட்டுள்ளன.

1. **பாட ஆயத்தத்துடன் வகுப்பறைக்குச் செல்லல்**

   “திட்டமிடல்” முகாமைத்துவத்தின் முக்கிய ஒரு பகுதியாகும். பாடத்தைத் திட்டமிட்டு வகுப்பறைக்குச் செல்கின்ற ஆசிரியர் ஒருவரால் வெற்றிகரமான கற்பித்தலை மேற்கொண்டு தனது நோக்கத்தை நிறைவு செய்ய முடியும். அத்துடன் வகுப்பறை முகாமை சிறப்பாக அமைவதோடு மாணவர்களுக்கு பாடவிடயத்தில் சரியான எண்ணக் கருவாக்கத்தையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. மேலும் மாணவர்கள் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவதற்கும் கணிப்பீட்டு - மதிப்பீட்டு செய்முறைகள் உயர்ந்த மட்டத்தில் அமைவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

2. **மாணவர் தொடர்பாகவும், கற்பித்தல் தொடர்பாகவும் உடன்பாடான மனப்பாங்கை பேணல்**

   அனைத்துச் செயற்பாட்டினதும் வெற்றிக்கு அடிப்படை யாக அமைவது ஆசிரியரின் உடன்பாடான மனப்பாங்காகும். ஒவ்வொரு மாணவர்களி டமும் பல்வேறு விதமான திறன்கள் உள்ளன என்பதனையும் தமது கற்பித்தல் சேவையானது மாணவர்களின் எதிர்கால வாழ்வுடனும் தொடர்புபட்டது என்பதனையும் ஆசிரியர் எப்பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டியது முக்கியமாகும். மாணவர்களின் பின்னடைவுகள்,

கவலையீனம், ஆர்வமின்மை என்பனவெல்லாம் தற்காலிகமானவை என்பதனையும் தாம் மனம் வைத்தால் இவற்றை விரைவாக மாற்றியமைக்க முடியும் என்பதனையும் ஒவ்வொரு ஆசிரியர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும் வகுப்பறைச் செயற்பாட்டிற்கு மேலதிகமாக மாணவர்களின் ஒழுக்கம், ஆளுமை, சமுகமயமாதல், உடன்பாடான மனப்பாங்கு என்பனவற்றின் மேம்பாட்டிற்கும் வழிகாட்டுதலும் முக்கியமானதாகும்.

3. **மாணவர் தொடர்பாக உயர்வான எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல்**

ஒவ்வொரு மாணவர்களும் நாட்டின் வளம் என்பதனையும் எதிர்காலத் தலைவர்கள் என்பதனையும் கருத்தில் கொண்டு சமகால தேவைக்கேற்ப மாணவர் உயர்ந்த பெறுபேற்றை அடைவதற்கான வழிகாட்டல்களை மேற்கொள்ளவேண்டும். தமது அர்ப்பணிப்புள்ள சேவையானது மாணவர்களின் எதிர்கால வாழ்வில் பெரும் செல்வாக்கு செலுத்து கின்றது என்பதனைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். இதற்காக வகுப்பறையிலுள்ள அனைத்து மாணவர்களையும் தமது நிலையிருந்து மேல்நிலைக்கு கொண்டுவரு வதற்கான உபாயங்களை கண்டறிந்து நடைமுறைப்படுத்த வேண்டியது ஆசிரியரின் சிறப்புமிக்க கடமையாகும்.

4. **புத்தாக்க செயற்பாடுகளை மேற்கொள்ளல்**

இன்றைய நவீன யுகத்தில் மாணவர்களின் சிந்தனை மற்றும் ஆக்கத்திறன் என்பன அபாரமானவை. இதனால் மாணவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப பாடவிதானம், இணைப்பாட விதானம் என்பனவற்றில் புத்தாக் கத்தைப் பயன்படுத்துதல், வகுப்பறையில் நவீன தொழினுட்ப சாதனை களை பயன்படுத்தல், பொருத்தமான கற்பித்தல் முறைகள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தல் என்பனவும் முக்கியமானவை. புதிய கண்டுபிடிப்புக்கள் நவீன செயற்றிட்டம் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றில் ஆசிரியர்தானும் ஈடுபடுவதோடு தமது வழிகாட்டல்களுடன் மாணவரைப் பங்குபெறச் செய்வதும் அவசியமாகும்.

5. **சமத்துவம் பேணல்**

ஒரு வகுப்பறையில் பல்வேறுபட்ட இயல்புகள், தேவைகளைக் கொண்ட மாணவர்கள் இருப்பார்கள். குறிப்பாக விசேட தேவையுடைய மாணவர்கள் உட்பட அனைவரையும் சமமாக மதித்து, பொருத்தமான கற்பித்தலை நடாத்துதல் வேண்டும். கற்பித்தல் முறைகள், கற்பித்தல் உபகரணம் , கணிப்பீடு-மதிப்பீடு என்பனவற்றைத் திட்டமிடும்போது விசேட தேவையுடைய மாணவர்களையும் கருத்தில் கொள்வது அவசிய மானதாகும். அத்துடன் பாடசாலையில் நடைபெறுகின்ற அனைத்து விடயங்களிலும் எல்லா மாணவர்களுக்கும் சமசந்தர்ப்பங்களையும் வாய்ப்பையும் வழங்க வேண்டியதும் அவசியமாகும். குறித்த ஒரு மாணவர் மீது அதிக அக்கறை கொள்ளுதல் அல்லது முன்னுரிமை வழங்குதல் போன்றவை முற்றாகத் தவிர்க்கப்படுவது சிறந்த பண்பாகும்.

6. **தனிப்பட்ட தொடர்பைப் பேணல்**

மாணவர்கள் ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட ரீதியில் சிறப்பான உறவுகளைப் பேணுவதன் மூலம் ஆசிரியர்-மாணவர் தொடர்பை உச்சமட்டத்தில் வைத்திருக்க முடியும். இதன் மூலம் மாணவர்களுக்கு பாடத்தில் ஆர்வம் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். மேலும் மாணவர்களது கஷ்டங்கள், பிரச்சினைகள் தொடர்பாக அக்கறையுடன் கலந்துரையாடி பொருத்தமான தீர்வுகளை முன்வைத்தலும் சிறந்த ஓர் ஆசிரியரின் கடமையாகும். விளையாட்டு, சிரமதானம், சுற்றுலா போன்றவற்றில் மாணவர்களுடன் ஒன்று சேர்ந்து ஈடுபடுவதும் சிறந்த தொடர்பை பேணுவதற்கு வழிவகுக்கும். மேலும் இத்தகைய செயற்பாடுகளால் மாணவர் அதிகம் மகிழ்ச்சியடைவர். தேவை ஏற்படும்போது மாணவரின் வீட்டிற்கு விஜயம் செய்வதும், பெற்றார் களுடன் அடிக்கடி கலந்துரையாடுவதும் சிறந்த நடைமுறைகளாகும்.

7. **உடன் இருக்கும் உணர்வை வளர்த்தல்**

தமது ஆசிரியர் எப்பொழுதும் தன்னுடன் இருப்பதாகவும், தன்னை நேசிப்பதாகவும் தனது அனைத்து விடயங்களிலும் அக்கறை கொள் வதாகவும் மாணவர்கள் நினைத்துத் திருப்தி அடைய வாய்ப்புகளை வழங்குவது முக்கியமாகும். இவ்வாறான உணர்வு மாணவர்களுக்கு ஏற்படுத்துமாறு ஆசிரியர் நடந்து கொள்ளுவதும் காலத்தின் தேவை

யாகும். தமது நலனில் கூடிய அக்கறை கொண்ட நபர் எமது ஆசிரியரே என மாணவர் நினைத்து பெருமை கொள்ள வேண்டும்.

8. **கருணை காட்டுதல்**

எல்லா மாணவர்களிலும் கருணை காட்டுதலும், தேவையான நேரத்தில் வேண்டிய உதவிகளை மேற்கொள்ளுதலும், மாணவர்களின் நலன், உணவு, உடை மற்றும் பாதுகாப்பு என்பனவற்றில் கவனம் செலுத்துவதும் சிறப்பான பண்பாகும்.

9. **நகைச்சுவை உணர்வைப் பேணல்**

மாணவர்களின் கவலையை போக்கும் வண்ணம் வேண்டிய நேரத்தில் நகைச்சுவை உணர்வைப் ஏற்படுத்த வேண்டியதும் முக்கியமாகும். வகுப்பறையை மகிழ்ச்சிகரமாக வைத்திருப்பதற்கான உத்திகளைக் கையாண்டு ஆசிரியர், தமது முகத்தை கோபமாகவோ அல்லது விகாரமாகவோ வைத்திருக்காமல் சிரித்த முகத்துடன் வகுப்பறையில் கருமமாற்றுவது அவசியமாகும். தமது ஆசிரியரின் சிரித்த முகமே மாணவரின் முக்கிய எதிர்பார்ப்பாகும். குறிப்பாக பாடப்பிரவேசத்தை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

10. **மாணவர்களுக்கு மதிப்பளித்தல்**

மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஆசிரியர் உயர்வாக மதிப்பதன் மூலம் அவர்களிடமிருந்தும் உயர்வான மதிப்பைப் பெறமுடியும். இதனுடாக மாணவர்களின் கணிப்புத் தேவை நிறைவேற்றப்படுகின்றது. மாணவர்களின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மதிப்பளிப்பதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்த முடியும். தமது ஆசிரியர் தன்னையும் ஒருவராக நினைக்கின்றார் என்பனை மாணவர் உணரும் போது அவர்கள் அடையும் மகிழ்ச்சி அளவிட முடியாதது ஆகும். வகுப்பறை யில் மதிப்பீட்டு வேளையின் போது ஆசிரியர் வழங்குகின்ற Good, Very Good போன்ற வாசகங்களே மாணவர்கள் எதிர்பார்க்கும் மிகப் பெரிய வெகுமதிகளாகும். இவ் வாசகங்களை பொருத்தமான வேளை களிலெல்லாம் பயன்படுத்தும் போது பாடத்தில் மாணவர் கூடிய ஈடுபாட்டைக் காட்டுவர். இதன் மூலம் அவர்கள் பாடத்தில் விருப்பம் கொள்வதற்கும் அவர்களின் தேர்ச்சி அதிகரிப்பதற்கும் அதிக வாய்ப்புக் கிடைக்கும்.

11. **மாணவர்களை மன்னித்தல்**

மாணவர்களின் வயது, முதிர்ச்சி என்பனவற்றைக் கருத்தில் கொண்டு அவர்கள் தெரிந்தோ அல்லது தெரியாமலோ செய்யும் தவறுகளுக்கு மன்னிப்பு வழங்குவது சிறந்த மனித நேயமாகும். அத்துடன் அவர்கள் விடும் பிழைகளை மனதில் வைத்திருப்பதனையும் விமர்சனம் செய்வ தனையும் தவிர்த்துக் கொள்ளவது முக்கியமானதாகும். பொருத்தான நேரத்தில் ஆலோசனைகளை வழங்கி அவர்களின் தவறுகளை இழிவளவாக்கிக் கொள்ளலாம்.

12. **தவறுகளை ஒப்புக்கொள்ளல்**

மாணவர்கள் தாம் தவறு செய்து விடுவோம் என்ற பயத்தினால் அநேகமான செயற்பாடுகளில் ஈடுபடுவதனை தவிர்த்து வருகின்றனர். தாம் தவறு செய்தால் தமது ஆசிரியர் பேசிவிடுவார் என்றும் தமது நண்பர்கள் சிரித்துவிடுவார்கள் என்றும் அவர்கள் முன்வருவதற்கு அஞ்சுகின்றனர். அவர்களது தவறுகளை ஆசிரியர் ஏற்றுக்கொள்ளும் போது தைரியத்துடன் எந்தச் செயற்பாட்டிலும் ஈடுபட வாய்ப்பு ஏற்படும்.

இங்கு கருதப்பட்ட பன்னிரெண்டு பண்புகளும் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிக ஒரு மனிதனிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்புகளைக் கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. இவ் ஆக்கத்தில் அறிமுகத்தில் கருதப்பட்ட இலவசக்கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கராவின் சிந்தனையான “கல்வியூட்டுவதில் பிள்ளைமீது ஆசிரியர் கொண்டிருக்கும் செல்வாக்கு அவரது அறிவின் பாற்பட்டதல்ல மாறாக அவரது தனித்துவம் அவரது விழுமியங்களில் தங்கியுள்ளது” எனும் கருத்தை இவ் விடயங்களும் முழுமையாக அங்கிகரிப்பதாக அமைந் திருப்பது சிறப்பம்சமாகும்.

சிறந்த ஆசிரியராக உருவாவதற்கான உபாயங்கள்

எமது நாட்டில் ஆசிரியர் நியமனம் பல்வேறு வழிகளில் நடைபெற்று வருகின்றது. புதிதாக நியமனம் பெறுகின்றவர்களில் அதிகமானவர்கள் கற்றல் – கற்பித்தலுடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்களை புரியாதவர் களாகவே வகுப்பறைக்குள் நுழைகின்றனர். கல்வி உளவியல், கல்வித்

தொழினுட்பம், கணிப்பீடு-மதிப்பீடு மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்ற பல்வேறு வாண்மைத்துவ விடயங்களில் இவர்களுக்கு போதிய தெளிவு இல்லாதிருப்பது பெரும் குறைபாடாகும். இவர்கள் பல்வேறு வழிகளினூடாக தமது தொழில்வாண்மையை விருத்தி செய்வது அவசியமானதாகும். ஆசிரியர் வாண்மைத்துவ நிலையங்கள், ஆசிரியர் கலாசாலை, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பனவற்றினூடாக ஆசிரியர் தொழில்சார் விருத்தியை பெற அதிகவாய்ப்புள்ளது. எத்தகைய பயிற்சிகள், செயலமர்வுகள் பாடநெறிகள் நடாத்தப்பட்டாலும் ஆசிரியர் ஒருவர் தமது தொழிலின் மகத்துவம் உணர்ந்து பொருத்தமானதும் தேவையானதும் விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என விரும்பினால் மாத்திரமே எத்தகைய மாற்றமும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. பலாத்காரமாகவோ அல்லது அழுத்தம் காரணமாகவோ இதனை எற்படுத்த முடியாது.

லாகூர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் Dr. A. R. சலிமி என்பவரின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஆசிரியர் சிறந்தவொரு ஆசிரியராக உருவாவதற்கான முக்கிய உபாயங்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

- மாணவரினதும் அவர்களது கற்றலிலும் உறுதியளிப்பவராக இருத்தல்.
- தான் பாடத்தில் எப்பகுதியை கற்பிக்க வேண்டும் எப்படி கற்பிக்க வேண்டும் என்பவை பற்றி தெளிவு.
- மாணவர்களின் கற்றலை முகாமை செய்வதிலும் மேற்பார்வை செய்வதிலும் பொறுப்புள்ளவராக இருத்தல்.
- மாணவர்களினது கற்றலிலும் பயிற்சிகளிலும் பொருத்தமான ஒழுங்கமைப்பை பேணுதல்.
- தினசரி கற்கின்றன கற்றலில் வாழ்நாள் மாணவராக இருத்தல்.
- மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கேற்ப தமது கற்பித்தலை இயைபாக்கம் செய்தல்.
- மாணவர்களின் கற்றல், விருத்தி என்பன தொடர்பான பூரண விளக்கத்தை கொண்டிருத்தல்.
- அனைத்து மாணவர்களையும் சமமாக மதித்தல்.

- மாணவர்களின் இலட்சியத்திற்கு அமைவாக பொருத்தமான கற்பித்தலையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ளல்.
- பாடத்தில் மாணவர்கள் கொண்டுள்ள அடைவுமட்டத்தை அறிந்து மேலும் இதனை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்பையும் வழிகாட்டல் களையும் மேற்கொள்ளல்.
- தமது பாடத்தில் உயர்ந்த புலமை கொண்டிருப்பதோடு அதனை பொருத்தமான முறைகளில் மாணவருக்கு வழங்குதல்.
- கற்பித்தலின்போது குழுவேலைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- கற்பித்தலின்போது பொருத்தமான வேளைகளில் மாணவர்களை உற்சாகப்படுத்தல்.
- மாணவர்களின் முன்னேற்றத்தை ஒழுங்காக மதிப்பீடு செய்தல்.
- மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருவதன் அடிப்படை நோக்கம் பற்றி எப்பொழுதும் மனதில் வைத்திருத்தல்.
- மாணவர்களின் பரீட்சை தொடர்பான இடர்பாடுகளையும் கற்றல் தொடர்பான விளக்கமின்மையும் தீர்த்து வைத்தல்.
- மாணவர்களின் பெற்றோருடன் தொடர்ச்சியாக தொடர்பைப் பேணல்.
- மாணவர்களின் செயல்திறனை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளை கல்வி ஆய்வு மூலமோ அல்லது புலமை பெற்றவர் மூலமோ தேடி அறிதல்.
- நிறுவனத்தின் விளைதிறனை அதிகரிப்பதற்காக ஏனைய ஆசிரியருடன் இணைந்து பங்களிப்பு செய்தல்.
- பிரதேசத்திலுள்ள வளவாளர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

இத்தகைய இருபது உபாயங்களையும் மனதில் கொண்டு தமது தினசரி செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளவேண்டியது முக்கிய எதிர்பார்ப்பாகும். இவைகள் கடினமான பணிகளாகத் தோன்றினாலும் தமது பொறுப்பு, கல்வியின் முக்கியத்துவம், மாணவர்களின் எதிர்காலம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு இவற்றைப் படிப்படியாக மேற்கொள் வதற்கு முயற்சி செய்வது அவசியமானதாகும்.

முடிவுரை :

பல்வேறுபட்ட சூழலில் இருந்து மனச்சுமையுடனும் புத்தகச் சுமை யுடனும் மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றனர். வறுமை, நோய், தேவைகள் நிறைவேற்றப்படாமை மற்றும் மன அழுத்தம் போன்றவை இம் மனச்சுமைக்கு காரணமாக அமைகின்றன. இதே போல் பெற்றோர்களின் கல்வித்தரம், கலாச்சாரம், குடும்பச் சூழல் என்பன மாணவர்களின் கல்வி தொடர்பான எதிரான மனப்பாங்கிற்கு காரணமாக அமைகின்றன. மாணவர்களின் மனச்சுமையைப் போக்கி உடன்பாடான மனப்பாங்கு கொண்டவர்களாக மாணவர்களை மாற்றியமைக்க வேண்டியது சிறந்த ஆசிரியரின் முக்கிய பணியாகும். இத்தகைய செயற்பாடுகளுக்கு ஆசிரியர் கொண்டுள்ள பாடப்புலமை மாத்திரம் போதுமானதல்ல. மேலதிகமாக தொழில்வாண்மை விருத்தியும் அவசியமாகின்றது. பதவி உயர்வுக்காக அல்லது சம்பள உயர்வை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் இவற்றைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் நல்லாசிரியராக அல்லது வெற்றிகரமான ஆசிரியராக மாற்றம் பெறுவதனை பிரதானமான நோக்கமாகவும் கொள்ள வேண்டும். கல்வி தொடர்பான ஆய்வுகள், நல்லாசிரியரின் அனுபவங்கள், மற்றும் இவ்வாறான கல்வியியல் தொடர்பான ஆக்கங்கள் போன்றவை “ஓர் ஆசிரியர் செல்ல வேண்டிய பொருத்தமான பாதையை” எப்பொழுதும் சரியாக காட்டிக்கொண்டிருக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

> சராசரி ஆசிரியர் கூறுகின்றார்,
> நல்லாசிரியர் விளக்குகின்றார்,
> மிக நல்ல ஆசிரியர் செய்து காட்டுகின்றார்,
> சிறப்பு மிக்க ஆசிரியர் தூண்டுகின்றார்.
> - வில்லியம் ஆதர் வோட் -

4. ஆசிரியருக்கு வேண்டிய மிக முக்கிய மென்திறன்கள்

அறிமுகம்:

தற்கால நவீன யுகத்தில் புத்தாக்க சிந்தனை கொண்ட பல மாணவர்களை பாடசாலைகளில் காணமுடியும். இவர்கள் பாடப் புத்தகத்தில் மாத்திரம் தங்கி இராமல் தகவல் தொழினுட்பத்தினூடாக மேலதிக விடயங்களை அறிந்து கெண்டு பாடசாலைக்கு வருவது மட்டுமன்றி கூடிய நேரத்தையும் இதற்காகச் செலவு செய்கின்றனர். இவர்களின் அறிவு, ஆற்றல் என்பனவும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றன. இதன் காரணமாக இவர்களுக்கு கற்பித்தலை வழிநடாத்தும் ஆசிரியர்கள் இதற்கு மேலதிகமாக பன்முக ஆற்றல் கொண்டவர்களாக இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். மிகமுக்கியமாக தாம் கற்பிக்கும் பாடத்தில் பாடப்புலமை பெற்றிருப்பது அடிப்படையானதும் கட்டாயமானதுமாகும். அத்துடன் பல்வேறுபட்ட திறன்களும் ஆசிரியர் களிடம் இருக்க வேண்டியதும் அவசியமானதாகும். ஆசிரியர்களின் கடதாசித் தகைமை மாத்திரம் வெற்றிகரமான கற்பித்தலை நடாத்துவதற்கு போதுமானதல்ல. இவர்களின் பல்வேறு திறன்களை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு கல்விப் புலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆயினும் எதிர்பார்த்த மட்டத்தை அடைந்து கொள்வதில் பல சவால்கள் காணப்படுவதாக பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இருந்த போதிலும் மற்றுமொரு முயற்சியாக ஆசிரியர்களின் பல்வேறு திறன்களை விருத்தி செய்வதில் இவ் ஆக்கம் கவனஞ் செலுத்துகின்றது.

திறன்கள்:

பொதுவாக ஒருவருக்கு மென்திறன் (Soft skill) மற்றும் வன்திறன் (Hard skill) ஆகிய இரு வகையான திறன்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கு வன்திறன் என்பது கல்வியாலோ அல்லது பயிற்சியாலோ பெற்றுக் கொள்ளக்கூடியதும் தொழினுட்ப அறிவை அடிப்படையாகக் கொண்டதுமாகும். மாறாக "மென்திறன் என்பது ஒருவரிடம் வெளிப்படும் பல்வேறுவிதமான திறமையாகும்". இதனை ஒருவரின் குணாதிசயங்கள் அல்லது உள்ளார்ந்த விவேகம் எனவும் கூறலாம். மேலும் இதனை வெற்றிகரமான செயற்பாட்டைச் செய்வதற்கு ஒரு தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய தனித்துவமான விசேட குணாதிசயங்களும் தொடர்பாடலும் எனவும் கருதலாம். அத்துடன் மென்திறன் என்பது இயற்கையாக உருவாகின்ற இயலுமையும் மனவெழுச்சி நுண்ணறிவுடன் தொடர்பு பட்டதும் ஆகும். மென்திறனை புத்தக அறிவாலோ அல்லது பட்டங்களாலோ அல்லது சான்றிதழ்களாலோ பெறமுடியாது.

Sinha (2008) என்பவரது ஆய்வில் ஒரு நிறுவனத்தின் வெற்றியில் ஊழியர்களின் மென்திறன் 75% உம் தொழினுட்பம் 25% உம் பங்களிப்பு செய்யக்கூடியது என அறியப்பட்டுள்ளது. மென்திறன் பலவகைப்படும். நேரமுகாமை, தலைமைத்துவம், நேரான மனப்பாங்கு, தொடர்பாடல், சகிப்புத் தன்மை, வேலை ஒழுக்கம், பிரச்சினை தீர்த்தல், குழுவேலை என இது நீண்ட ஒரு பட்டியலாகும். ஆயினும் இவ் ஆக்கத்தில் ஆசிரியர் களுக்கு இருக்கவேண்டிய மிகமுக்கிய பத்து மென்திறன்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றன.

ஆசிரியருக்கு வேண்டிய மிகமுக்கிய பத்து மென்திறன்கள் :

பாடசாலை என்ற முக்கிய நிறுவனத்தின் திறவு கோலாக தொழிற் படுகின்றவர்கள் ஆசிரியர்கள். தற்கால மாணவர்களை வெற்றி கொள்வதற் கும் வெற்றிகரமான கற்பித்தலை நடாத்துவதற்கும் ஆசிரியர்களுக்கு தமது பாடப்புலமைக்கு மேலாக பல்வேறு திறன்கள் அத்தியாவசியமான வையாக உள்ளன.

ஆசிரியர்களுக்கு வேண்டிய மிக முக்கியமான ஒன்றுடனொன்று தொடர்புபட்ட பத்து மென்திறன்களை Kate Lorenz (2000) என்பவர் முன் வைத்துள்ளார். அவையாவன.

- உடன்பாடான மனப்பாங்கு.
- சிறந்த தொடர்பாடல் திறன்.
- உறுதியான வேலை ஒழுக்கம்.
- நேர முகாமைத்துவ இயலுமை.
- பிரச்சினை தீர்த்தல் திறன்.
- குழுவில் ஒருவராக தொழிற்படல்.
- தன் நம்பிக்கை.
- ஏற்றுக்கொள்ளலும், விமர்சனங்களில் இருந்து கற்றுக் கொள்ளலும்.
- சகிப்புத்தன்மை.
- அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்தல்.

உடன்பாடான மனப்பாங்கு

மனிதன் தன் மனநிலைகளை மாற்றிக்கொள்வதன் மூலமாக
தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்வான் என்பதே
எனது தலைமுறையின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகும்

– வில்லியம் ஜேம்ஸ்

ஒருவர், ஒரு விடயம், ஒரு பொருள், ஒரு சம்பவம் என்பன தொடர்பாக நாம் கொண்டுள்ள எண்ணங்களின் உறுதியான தொகுப்பு மனப்பாங்கு என இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். இது உடன்பாடான மனப்பாங்கு (Positive attitude), எதிரான மனப்பாங்கு (Negative attitude) என இரண்டு வகைப்படும்.

பிறக்கும் போது எவரும் மனப்பாக்குடன் பிறப்பதில்லை. மாறாக வாழும் காலத்திலே கல்வி, சூழல் அனுபவங்கள் காரணமாக மனப்பாங்குகள் உருவாகுகின்றன. எதிலும் நல்லதையும், நிறைவையும் காண்பதே உடன் பாடான மனப்பாங்கு எனவும் மாறாக எதிலும் கெட்டதையும் குறையையும், திருப்தியின்மையும் பார்த்தல் எதிரான மனப்பாங்கு எனவும் கருதப் படுகின்றது. ஒருவரின் அனைத்துச் செயற்பாட்டிற்கும் அடிப்படை காரணமாக இருப்பது அவரின் மனப்பாங்காகும். உடன்பாடான மனப்

பாங்கு கொண்டவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் சுகதேகியாகவும் வெற்றியாளர்களாகவும் வசதி வாய்ப்புடையவர்களாகவும் முக மலர்ச்சி கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அதுமட்டுமல்ல மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்து உதவுபவராகவும் காணப்படுவர். ஹவாட் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஓர் ஆய்வில் வெற்றி பெற்றவர்களில் 85% ஆனோர் நல்ல மனப்பாங்கு கொண்டவர்களாகவும் 15% ஆனோர் உயர் கல்வித் தகைமையைக் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

ஆசிரியர்கள் கண்டிப்பாக உடன்பாடான மனப்பாங்கு கொண்டவராக இருக்க வேண்டியது அவசியமாகும். அப்போது தான் மாணவர்களும் உடன்பாடான மனப்பாங்கு கொண்டவராக இருப்பர். அனைத்து மாணவர் களையும் சமமாக மதித்தல், அவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்தல், இனிய வார்த்தை பேசுதல், ஒவ்வொருவரிலும் பல்வேறு விதமான இயலுமையைக் காணுதல், ஊக்கப்படுத்தல் , நேரம் தவறாமை,வெற்றிகரமான கற்பித்தலை நடாத்துதல், பாடசாலையில் அனைவரையும் மதித்தல், தம் தொழில்-பாடசாலை என்பனவற்றில் உயர் மதிப்பைக் கொண்டிருத்தல், விருப்புடன் கடமைகளைப் பொறுப்பெடுத்தல் பாடசாலை பாரம்பரியத்தை மதித்தல் போன்றவை ஒரு உடன்பாடான மனப்பாங்கு கொண்ட ஆசிரியரால் மட்டுமே மேற்கொள்ளக்கூடியவை. அனைத்து ஆசிரியர்களும் உடன்பாடான மனப்பாங்கு கொண்டவர்களாக மாறுவதற்கு முயல வேண்டும். இது கடினமான ஒன்றாயினும் அவசியமானதாகும். இதற்கு மெய்யானத்தில் தியானம், யோகா, வழிபாடு , சற்சங்கம் , நல்லார் தொடர்பு போன்றவை உதவும் அதே வேளை விஞ்ஞானத்தில் பயிற்சிகள், சில செய்திட்டங்கள் என்பன வழிவகுக்கும். இவ் ஆக்கத்தின் விரிவஞ்சி இச்செய்திட்ட படிமுறைகளை சேர்த்துக் கொள்ளமுடியவில்லை.

சிறந்த தொடர்பாடல் திறன்

அனைத்து மனிதர்களுக்கும் தொடர்பாடல் திறன் அவசியமானதாகும். தொடர்பாடல் குறைபாடு காரணமாகவே அநேகமான முரண்பாடுகள் ஏற்படுகின்றன. ஒருவர் ஏதோ ஒரு விடயத்தை வெளிப்படுத்தும்போது மற்றொருவர் அதனை வேறு விளக்கம் பெறுகின்ற நிலை அதிகமாக காணப்படுகின்றது.

முக்கியமாக ஆசிரியர்களிடம் எவ்வளவு திறமை இருந்தாலும், எத்தனை பட்டங்களைப் பெற்றிருந்தாலும் வகுப்பறையை உயிரோட்ட முள்ளதாக மாற்றுவதில் பெருஞ்செல்வாக்குச் செலுத்துவது அவரது தொடர்பாடல் திறனாகும். பாடத்தை திட்டமிட்டு வகுப்பறைக்குச் செல்கின்ற ஆசிரியர் ஒருவர் தான் நினைப்பதனை அல்லது தான் விளங்கிக் கொண்ட வற்றை அனைத்து மாணவர்களுக்கும் விளக்கம் பெறச்செய்வதில் அவரது வார்த்தை, வெளிப்பாடு, குரல் , தொனி, கரும்பலகை பயன்பாடு என்பன அதிக செல்வாக்கு செலுத்தக் கூடியவை. இதன் காரணமாக அசிரியர்கள் தொடர் பாடல் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

தொடர்பாடல் என்பது "குறித்த ஒரு தகவல் அல்லது பல தகவல்கள் ஒரு தனியாளினாலோ அல்லது பலரினாலோ மற்றொரு தனியாளிற்கு அல்லது பல பேரிற்கு பரிமாற்றப்படல்" ஆகும்.

Berlo (1994) என்பவர் அனுப்புனர், செய்தி, ஊடகம், பெறுநகர் ஆகிய நான்கு அம்சங்களை உள்ளடக்கிய ஓர் இயக்க உணர்வு தொடர்பாடலாகும் என்கின்றார்.

என்ன கருத்துடன் ஒரு செய்தி அனுப்பப்பட்டதோ கூடியவரை அதே கருத்துடன் அச்செய்தி பெறப்படுதல் வினைதிறன் மிக்க தொடர்பாடல் எனப்படும். இத் தொடர்பாடலானது

- எழுத்து மூலமாக - கரும்பலகை பயன்பாடு.
- வாய் மூலமாக - குரல், தொனி, தெளிவு.
- காட்சி மூலமாக - கற்பித்தல் உபகரணம். என்பனவற்றால் ஏற்படுத்தப்படலாம்.

ஆயினும் தொடர்பாடலில் பின்வரும் தடைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

தனியாள் தடைகள்

ஆசிரியர் மற்றும் மாணவர்களின் தனியாள் வேறுபாடு, உளவியல் பிரச்சினைகள், மனவெழுச்சி சமநிலையின்மை போன்றன இத்தகைய தடைகளை ஏற்படுத்தக்கூடியவை.

பௌதிகத் தடைகள்

ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலுள்ள தூரம் மற்றும் வகுப்பறை சூழல் என்பன.

சொற்பொருள் சார்ந்த தடைகள்

சொற்பொருள் சார்ந்த தடைகளாக கலாச்சாரம் மற்றும் மொழி என்பன கருதப்படுகின்றன. குறிப்பாக தமிழ் பேசுபவர்களி டையேயும் பிரதேச, மத ரீதியாக உச்சரிப்புக்கள், வெளிப்பாடுகள் என்பனவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவையும் தொடர் பாடலில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடிவை.

இத்தகைய தடைகளை குறைத்து தொடர்பாடலின் வினைதிறனை மேம்படுத்துவதற்கு ஆசிரியர் பின்வரும் உத்திகளைக் கையாள முடியும்.

- » எளிய தெளிவான மொழிப்பிரயோகம்.
- » விடயங்களை படிமுறையாக ஒப்புவித்தல்.
- » முழுக்கவனத்துடன் செவிமடுத்தல்.
- » ஒப்புவித்த விடயங்களை மீண்டும் ஒரு தடவை கூறுமாறு மாணவர்களைக் கேட்டல்.
- » முகபாவத்துடன் பேசுதல்.
- » கூடியவரை மாணவர்களுக்கு அருகில் சென்று பேசுதல்.
- » சத்தமாகவும் உயிரோட்டமாகவும் பேசுதல்.
- » முக்கியமான விடயத்தை கரும்பலகையில் எழுதிக்காட்டுதல்.
- » கரும்பலகையில் எழுதும்போது கதைக்காமல் இருத்தல்.
- » பிழை விடாமல், நேர்த்தியாக கரும்பலகையில் எழுதுதல்.
- » நவீன கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்தல்.

உறுதியான வேலை ஒழுக்கம்

எந்தவொரு நிறுவனத்திற்கும் அல்லது தொழிலுக்கும் வேலை ஒழுக்கம் என்பது அவசியமானதாகும். “சமூகம் ஏற்றுக் கொள்ளும் சரியானவற்றிற்கு எதிரான பிழையானவற்றை நீக்குதல்” ஒழுக்க நெறியாகும். ஓர் ஆசிரியர் தனது உடை, பாடசாலைக் கடமைகள், கற்பித்தல் க டமைகள், மதிப்பீட்டுக் கடமைகளில் ஒழுக்கத்தை பேணுபவராக இருத்தல் வேண்டும்.

உரிய நேரத்தில் உரிய வேலைகளை, உரிய முறையில் செய்வதும் ஒழுக்கமே. பொதுவாக வேலை ஒழுக்கம் என்பது நேர்மை, பொறுப்புக்கூறல், அர்ப்பணிப்பு, முயற்சி, சுயஊக்கம், நேர முகாமை, குழுவேலை போன்றவற்றை உள்ளடக்குகின்றது என Matthew Kerr (2019) குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர்களுக்கான ஒன்பது ஒழுக்கக் கோவைகளை Giuti (2008) என்பவர் முன் வைத்துள்ளார்.

- பாடத்தேர்ச்சி
- சிநேகபூர்வ கற்றல் – கற்பித்தல்
- உணர்வு பூர்வமான அணுகுமுறை
- மாணவர் அபிவிருத்தி
- இரட்டை உறவுமுறை பேணுவதனைத் தவிர்த்தல்
- இரகசியம் பேணல்.
- ஏனைய ஆசிரியரை மதித்தல்
- மதிப்பீட்டுத் தராதரம்
- பாடசாலையைக் கனம் பண்ணுதல்.

நேர முகாமைத்துவ இயலுமை

இன்று அனைவருக்கும் உள்ள பொதுவான பிரச்சினை “நேரம் இல்லை” என்பதாகும். அடிக்கடி “நேரமில்லை” என்ற வார்த்தையையே பலர் முணுமுணுத்துக் கொள்கின்றனர். உலகிலுள்ள அனைவருக்கும் கிடைத்துள்ள பொதுவான சொத்து 24 மணித்தியாலங்களாகும். நேரத்தை சரியாக முகாமை செய்யத் தெரியாதவர்களே “நேரமில்லை” என்ற வார்த்தைக்குச் சொந்தக்காரர்கள். பொதுவாக நேரம் இரண்டு வழிகளால் காணாமல் போகின்றது.

- ✶ அவசியமான விடயங்களில் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாமை.
- ✶ அவசியமற்ற விடயங்களில் நேரத்தை அளவுக்கதிகமாக பயன்படுத்தல்.

இவ்விரு விடயங்களையும் ஆசிரியர்கள் கவனம் செலுத்தவேண்டும். பாடத்துக்கு உரிய நேரத்தில் செல்லுதல், ஒதுக்கப்பட்ட நேரத்தை முழுமை

யாக பயன்படுத்தல், உரிய நேரத்தில் பாடத்தை முடித்தல் என்பனவற்றினூடாக நேரத்தை முகாமை செய்யமுடியும்.

பாடக்குறிப்பில் பாடப்பிரவேசம், கற்பித்தல் நடைமுறை, மதிப்பீடு, பின்னூட்டல் என்ற ஒவ்வொன்றிற்கும் நேரத்தை ஒதுக்கித் திட்டமிடும்போது வகுப்பறையில் 40 நிமிடத்தில் உயர்மட்டக் கற்பித்தலை நடாத்த முடியும். வகுப்பறையில் தேவையற்ற விடயங்களை கதைத்து அல்லது தன் புகழ்பாடி நேரத்தை செலவு செய்வதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்வதும், பாடசாலைக்குரிய மொத்த நேரம் ஆறு மணித்தியாலத்தை முடிந்த வரை மாணவர்களின் நலனுக்காக பயன்படுத்துவதும் ஓர் ஆசிரியரின் உயர்ந்த பண்புகளாகும்.

Peggy (2008) என்பவர் "எவரொருவர் நேரத்தை முகாமை செய்ய பழகிவிட்டாரோ, அவரே சிறந்த சாதனையாளராகின்றார்" என்பதோடு நேரமுகாமைத்துவம் எனும் விடயத்தில் திட்டமிடல், இலட்சியம் வகுத்தல், முன்னுரிமைப்படுத்தல், தீர்மானம் மேற்கொள்ளல், மனஅழுத்த முகாமைத்துவம், குழுவேலை, ஒழுங்குபடுத்தல் மற்றும் சமாளித்தல் போன்றவை உள்ளடக்கப்படுவதாக குறிப்பிடுகின்றார்.

பிரச்சினை தீர்த்தல்

பிரச்சினை என்பது இருப்பதற்கும் இருக்க வேண்டியதிற்கும் இடையிலான இடைவெளி ஆகும் (Peggy, 2008). ஆசிரியர் உட்பட அனைத்து தரப்பினர்களுக்கும் வேண்டிய அவசியமான உயர்திறன் பிரச்சினை தீர்த்தலாகும். உளவியலில் இது பேரறிகைசார் பரப்புக்குள் உள்ளடக்கப்படுகின்றது. வாழ்க்கை என்பது பிரச்சினைக்களம், இதனை தீர்த்துக் கொள்ளமுடியாமல் பலர் திண்டாடுகின்றனர். இதே போல் பாடசாலை என்னும் சிக்கல் நிறைந்த ஸ்தாபனத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. கற்பித்தல், முகாமைத்துவம், நலன் ஓம்புகை, வழிகாட்டல், சமூகத்தொடர்பு என இது பலவகைப்படும். ஒரு குறிக்கப்பட்ட கணத்தில் பல்வேறு பிரச்சினைகளை முகங்கொடுக்கும் போது அவற்றை தீர்த்துக் கொள்வதற்கு பல்வேறு உத்திகளை ஆசிரியர் கையாளவேண்டும். உதாரணமாக வகுப்பறையில் பாடம் நடாத்திக் கொண்டிருக்கின்ற

ஆசிரியர் ஒருவருக்கு மாணவர் கவனம் செலுத்தாமை, மாணவர் குளப்படி செய்தல் மற்றும் பக்கத்து வகுப்புக்களால் இடையூறு என பல அழுத்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வேளைகளில் ஆசிரியர் இவற்றை சாதுரியமாகத் தீர்ப்பதன் முலம் தன் நோக்கத்தை நிறைவு செய்து கொள்ள முடியும்.

பிரச்சினை தீர்த்தல் என்பது உடனடியாக கிடைத்த இலக்கை அடைதற் பொருட்டு சிந்தனையையும் நடத்தையையும் செலுத்துதலைக் குறிக்கும். John Brans ford (2005) என்பவர் பிரச்சினை தீர்ப்பதற்கான படிநிலைகளை **IDEAL** என்ற சுருக்க எழுத்தால் முன்வைத்துள்ளார்.

Identify the Problem-

பிரச்சினையை இனங்காணல்.

Define and represent the problem-

பிரச்சினையை வரையறை செய்தலும் வகைக் குறித்தலும்.

Explore possible strategies or solutions-

சாத்தியமான உபாயங்களை அல்லது தீர்வுகளை கண்டறிதல்.

Act on a selected strategy or solution-

தெரிவு செய்த உபாயம் அல்லது தீர்வின் அடிப்படையில் செயற்படல்.

Look back and evaluate the solution –

தீர்வினை மீள்நோக்கி மதிப்பிடல்.

குழுவில் ஒருவராக தொழிற்படல்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. எந்தவொரு மனிதனும் தனித்து இயங்க முடியாது. இதனால் எந்த நிறுவனத்திலும் பல தரப்பட்டவர்கள் சேர்ந்து கடமையை மேற்கொள்ள வேண்டிய தேவைகள் அதிகமாகவுள்ளன. பல்வேறுபட்ட தகைமை, இனம், மொழி, சமூக அந்தஸ்து கொண்டவர்கள் உள்ள இடங்களில் பிரச்சினைகளும் முரண்பாடுகளும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன. இதனால் நிறுவனங்களில் பல குழுக்கள் காணப்படுகின்றன. “அமுக்க குழுக்கள்” என்று அழைக்கப்படுகின்ற இக்குழுக்கள் நிறுவனத்தின் வெற்றிக்கு பெரும் சவாலாகவும் அமைந்து விடுகின்றன.

பாடசாலை என்ற நிறுவனத்திற்கும் இது பொருந்தும். ஆயினும் மாணவர்களின் எதிர்காலம், உயர்ச்சி என்பனவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆசிரியர்களும் குழு ஒற்றுமையுடன் பங்காற்ற வேண்டியது அவசியமானதாகும். தனிப்பட்ட குரோாதங்களை எல்லாம் மறந்து பாடசாலைக் குழுவின் ஒருவராக இணைந்து அனைத்து ஆசிரியர்களும் ஒருவருக்கொருவர் கடமையாற்றும் போது அப்பாடசாலை வினைதிறன் கொண்ட பாடசாலையாக மாறிவிடும். எடுத்துக்காட்டாக க.பொ.த.(சா/த) வகுப்பில் மாணவர்கள் ஒன்பது பாடத்திற்குத் தோற்றுகின்றனர். இதனால் இவ்வகுப்பில் குறைந்தது ஒன்பது ஆசிரியர்கள் சேர்ந்து பங்காற்ற வேண்டியுள்ளது. இவ் ஒன்பது ஆசிரியர்களின் ஒற்றுமை, பங்களிப்பு இருந்தால் மாத்திரமே மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் திறமைச் சித்தி பெறமுடியும். அதுமட்டுமல்ல இது மாணவர்களுக்கு முன்மாதிரியாக வும் அமையக்கூடும். இல்லையேல் அது மாணவர்களையும், பாடசாலையை யும் பாதித்துவிடும். ஒவ்வொரு ஆசிரியர்களும் பாடசாலையின் தூ ரநோக்கு, பணிக்கூற்றுக்கு அமைவாக மாணவர்களை தமது எஜமானராகக் கருதி கடமையாற்றும் போது ஆசிரியரும், பாடசாலையும் மற்றும் மாணவர்களும் பெருமை பெறுவர். இதனால் அப்பாடசாலை பிரதேசத்தில் உயர் பாடசாலையாகவும் திகழ வாய்ப்பு அதிகமாகும்.

தன் நம்பிக்கை

> ஒருவர் எந்தத்துறையில் இருந்தாலும் அவரது வாழ்க்கைத்
> தரம் தனது வேலையை சிறப்பாகச் செய்ய அவர் எந்த அளவு
> தன்நம்பிக்கை கொண்டிருக்கின்றார் என்பதை பொறுத்தது.
>
> - வின்ஸ் லொம்பார்டி

எந்தவொரு வெற்றியாளர்களுக்கும் தன் நம்பிக்கை சிறந்தவொரு அணிகலனாகும். தன்னைப் பற்றி தனது இயலுமை, மற்றும் தகைமை தொழில் தொடர்பாக எவரொருவர் உயர் நம்பிக்கை கொள்கின்றார்களோ அவர் சாதனையாளராகக் காட்சிபெறுவார். ஒவ்வொருவரும் தம்மில் பல்வேறு வகையான ஆற்றல்கள் மறைந்துள்ளன என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்பாடுகளைப் பொறுப்பேற்க வேண்டும். ஒருவனின் உணர்வுக்கும் அவரது செயல்திறனுக்கும் நேரடித்தொடர்பு இருக்கின்றது.

வகுப்பறைக்குச் செல்லுகின்ற ஆசிரியர் தன் நம்பிக்கையுடன் தைரியமாக வகுப்பை நடாத்திச் செல்லவேண்டும். பாடப்புலமையுடன் சிறப்பாக பாடத்தைத் திட்டமிட்டு, பொருத்தமான கற்பித்தல் துணையுடன் வகுப்பறைக்குச் செல்லும் போதே இது சாத்தியமானதாகும். மாணவர்கள் நேரடியாக காண்கின்ற ஒரு 'மாதிரி' (Model) ஆசிரியர் என்பதால், ஆசிரியரின் தன் நம்பிக்கை மாணவர்களையும் தன் நம்பிக்கையாளராக உருவாக்க கூடியது.

ஏற்றுக் கொள்ளலும் விமர்சனங்களில் இருந்து கற்றுக் கொள்ளலும்.

எந்தவொரு செயற்பாட்டையும் நாம் பொறுப்பேற்று வெற்றிகரமாகச் செய்யும்போது பல்வேறு விமர்சனங்கள் வருவதற்கு வாய்ப்புள்ளது. காய்த்த மரம் கல்லெறி படுவது போன்று வளர்ந்து கொண்டு செல்பவர்கள் விமர்சிக்கப்படுவார்கள். கடந்த காலத்தில் உலகில் மாபெரும் மனிதர்கள் எல்லாம் விமர்சிக்கப்பட்டிருக்கின்றார்கள். நாம் ஒரு சிறப்பான காரியத்தை மேற்கொள்ளும் போது அதனை பாராட்டுவதனைத் தவிர்த்து விமர்சனங்கள் செய்வதனையே பலர் தமது பழக்கமாகக் கொண்டுள்ளனர். இது பொறாமை காரணமாக ஏற்படக் கூடிய ஏதிரான மனப்பாங்காகும். வருகின்ற விமர்சனங்கள் நியாயமானதோ அல்லது நியாயமற்றதாகவோ இருக்கலாம். நியாயமான விமர்சனம் ஒருவரின் உயர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும். இத்தகைய விர்சனங்களை ஒரு மதிப்பு வாய்ந்த கருத்தாக எடுத்துக் கொள்வது சிறந்தது. இதேபோல் நியாயமற்ற விமர்சனம் அறியாமை, பொறாமை காரணமாக ஏற்படலாம்.

நாம் ஒன்றுமே செய்யாமல், ஒன்றுமே பேசாமல், ஒன்றுமே இல்லாமல் இருந்தால் எம்மை யாருமே விமர்சிக்க மாட்டார்கள். ஆனால் எதிர் காலத்தில் நாம் ஒன்றுமே இல்லாமலாகி விடுவோம்.

சிறப்பான கற்பித்தலை நடாத்தும் பல ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களால் விமர்சிக்கப்படக்கூடும். தமது இயலாமை, மதிப்பின்மை காரணமாக இது ஏற்படலாம். இவ்வாறான நிலையில் பொறுமையாக அதனை ஏற்றுக்கொண்டு தமது கடமையை தொடர்ந்தும் செயற்படுத்த வேண்டும். இதனால் இவ் ஆசிரியர் எப்பொழுதும் மாணவர் மத்தியில் உயர்மதிப்பை பெறுவதோடு பாடத்தில் சிறந்த அடைவையும் ஏற்படுத்திக்காட்டமுடியும்.

சகிப்புத்தன்மை

பல்வேறு அழுத்தங்கள் எம்மை நோக்கி வரும்போது அதனை ஏற்றுக் கொள்வதே சகிப்புத் தன்மை ஆகும். மனித வாழ்வில் தோல்வி, அவமானம், வறுமை, துன்பம் என்கின்ற பாரிய அழுத்தங்கள் ஒருவரை தாக்கும் போது மனம் தளராது அதனை ஏற்றுக்கொண்டு எதிர் நீச்சல் போடுவது வெற்றி யாளரின் உயர்ந்த பண்பாகும்.

ஆசிரியர்கள் பாடசாலையில் பல வயதுக் குழுவினருடன் கடமையாற்ற வேண்டியுள்ளதால் பல்வேறு அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. குறிப்பாக கட்டிளமைப் பருவ மாணவர் களுக்கு கற்பித்தல், விசேட தேவையுடைய மாணவர்களை கருத்தில் கொள்ளுதல் மற்றும் நிர்வாக ரீதியான செயற்பாட்டில் ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் பல்வேறு விதமான சவால்களைச் சந்திக்க வேண்டி வரலாம். இவ் வேளைகளில் மனம் கோணாது சகிப்புத தன்மையுடன் அவற்றை ஏற்றுக்கொள்ளுவது மிகப்பெரிய முன்மாதிரி ஆகும்.

அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்தல்.

இது விரைவாக மாறி வரும் விஞ்ஞான யுகம். இதன் காரணமாக பல்வேறு அழுத்தங்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டி வரலாம். அழுத்தங்கள் புதிய யுகத்தின் பாரிய ஆட்கொல்லி எனவும் கருப்படுகின்றது. ஒருவர் புதிய சூழலை எதிர்கொள்ளும் போது அவரது உடல், உள்ளத்தில் மாற்றம் ஏற்படுவதே அழுத்தம் எனலாம்.

அழுத்தங்களினால் இன்று உலகில் 85% ஆன மக்கள் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் இவர்களில் 60% ஆனோர் மருத்துவமனையில் உளநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர் எனவும் அழுத்தங்களைச் சரியான முறையில் கையாள முடியாமல் வருடமொன்றிற்கு 15% ஆனோர் தற்கொலை செய்கின்றனர் எனவும் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.
ஒருவருக்கு இரு வகையான அழுத்தங்கள் ஏற்படலாம்.

அக அழுத்தம்

இது உளம் சார்ந்தது மட்டுமல்ல ஆளுமையில் பல மாற்றங்களை ஏற்படுத்த கூடியது.

புற அழுத்தம்

இது பௌதிக, சமூக, சூழல் காரணிகளால் ஏற்படக்கூடியது.

பாடசாலையில் ஆசிரியர்கள் இருவகையான அழுத்தங்களையும் முகங்கொடுக்கவேண்டி இருக்கும். தனது நோய், களைப்பு, மனக்கவலை போன்ற அழுத்தங்கள் ஏற்படும்போது தமது கற்பித்தல் பணியை ஆசிரியர் முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இது கடினமானது. மட்டுமல்ல மாணவர்களால் அடையாளம் காணக்கூடியதுமாகும்.

புற அழுத்தங்களான அதிக வெப்பம், அதிக சத்தம், துர்நாற்றம் போன்றவை ஏற்படும்போது ஆசிரியர் வேறொரு இடத்தில் கற்பித்தலை மேற்கொள்ள முடியும்.

ஓர் ஆசிரியருக்கு கற்றல்-கற்பித்தல் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாட்டின் போதும் நிர்வாக ரீதியாகவும் அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடிய முக்கிய விடயங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

» வகுப்பறையில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள்.
» வளங்களின் பற்றாக்குறை
» காற்றோட்டம், வெளிச்சம் என்பனவற்றின் பற்றாக்குறை
» பிறழ்வான நடத்தையுடைய மாணவர்களைக் கையாளுதல்.
» நேர முகாமை செய்தல்
» வெளிச் சூழலால் வருகின்ற இரச்சல்
» மாணவர்களின் கவனத்தை ஈர்த்தல்.
» ஒழுக்கத்தை மேம்படுத்தல்
» நிருவாக ரீதியான மேலதிக வேலைப்பாடு.
» பாடசாலைச் சமூகத்தின் எதிர்பார்ப்பு

இத்தகைய அழுத்தங்களை முகாமை செய்யவதற்கு முயற்சி செய்ய வேண்டும். முடியாத போது அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்வதற்கு தம்மைப் பழக்கப்படுத்துவதே மேலானதாகும். இவ்வாறான நிலமைகளிலும் நமது கடமையை நாம் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

மாணவர்களின் கற்றலிலும் அழுத்தங்கள் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை. இதன் காரணமாக அழுத்தங்களில் இருந்து மாணவர்களை

விடுவிப்பதற்கான பயிற்சியை வழங்க வேண்டியதும் ஆசிரியரின் பொறுப்பாகும். புறச்சூழலால் வரும் அழுத்தங்களை தடைசெய்யமுடியாத சந்தர்ப்பங்களில் அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்வதற்கான மனோ நிலையையும் ஆசிரியர் உட்பட மாணவர் அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். இலங்கையின் தேசிய கல்வி இலக்குகளில் ஒன்றாக "எதிர்பாராத நிலமையை சமாளிக்க கூடிய ஆற்றலை வளர்த்தல்" என்பது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விடயமாகும்.

முடிவுரை :

ஒரு நாட்டின் வளமாக மாணவர்கள் கருதப்படுகின்றார்கள். இவர்களை பெறுமதி மிக்க, தகைமையுடைய தலைவர்களாக மாற்றவேண்டியது பாடசாலைகளின் பொறுப்பாகும். பாடசாலையில் இப்பணியை செய்ய வேண்டியவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்களின் மனப்பாங்கு, தனியாள் வேறுபாடுகள், தகைமை மற்றும் ஆளுமை என்பன வகுப்பறையில் செல்வாக்கு செலுத்தக் கூடியவை. இதன் காரணமாக ஆசிரியர்கள் தம்மை வளப்படுத்த வேண்டியது மிகமுக்கியமானதாகும். அத்துடன் தொழில் வாண்மைமிக்கவர்களாக மாற்றம் பெறுவதோடு, தமக்கு தேவையான மென்திறன்கள் பற்றி இனங்கண்டு அவற்றை விருத்தி செய்யவும் வேண்டும். அப்போதுதான் எமது நாட்டின் கல்வி இலக்குகள் உயர்ந்த மட்டத்தில் எய்தப்படும். மென்திறன்கள் என்பது மிகவும் விசாலமான பரப்பாகும். ஒரு சிறு ஆக்கத்தில் அனைத்தையும் விரிவாக உள்ளடக்குவது சாத்தியமற்றதாகும். ஆயினும் முடிந்தவரை அடிப்படை விளக்கத்தையாவது இவ் ஆக்கம் தரும் என்பது எழுத்தாளரின் எதிர்பார்ப்பாகும்.

> 21 ஆம் நூற்றாண்டின் ஆசிரியர்கள்
> மாணவர்களின் ஆற்றலைக்
> கட்டியெழுப்புவதற்கான கருவிகள்.
> - அப்துல் கலாம் -

5. மாணவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய நான்கு முக்கிய திறன்கள் (4C)

அறிமுகம்:

21 ஆம் நூற்றாண்டாகிய இந்த யுகமானது நவீன யுகம், தொழிநுட்ப யுகம், விந்தை யுகம் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. மிக முக்கியமாக இந்த நூற்றாண்டில் தகவல் தொழிநுட்பத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், நுட்பங்கள், கல்வி அபிவிருத்தி என்பனவும் மாற வேண்டியது தவிர்க்க முடியாததாகும். "கற்றலும் மாற்றமும் சமமாக இருக்க வேண்டும் அல்லது கற்றல் மாற்றத்தை விட மேலாக இருக்க வேண்டும்" என Reg Evans எனும் அறிஞர் குறிப்பிடுவதாக தனராஜ் (2021)அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார். ஒருவரது "பூரண விருத்தி" என்பது அறிதல்சார் விருத்தி , எழுச்சிசார் விருத்தி மற்றும் உள இயக்கசார் விருத்தி ஆகிய மூன்றிலும் ஏற்படுகின்ற நிறைவான விருத்தியாகும். இம்மூன்று விருத்திகளும் முறையே அறிவு, மனப்பாங்கு, திறன் என்பனவற்றை பிரதானமாக மையப்படுத்துகின்றன. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வி முறையானது இம்மூன்று விருத்தியிலும் சமமாக கவனம் செலுத்த வேண்டும் என உளவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர். ஆயினும் எமது நாட்டின் கல்வி முறையானது அறிதல்சார் விருத்திக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுத்து வருவது துரதிஷ்ட வசமானதாகும். இதன் காரணமாக பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து வெளியேறுகின்ற மாணவர்கள், மனப்பாங்கில் பலவீனமாகவும் திறன் குறைந்தவர்களாகவும் காணப் படுவதாக பல குற்றச்சாட்டுகள் உள்ளன. இவர்கள் அறிவை மையப்படுத்தி

கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு தமது ஞாபகசக்தி யினுடாக கற்ற விடயங்களை ஒப்புவிப்பவர்களாகவே அதிகமாக காணப்படுகின்றனர். இதன் தாக்கம் பாடசாலை உட்பட பல்வேறு தொழில் நிறுவனங்களிலும் தற்போது உணரப்படுகின்றது. 21 ஆம் நூற்றாண்டு சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய மாணவர் சமுகத்தை உருவாக்கு வதற்கு பாடசாலைக் கல்வியானது மாணவர்களின் திறன் விருத்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைய வேண்டும். இதற்கு உயிரோட்டம் கொடுப்பதற்காக ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் ஆகியோரின் திறன் விருத்தியும் அவசியமானதாகும். அத்துடன் திறன்களின் முக்கியத்துவம் பற்றிய போதிய அறிவும் ஆசிரியர்களுக்கு இன்றிய மையாதவை ஆகும். இதனூடாக கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூ டாக மாணவர்களுக்கு இத்திறன்களை விருத்தி செய்ய முடியும்.

திறன்:

"திறன்" என்பது ஆய்வாளர்களினால் வெவ்வேறு காலப்பகுதியில் பல்வேறு கோணத்தில் நோக்கப்படுகின்றது. இதனை "ஆற்றல்" எனவும் அழைக்கின்றனர். இது மென்திறன் , வன்திறன் என இரு பகுதிகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. "வன்திறன் என்பது கல்வியாலோ அல்லது பயிற்சியாலோ பெற்றுக் கொள்ளக்கூடியதும் தொழினுட்ப அறிவை அடிப்படையாகக்கொண்டதுமாகும்". மாறாக "மென்திறன் என்பது ஒருவரிடம் வெளிப்படும் பல்வேறுவிதமான திறமையாகும்". இதனை ஒருவரின் குணாதிசயங்கள் அல்லது உள்ளார்ந்த விவேகம் எனவும் கூறலாம். மேலும் இதனை," வெற்றிகரமான செயற்பாட்டைச் செய்வதற்கு ஒரு தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய தனித்துவமான விசேட குணாதிசயங்களும் தொடர்பாடலும்" எனவும் கருதலாம். இது இயற்கையாக உருவாகின்ற இயலுமையும் மனவெழுச்சி நுண்ணறிவுடன் தொடர்புபட்டதும் ஆகும். மென்திறனை புத்தக அறிவாலோ அல்லது பட்டங்களாலோ அல்லது சான்றிதழ்களாலோ பெறமுடியாது. Sinha(2008) என்பவரது ஆய்வில் ஒரு நிறுவனத்தின் வெற்றியில் ஊழியர்களின் மென்திறன் 75% உம் தொழினுட்பம் 25% உம் பங்களிப்பு செய்யக்கூடியது என அறியப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டுத் திறங்கள்:

Staffer என்ற சிந்தனையாளர் 21 ஆம் நூற்றாண்டுக்கான 12 திறன்களை அறிமுகஞ் செய்துள்ளதாக தனராஜ் (2021) அவர்கள் குறிப்பிடுகின்றார். அவையாவன விமர்சன சிந்தனை (Critical thinking),ஆக்கத்திறன் (Creativity), ஒன்றிணைந்து செயற்படல் (Collaboration), தொடர்பாடல் (Communication), தகவல் அறிவு (Information Literacy),ஊடக அறிவு (Media Literacy), தொழினுட்பவியல் அறிவு (Technoloiogy Literacy), நெகிழ்வு(Flexibility), தலைமைத்துவம் (Leader Ship), தன்முனைப்பு (Initiatiative),உற்பத்தித்திறன் (Productivity) மற்றும் சமூகத்திறன் (Social Skill) என்பனவாகும்.

இத்தகைய 12 திறன்களும் சமகாலத்தில் ஏற்பட்டுவரும் மாற்றத்திற்கான சவால்களை முகங்கொடுப்பதற்கு அவசியமானவையாகும். சமகாலத்தில் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற தொழில்நுட்பப் புரட்சி, பொருளாதாரப் பின்னடைவுகள், அரசியல் தளம்பல்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் நோய்ப் பரவல்கள் போன்ற எதிர்பாராத சவால்களை முகங் கொடுத்து வெற்றி காண்பதற்கு இத்தகைய திறன்கள் பெரும் பங்களிப்புச் செய்யக்கூடியவை. Staffer என்ற சிந்தனையாளர் குறிப்பிடும் 12 திறன்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் முதல் நான்கு திறன்களும் “C” என்ற ஆங்கில எழுத்தில் ஆரம்பிப்பதால் அவை “4C” என அழைக்கப்படுகின்றன.

4C:

Mazzola & Randles(2020) என்பவர்கள் 21 ஆம் நூற்றாண்டில் ஒருவருக்கு இருக்க வேண்டிய முக்கிய திறன்களான “4C” பற்றி அறிமுகம் செய்துள்ளனர். அவையாவன

Critical thinking- விமர்சன சிந்தனை

Creativity- ஆக்கத்திறன்

Collaboration- ஒன்றிணைந்து செயற்படல்

Communication-தொடர்பாடல்

என்பனவாகும். இவை நான்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையும் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியவையுமாகும்.

விமர்சன சிந்தனை – Critical thinking

ஒருவர் தான் அறிகின்றவற்றையோ அல்லது எந்தவொரு விடயத்தையோ மிகவும் கவனமாகவும் நுணுக்கமாகவும் ஆராய்தலே “விமர்சன சிந்தனை” ஆகும். இது “நுண்ணிய சிந்தனை” எனவும் அழைக்கப்படுகின்றது. ”விமர்சன சிந்தனை” என்பதனை Dewey (1993) என்பவர் ”எந்தவொரு நம்பிக்கையையும் அல்லது அறிவினால் பெறப்படும் எத்தகைய விடயத்தையும் மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலிப்பது எனவும் மேலும் இது, அனுமானங்களை மேற்கொள்ளல், தொகுத்தறியக்கூடிய அல்லது உய்த்தறியக்கூடிய காரணங்களைக் கண்டறிதல், நியாயித்தல், மதிப்பிடல், தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பவற்றை உள்ளடக்கி உள்ளது” எனவும் வரைவிலக்கணப் படுத்தியுள்ளார்.

Mohamed (2001) & Abdo (2003) ஆகியோர் விமர்சன சிந்தனையை நான்கு படிமுறையாக வகைப்படுத்தியுள்ளனர் அவை,

- விமர்சன சிந்தனை என்பது மதிப்பீட்டு அல்லது தீர்ப்பின் செயற்பாடு
- விமர்சன சிந்தனை மற்றும் தர்க்கரீதியான சிந்தனை என்பன கைகோர்த்துச் செல்லும் இரண்டு அம்சங்கள்.
- விமர்சன சிந்தனை என்பது பிரச்சினை தீர்க்கும் திறனாகும்.
- விமர்சன சிந்தனை என்பது ஒரு மனநல செயல்முறை.

Afaneh (1998) என்பவர் விமர்சன சிந்தனையானது “அனுமானங்களைக் கணிக்கும் திறன், விளக்கமளிக்கும் திறன், விவாதங்களை மதிப்பிடும் திறன், தொகுத்தறி திறன் மற்றும் உய்த்தறி திறன் என்பனவற்றை உள்ளடக்குகின்றது” என்கின்றார்.

விமர்சன சிந்தனைத் திறன் உடையோரால் பின்வருவனவற்றை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

» கருத்துக்களுக்கிடையிலான தர்க்கத் தொடர்புகளை அறிதல்

» வாதங்களின் கட்டமைப்பினையும் மதிப்பீட்டையும் அடையாளங் காணல்

» விளக்கங்களில் உள்ள முரண்பாடுகளையும் பொதுவான தவறுகளையும் கூர்ந்து கண்டறிதல்

- ஒருவரது சொந்த நம்பிக்கைகள் பெறுமானங்கள் பற்றிய நியாயப்படுத் தல்களை ஆழ்ந்து சிந்தித்தல்
- முடிவுகளையும் அதற்கான காரணங்களையும் அடையாளங்காணல்
- எடுகோள்களையும், பலம்- பலவீனங்களையும் அடையாளங்காணல்
- ஆதாரங்களின் வலுவை ஆராய்தல்
- விவாதத்தின் பலம் பலவீனம் பற்றி அறிதல்

ஆக்கத்திறன் – Creativity

ஆக்கத்திறன் என்பது புதுமையானவற்றை மற்றும் தனித்துவமான வற்றை படைக்கும் அல்லது உருவாக்கும் திறன் எனலாம். இது "படைப் பாற்றல்" எனவும் அழைக்கப்படுகின்றது. மக்டூக்கல் இனங்கண்ட 14 இயல்பூக்களில் ஆராய்வூக்கம், திரட்டூக்கம் என்பன அதிகமாகவுள்ளவர் களுக்கு ஆக்கத்திறன் உயர்வாக அமைய வாய்ப்புள்ளது.

Lubart (1954) என்பவர் ஆக்கத்திறன் பண்புகளை "நுண்ணறிவுத் திறன்கள், அறிவின் போக்கு, குறிப்பிட்ட விதம், மனப்பான்மை , சூழ்நிலை" என விளக்குகின்றார்.

Kampylis & Berki (2014) என்பவர்கள் "ஆக்கத்திறன் என்பது மாணவர்க ளுக்கு யோசனைகள், கேள்விகள் மற்றும் கருதுகோள்களை உருவாக்கு வதற்கும், மாற்று வழிகளைப் பரிசோதிப்பதற்கும், அவர்களின் சொந்த மற்றும் அவர்களது சகாக்களின் யோசனைகள், இறுதி தயாரிப்புகள் மற்றும் செயல்முறைகளை மதிப்பீடு செய்வதற்கும் அத்துடன் கற்பனையைப் பயன்படுத்துவதற்கும் உதவும் சிந்தனை" என வரையறுக்கின்றார்.

Guilfort (1937) என்பவரின் கருத்துப்படி "ஓர் ஆக்க சக்தி உள்ள தனிமனிதனின் பண்புகளை உருவாக்குவது ஆக்கத்திறன் ஆகும். மேலும் இது தனிமனிதர்களின் திறமைகளையும் படைப்பாற்றல்களையும் இயற்கை பண்புகளையும் உருவாக்கும்" என்கின்றார். மேலும் அறிவு சார்ந்த பண்பு களான பிரச்சினை சார்ந்த நுண்ணறிவு, சிந்தனைத்திறன், தனித்தன்மை, சிந்தனை நிகழ்ச்சி, அகக்காட்சி, தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சி என்பனவும் ஆக்கத்திறனில் உண்டு என்கின்றார். மேலும் ஆக்கத்திறன் என்பது இணங்கி நடவாமை, ஆர்வமுடைமை, தளரா நிலைப்பாடு ஆகிய மூன்று பண்புகளைக் கொண்டது என Helson (1995) என்னும் உளவியலாளர் குறிப்பிடுகின்றார்.

ஒருவரது ஆக்கத்திறனில் அவரது பரம்பரை, சூழல் மற்றும் முதிர்ச்சி என்பன செல்வாக்கு செலுத்துகின்ற போதிலும் வகுப்பறையில் ஆசிரியர்கள் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் மாணவனின் ஆக்கத்திறனை மேம்படுத்தலாம். அவையாவன

- மாணவர் மைய கற்பித்தல் அணுகுமுறையை மேற்கொள்ளல்
- குழுச் செயல்பாடுகளை மேற்கொண்டு தேடல் மற்றும் முன்வைப்புக்கு ஊக்குவித்தல்.
- இணையத்தினூடாக கற்றல் நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளித்தல்.
- கண்டறி முறை கற்பித்தலை மேற்கொள்ளல்
- நவீன கற்பித்தல் துணைச் சாதனங்களைப் பயன்படுத்தல்
- வகுப்பறையில் கருத்துச் சுதந்திரம் வழங்குதல்
- வினாக்கேட்பதற்கு மாணவர்களைத் தூண்டுதலும் வெகுமதியளித்தலும்
- கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்களையும் வசதிகளை யும் ஏற்படுத்திக் கொடுத்தல்
- இணைப்பாடவிதான செயற்பாட்டிற்கு ஊக்கமளித்தல்
- பொருத்தமான நூல்களை வாசிக்கத் துாண்டுதல்
- போட்டிகளை நடாத்துதலும் போட்டிகளில் பங்குகொள்ள ஊக்கப் படுத்தலும்
- விவாதம், சொற்போர் என்பனவற்றை வகுப்பறையிலும் பாடசாலை மட்டத்திலும் மேற்கொள்ளல்.

ஒன்றிணைந்து செயற்படல் – Collaboration

எந்தொரு நிறுவனமும் தனிமனிதனுடன் இயங்குவதில்லை. குடும்பம், பாடசாலை அல்லது நிறுவனம் எதுவானாலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அங்கு இருப்பர். இவர்கள் பல்வேறு வயது, தகைமை ,ஆற்றல், இயல்புகள், தேவைகள் கொண்டவர்களாக விளங்குவர். நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று என்பனவற்றிற்கேற்ப இலக்கை அடைவதற்கு பணியாளர்களின் ஒன்றிணைந்த செயற்பாடு அவசியமானதாகும். ஒன்றிணைந்து செயற் படுவதன் மூலம் மிகப்பெரிய செயற்பாடுகளையும் இலகுவாக மேற்கொள்ள முடியும். முக்கியமாக பாடசாலையில் அதிபர் ஆசிரியர்களின் ஒன்றிணைந்த செயற்பாடு பாடசாலையின் வெற்றிக்கு இன்றியமையாததாகும். அத்துடன்

நிறுவன கவின்நிலையும் மகிச்சிகரமானதாக அமையும். தெலர் ஆணைக்குழு(1996) குறிப்பிடுகின்ற கல்வியின் நான்கு தூண்களில் ஒன்றாகிய "ஒன்று சேர்ந்து வாழக்கற்றல்"(Learning to live together) என்பது இதற்கு பங்களிப்பை வழங்கக் கூடியது.

ஒத்துழைப்புத் திறன்கள் மற்றவர்களுடன் ஒரு பொதுவான இலக்கை நோக்கி வெற்றிகரமாக வேலை செய்ய உதவுகிறது. தெளிவாகத் பேசுவது, கவனமாகச் செவிமடுப்பது, தவறுகளுக்குப் பொறுப்பேற்பது மற்றும் சக ஊழியர்களின் பன்முகத்தன்மையை மதிப்பது ஆகியவை இதனுள் அடங்கும். ஒரு குழுவில் உள்ள ஒவ்வொரு தனியாளுக்கும் பலம் மற்றும் பலவீனங்கள், தொடர்புகள், விருப்பத்தேர்வுகள் மற்றும் தனிப்பட்ட இலக்குகள் உள்ளன. இவற்றை ஒவ்வொருவரும் மதிப்பதன் மூலம் ஒன்றிணைந்த செயற்பாடுகளை அந் நிறுவனத்தில் ஏற்படுத்த முடியும். எத்தகைய கடினமான வேலையையும் ஒன்றிணைந்து செயற்படுத்துவதன் மூலம் இலகுவாக்கிக் கொள்ள முடியும்.

தொடர்பாடல் – Communication

தொடர்பாடல் என்ற சொல் பொதுவாக "கருத்துக்களின் பகிர்வு" என்பதனைக் குறிக்கிறது. அத்துடன் "இது உண்மைகள், யோசனைகள், கருத்துகள், உணர்வுகள் அல்லது அணுகுமுறைகளின் பரிமாற்றம் மற்றும் தொடர்பு" ஆகும். தொடர்பாடல் என்பது "முகாமைத்துவத்தின் சாராம்சம் ஆகும்". முகாமைத்துவ அடிப்படைச் செயல்பாடுகளான திட்டமிடல், ஒழுங்கமைத்தல், பணியாளர்களை நியமித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செயற்படுத்த பயனுள்ள தொடர்பாடல் அவசியமாகும். நிறுவனத் தலைவர் என்ன எதிர்பார்க் கின்றார் என்பதை கீழ்நிலை அதிகாரிகளுக்கு புரிய வைப்பதற்கு தொடர்பாடல் செயல்முறை இன்றியமையாததாகும்.

பெறுநர் மற்றும் அனுப்புநர் ஆகிய இரு தரப்பினர் இல்லாமல் தொடர் பாடல் நடைபெறாது. அனுப்புநரால் அனுப்பப்படும் தகவல் பெறுநருக்கு புரியும்படி இருக்க வேண்டும்.

Koontz மற்றும் O'Donnel இன் கூற்றுப்படி, தகவல் தொடர்பு என்பது மோதலை ஏற்படுத்தினாலும் இல்லாவிட்டாலும் மற்றவரின் மனதில்

ஒரு புரிதலை உருவாக்க குறைந்தபட்சம் இரண்டு நபர்களுக்கு இடையே யான தகவல் பரிமாற்றமாக புரிந்து கொள்ளப்படலாம்.

Newman & Summer ஆகியோர் "தொடர்பாடல் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் உண்மைகள், யோசனைகள், கருத்துகள் அல்லது உணர்ச்சிகளின் பரிமாற்றம் ஆகும்" எனக் கூறுகின்றனர்.

Louis A. Allen என்பவர் "தொடர்பாடல் என்பது ஒரு நபர் மற்றவரின் மனதில் ஒரு புரிதலை உருவாக்க விரும்பும் போது செய்யும் அனைத்து செயல்களின் கூட்டுத்தொகையாகும்" என்கின்றார்.

Keith Davis என்பவர் தொடர்பாடல் என்பது "ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தகவல் மற்றும் புரிதலை கடத்தும் செயல்முறையாகும். இது அடிப்படையில் மக்களுக்கு இடையிலான அர்த்தத்தின் பாலம். இந்த அர்த்த பாலத்தைப் பயன்படுத்துவதன் மூலம், ஒரு நபர் அனைத்து மக்களையும் பிரிக்கும் தவறான புரிதல் நதியை பாதுகாப்பாக கடக்க முடியும்" என வரைவிலக்கணப்படுத்துகின்றார்.

விளைதிறன் மிக்க தொடர்பாடல் என்பது "என்ன கருத்துடன் ஒரு செய்தி அனுப்பப்பட்டதோ கூடியவரை அதே கருத்துடன் அச்செய்தி பெறப்படுதல்" ஆகும்.

தொடர்பாடலின் நோக்கங்கள்

நிர்வாகத்தில் தொடர்பாடலின் முதன்மை நோக்கம் தகவல்-அறிவுறுத் தல்கள், கொள்கைகள், நடைமுறைகள், முடிவுகள் போன்றவற்றைத் தெரிவிப்பதாகும், எனவே கேட்பவர் சொல்வதைக் கேட்பார், படிப்பார், புரிந்துகொள்வார் மற்றும் ஏற்றுக்கொள்வார், மேலும் மேலாளரின் நோக்கம் போல் செயல்படுவார். அத்துடன் வலுவான முடிவெடுக்கவும் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் தெளிவான விளம்பரத்திற்கும் ஆலோசனை வழங்கவும் கட்டளை இடவும் ஒழுக்கத்தை மேம்படுத்தவும் கல்வியூட்டவும் ஊக்கப்படுத்தவும் தொடர்பாடல் அவசியமானதாகும்.

தொடர்பாடல் அம்சங்கள்:

1. குறைந்தபட்சம் இரண்டு நபர்கள்:
   தொடர்பாடல் குறைந்தது இரண்டு நபர்களை உள்ளடக்கியது - அவர்கள், அனுப்புபவர் மற்றும் பெறுபவர்.
2. இரு வழி செயல்முறை:
   தொடர்பாடல் என்பது அடிப்படையில் இரு வழி செயல்முறையாகும். இது வெறும் செய்திகளை அனுப்புவதும் பெறுவதும் மட்டும் அல்ல. செய்தியைப் பெறுபவர் அதே அர்த்தத்தில் புரிந்து கொள்ளாத வரை அது முழுமையடையாது.
3. தொடர்பாடல் வடிவம்:
   தொடர்பாடல் ஒழுங்கு, அறிவுறுத்தல், அறிக்கை, வினவல்கள் போன்ற பல வடிவங்களை எடுக்கலாம். இது வாய்மொழி, எழுத்து, காட்சி மற்றும் சைகை ஆக இருக்கலாம். அத்துடன் இது முறையான அல்லது முறைசாராதாக இருக்கலாம்.
4. மாறும் செயல்முறை:
   அனுப்புபவர் மற்றும் பெறுநரின் மனநிலை மற்றும் சிந்தனையால் தொடர்பாடல் பாதிக்கப்படுகிறது. அனுப்புபவர் மற்றும் பெறுபவரின் புரிதலின் அளவைப் பொறுத்து இது மாறிக் கொண்டே இருக்கும்.
5. இலக்கு சார்ந்தது:
   தொடர்பாடல் என்பது இலக்கு சார்ந்தது மற்றும் அனுப்புனர் மற்றும் பெறுநரின் இலக்குகளின் ஒற்றுமை இருக்கும் போது மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.
6. சுற்றறிக்கை செயல்முறை:
   தொடர்பாடல் செயல்பாட்டில் தகவல்களின் வட்ட ஓட்டம் உள்ளது. பெறப்படும் கருத்துக்குப் பிறகு, அச்செய்தியைப் பெறுபவர் மற்றொரு செய்தியை அனுப்ப வேண்டும். பதில் தகவல் தொடர்பு வெற்றியைக் குறிக்கிறது.

தொடர்பாடல் செயல்முறையின் ஏழு முக்கிய கூறுகள்:

தொடர்பாடல் செயல்முறையை உருவாக்கும் ஏழு கூறுகள் அல்லது காரணிகள் உள்ளன. அவை முறையே அனுப்புபவர் , பெறுபவர், இலக்கு / நோக்கம், செய்தி, ஊடகம், பின்னூட்டல், சூழல் என்பனவாகும்.

பயனுள்ள தொடர்பாடலுக்கான தடைகள்:

வினைத்திறனுள்ள தொடர்பாடலில் பல்வேறு தடைகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவற்றுள் உடல்சார் தடைகள், சொற்பொருள் மற்றும் மொழித்தடைகள், நிறுவனத் தடைகள், கலாச்சாரத் தடைகள் மற்றும் பாலினத் தடைகள், சமூக-உளவியல் தடைகள் என்பன குறிப்பிடக் கூடியவையாகும்.

முடிவுரை:

மாறிவரும் உலகில் ஒருவர் பல்வேறு சவால்களை முகங்கொடுத்து வெற்றி காண்பதற்கு அவர் பெற்ற அறிவுக்கு மேலதிமாக பல்வேறு திறன்கள் அவசியமானவை. குடும்பம் அல்லது ஒரு நிறுவனம் எதுவானாலும் அதிலுள்ள ஒவ்வொரு உறுப்பினர்களின் பல்வேறு திறன்கள் அந்நிறுவனத்தின் வெற்றிக்கு இன்றியமையாதவை ஆகும். இதன் மூலம் தேசிய இலக்குகள் அடையப்பெற்று அந் நாடும் சுபிட்சம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் இதனுடாக குடும்பத்தில் அல்லது நிறுவனத்தில் முரண்பாடுகள், தோல்விகள், எதிரான மனப்பாங்குகள், பாதகமான மனவெழுச்சிகள் தவிர்க்கப்பட்டு அவற்றின் கவின் நிலை சிறப்பாக அமையும். “இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்” இதனால் பாடசாலைக் கல்வியானது மாணவர்களின் அறிவு விருத்தி மற்றும் திறன் விருத்திக்கும் முக்கியத்துவம் கொடுப்பதாக அமைய வேண்டும். இந்த உயர் நோக்கத்தை அடையப் பெறுவதற்கு ஆசிரியர், அதிபர்களின் திறன் விருத்தியும் முக்கியமானதாகும். பல்வேறு தொழில் வாண்மைச் செயற்பாடுகளினூடாக ஆசிரியர்கள் தமது திறன் விருத்தியை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். இத்தகைய அத்தியாவசிய செயற்பாட்டிற்கு இவ்வாக்கமும் கணிசமான பங்களிப்பைச் செய்யும் என்பது கட்டுரையாளரின் எதிர்பார்ப்பாகும்.

6. பல்தரக் கற்பித்தலும் அதன் முக்கியத்துவமும்.

அறிமுகம்:

"மாற்றம்" என்பது தவிர்க்க முடியாதது. உலக இயக்கத்தில் பல்வேறுவிதமான மாற்றங்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. மனப்பாங்கு, தேவைகள், இயற்கை, சூழல் , அரசியல், நோய்கள் மற்றும் சமூகம் போன்றவை இம்மாற்றங்களை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. இம்மாற்றங்களுக்கேற்ப மனிதன் மாறிக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இதனையே சார்ள்ஸ் டார்வின் என்பவர் " மாற்றங்களுக்கு சீரிய முறையில் துலங்கும் உயிரிகள் மட்டுமே தப்பிப்பிழைக்கின்றன" என்கின்றார். சமகாலத்தில் ஏற்பட்ட பல்வேறு அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அனைத்துச் செயற்பாடு களும்பல்வேறு மாற்றங்களுக்குள்ளாகி வருவதனை நாம் காண்கின்றோம். குறிப்பாக எமது நாட்டிலும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் நவீன தொழினுட்பம் பாரிய செல்வாக்கினைச் செலுத்துவதனையும் ஆசிரியர்-மாணவர்களின் மனப்பாங்கு, தேவைகள் மற்றும் நடவடிக்கைகளும் பாரியளவில் மாற்றத்திற்குள்ளாகி இருப்பதனையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது. எத்தகைய மாற்றங்கள் ஏற்படினும் அம்மாற்றங்களுக்கு ஏற்ப தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டியது அனைவரினதும் பாரிய பொறுப்பாகும். இதற்கேற்ப பாடசாலைகளில் ஆசிரியர்களின் கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டில் "பல்தரக்கற்பித்தல்" என்பது எத்தகைய முக்கியத்துவத்தைச் செலுத்த வல்லது என்பது தொடர்பாக இங்கு ஆராய்கின்றது.

போதனா உள்ளடக்க அறிவு (Padagogical Contant knowledge):

வகுப்பறையின் பிரதான திறவுகோல் ஆசிரியராவார். ஆசிரியரின் பிரதான பணி கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை வெற்றிகரமாக நடாத்துவதாகும். இப்பணியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு ஆசிரியர் ஒருவர் போதனா உள்ளடக்க அறிவையும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். சுல்மான்(1986) என்பவர் உள்ளடக்க அறிவு, போதனா அறிவு ஆகிய இரண்டினையும் ஒன்றினைத்து "போதனா உள்ளடக்க அறிவு" என வரைவிலக்கணப்படுத்தி யுள்ளார். உள்ளடக்க அறிவு என்பது பாட அறிவுடனும் போதனா அறிவு என்பது கற்பித்தலுடனும் தொடர்புபட்டதாகும். மாணவரை விளங்கிக் கொள்ளல்,வயதிற்கேற்ப மாணவர்களின் தேவைகள் - விருப்புக்கள் மற்றும் நாட்டங்கள் என்பனவற்றை அறிந்து கொள்ளல், மாணவர்களின் பல்வகைமைகளைப் புரிந்து கொள்ளல், பாடத்தைத் திட்டமிடல், பொருத்தமான கற்பித்தல் அணுகுமுறைகள், கற்பித்தல் முறைமைகள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் நுட்பங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தல், கற்பித்தல் துணைச் சாதனங்களின் பயன்பாடு, கணிப்பீடு - மதிப்பீட்டு நடவடிக்கைகள் மற்றும் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற பல விடயங்கள் "போதனா அறிவு" என்பதனுள் அடக்கப்படுகின்றன.போதனா உள்ளடக்க அறிவு தொடர்பான எண்ணக் கருவினை முதலில் 1986 ஆம் ஆண்டு முன்வைத்தவர் Shulman என்பவராவார். ஆரம்பத்தில் இவர் ஆசிரியர்களின் அறிவானது உள்ளடக்க அறிவு, கலைத்திட்ட அறிவு, போதனா உள்ளடக்க அறிவு ஆகிய மூன்று பரிமாணங்களைக் கொண்டதாக எடுத்துக்காட்டினார். பின்னர் 1987 இல் இம் மூன்று கூறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆசிரியர்களின் அறிவு தொடர்பாக ஏழு கூறுகளைக் கொண்ட ஒரு புதிய மாதிரியை (Model) அறிமுகம் செய்தார். இம் மாதிரியில் ஆசிரியரின் பாடஉள்ளடக்க அறிவு, பொதுக்கற்பித்தல் அறிவு, கலைத்திட்டம் தொடர்பான அறிவு, போதனா உள்ளடக்க அறிவு, மாணவர்கள் மற்றும் அவர்களது குணவியல்புகள் பற்றிய அறிவு, கல்விச் சூழமைவுகள் பற்றிய அறிவு, கல்வியின் இறுதிப் பேறுகள் தொடர்பான அறிவு ஆகிய ஏழு விடயங்கள் உள்ளடக்கப்பட் டுள்ளன. இப்பல்வேறு கூறுகளில் இத்தலைப்புடன் தொடர்புபட்ட

கற்பித்தல் முறைமைகள், கற்பித்தல் முறைகள் மற்றும் கற்பித்தல் நுட்பங்கள் என்பன இங்கு தொடர்ச்சியாக ஆராயப்படுகின்றன.

கற்பித்தல் முறைமைகள் (Teaching System):

ஒருவரின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு அவரின் உள்ளார்ந்த ஆற்றலை உருவாக்குவது கற்பித்தலாகும் என்பது Gage என்பவரின் கருத்தாகும். வெற்றிரமான கற்பித்தலை நடாத்துவதற்காக பாடத்தைத் திட்டமிடுகின்ற ஆசிரியர் ஒருவர் கற்பித்தல் அணுகுமுறை, கற்பித்தல் முறைமைகள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் நுட்பங்கள் ஆகிய முக்கிய எண்ணக்கருக்கள் தொடர்பாக தெளிவான விளக்கம் பெற்றிருப்பது மிக அவசியமானதாகும். இவை நான்கும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட விடயங்களாகும். அத்துடன் இவை கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டின் போது கூடிய பயன்பாடுடையதாகவும் உள்ளன.

கற்பித்தலானது எந்த வழிகளில் அல்லது எப்படி அமையலாம் என்பது தொடர்பான விளக்கத்தை ஓர் ஆசிரியருக்குக் கொடுப்பது "கற்பித்தல் அணுகுமுறை" (Teaching approach) எனப்படுகின்றது. பொதுவாக ஆசிரியர் மைய அணுகுமுறை (Teacher centered approach), மாணவர் மைய அணுகுமுறை. (Child centered approach) உய்த்தறி மற்றும் தொகுத்தறி அணுகுமுறை (Inductive and Deductive approach), மதிப்பீட்டு அணுகுமுறை (Evaluation approach) என்பன சமகாலத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சில அணுகுமுறைகளாகும். இவ் அணுகுமுறைகளுடன் தொடர்புபட்ட ஐந்து கற்பித்தல் முறைமைகள் பொதுவாக வகுப்பறைகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் சர்ந்தப்பங்களை ஒழுங்கமைத்துக்கொள்ளும் முறைகள் "கற்பித்தல் முறைமைகள்" எனக் கருதப்படுகின்றன. அவையாவன,

- பொதுக் கற்பித்தல் (General Teaching)
- குழுக் கற்பித்தல் (Group Teaching)
- அணிமுறைக் கற்பித்தல் (Team Teching)
- பல்மட்டக் கற்பித்தல் (Multy Level Teching)
- பல்தரக்கற்பித்தல் (Multy Grade Teaching)

வகுப்பறையில் ஓர் ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் ஒன்றாகவும் ஒரே அமர்விலும் (whole class room setting) வைத்து கற்பிக்கும் செயற்பாடு பொதுக் கற்பித்தல் முறைமையாகும். பாரம்பரியமாக இம் முறையே அதிகமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பொதுக் கற்பித்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது முடிவடைந்த பின்னர் மேலதிகமான சில செயற்பாடுகளுக்காக மாணவர் களைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து வைத்து வகுப்பறையை நடாத்துவது "குழுக்கற்பித்தல்" என அழைக்கப்படுகின்றது. இதன்போது மாணவர்கள் தேடலில் ஈடுபட்டு, முன்வைப்புக்களைச் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக் கின்றது. இதனுடாக மாணவர்களின் திறன்கள் வெளிப்படுவதற்கும் வாய்ப்பு அதிகமாகும்.

"அணிமுறைக் கற்பித்தல்" என்பது ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஓர் அணியாக இணைந்து ஒரு பாடத்தை நடைமுறைப் படுத்துவதாகும். உதாரணமாக, தரம் 10 இற்கான விஞ்ஞானப்பாடத்தில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் என பல பகுதிகள் உள்ளன. குறித்த பாடத்தினை கற்பிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஆசிரியர் இவ் எல்லாப் பகுதிகளிலும் புலமை பெற்றிருக்கக் கூடிய வாய்ப்பு இல்லாதிருக்கலாம். இந்நிலமைகளில் ஒவ்வொரு பாடப் பகுதிகளிலும் புலமை பெற்றவர்களைக் கொண்டு குறித்த வகுப்பிற்கு நேரசூசியின் பிரகாரம் அப் பாடத்தை நடைமுறைப்படுத்துவதே இம்முறைமை ஆகும். இதனை நடைமுறைப் படுத்துவதில் நிருவாக ரீதியான பல பிரச்சினைகள் இருந்தாலும் மாணவர் சார்பாக இது மிகவும் பயன்பாடுடையதாகும். பல ஆசிரியர்கள் ஓர் அணியாகச் சேர்ந்து ஒரு குறித்த வகுப்பிற்கு குறித்தவொரு பாடத்தை நடைமுறைப்படுத்தும்போது மாணவர் விருப்பத்துடனும் மிகவும் கூடிய விளக்கத்துடனும் கற்பதற்கு வாய்ப்பு அதிகமாகக் காணப்படும்.

"பல்மட்டக்கற்பித்தல்" என்பது மாணவர்களின் பல்வகைமை மற்றும் தரங்களுக்கு ஏற்ப ஆசிரியர் கற்பிப்பதாகும். ஒரு வகுப்பறையானது சாதாரண மாணவர்களுடன் விசேட தேவையுடைய மாணவர்களையும் உள்ளடக்கியதாகவே பெரும்பாலும் காணப்படும். இம் மாணவர்கள் ஒவ்வொரினதும் தகைமை மட்டம், விருப்பு, நாட்டம் என்பன வேறுபட்ட

தாகவே இருக்கும். வகுப்பிலுள்ள ஒவ்வொருவரையும் கருத்தில் கொண்டு கற்பித்தல்,கணிப்பீடு, மதிப்பீட்டு பணிகளை நடாத்துவதே "பல்மட்ட கற்பித்தல்" எனப்படுகின்றது.

"பல்தரக் கற்பித்தல்" என்ற எண்ணக்கரு இவ் ஆக்கத்தின் பிரதான தலைப்பாக இருப்பதனால் இது பின்னர் விரிவாக ஆராயப்படும்.

கற்பித்தல் முறைகள் (Teaching Mathods):

திட்டமிட்ட பாடவிடயங்களை மாணவர்களுக்கு திருப்திகரமாகவும் நிறைவாகவும் சென்றடைவதற்கு ஆசிரியரால் கையாளப்படும் வழிமுறைகள் "கற்பித்தல் முறைகள்" எனப்படுகின்றது. இது பொதுக்கற்பித்தல் முறைகள், விசேட கற்பித்தல் முறைகள் என இரு பெரும் பிரிவுகளைக்கொண்டது. விசேட கற்பித்தல் முறையானது பாடரீதியாக வேறுபடக் கூடியது. பொது கற்பித்தல் முறைகள் அனைத்துப் பாடங்களுக்கும் பொதுவானதாகும். இதனால் அனைத்து ஆசிரியர்களும் இதுபற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும். பொது கற்பித்தல் முறைகளில் மிக முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் கருதலாம்.

- விரிவுரை முறை
- கண்டறி முறை
- பிரச்சினை தீர்த்தல் முறை
- முன்திட்ட முறை
- செய்திட்ட முறை
- ஒப்படை முறை

இவற்றுள் விரிவுரை முறையானது ஆசிரியர் மைய கற்பித்தல் அணுகுமுறையாகவும் ஏனையவை மாணவர் மைய கற்பித்தல் அணுகு முறையாகவும் கருதப்படுகின்றன.

கற்பித்தல் நுட்பங்கள் (Teaching Technics) :

வகுப்பறையில் ஓர் ஆசிரியர் பாடம் , பாடத்தலைப்பு , மாணவர் களின் வயது, பாடவேளை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கற்பித்தல் முறைமையையும் மற்றும் கற்பித்தல் முறையையும் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை நடத்தமுடியும்.

இவ்வேளைகளில் மாணவர்களின் கவனத்தை மேலும் கவர்ந்திழுத்து மாணவர்களிடையே உயர் துலங்கலை ஏற்படுத்துவதற்காக ஆசிரியரால் கையாளப்படும்நுட்பம்அல்லது உபாயம்இதுவாகும். இது பல வகைப்படும்.

- கலந்துரையாடல்.
- வினாக்கேட்டல்.
- கதை கூறல்.
- பாத்திரமேற்று நடித்தல்.
- செய்து காட்டல்.
- விளக்கமளித்தல்.
- வெளிக்களப் பிரயாணம்.
- பொருட்காட்சி
- விவாதம் போன்றன.

ஆசிரியர் ஒருவர் தனது 40 நிமிட பாடவேளையின்போது இவற்றுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ பயன்படுத்தி வெற்றி கரமான கற்பித்தலை நடத்த முடியும். ஒரு பாட வேளையில் ஆசிரியரால் பல்வேறு கற்பித்தல் நுட்பங்கள் பயன்படுத்தப்படும் போது மாணவர்களில் துலங்கள் உயர்ந்த மட்டத்தில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

உயிரோட்டமுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான கற்றல் - கற்பித்தல் செயன்பாட்டின்போது பொருத்தமான கற்பித்தல் முறைமை, கற்பித்தல் முறை மற்றும் கற்பித்தல் நுட்பங்கள் ஆகிய மூன்றும் மிகவும் பொருத்தமான முறையில் பயன்படுத்தப்படும். இவற்றுள் எவற்றைப் பயன்படுத்துவது? அல்லது எந்த வேளையில் பயன்படுத்துவது? என்பதனை ஆசிரியர் முன்னரே திட்டமிட்டு அவற்றை பாடக்குறிப்பில் எழுதிக்காட்டுதல் அவசியமானதாகும்.

பல்தரக் கற்பித்தல் :

ஒன்றுக்கு மேற்பட்ட தரங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றி ணைத்து ஒரே நேரத்தில் ஒரே சூழலில் ஓர் ஆசிரியரால் நடாத்தப்படும் கற்பித்தலானது “பல்தரக் கற்பித்தல்” எனப்படும். இது “பல் வகுப்பு கற்பித்தல்” எனவும் அழைக்கப்படுகின்றது.

இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட தரங்கள் என்பது இது வெவ்வேறு தரங்களாகவோ அல்லது மேற்பட்டதாகவோ அமையலாம். ஒரே சூழலில் என்பது ஒரு வகுப்பறையாகவோ அல்லது இருவகுப்பறைகளாகவோ அல்லது மர நிழலாகவோ இருக்கலாம்.

உதாரணமாக, குறித்த ஓர் ஆரம்பப்பாடசாலையில் உள்ள மாணவர் களின் மொத்த எண்ணிக்கை 65 எனக் கொள்வோம். இங்கு 2 , 3 , 4 ஆம் தரங்களில் முறையே 10, 12 , 15 எண்ணிக்கையான மாணவர்கள் உள்ளனர் எனவும் கருதுவோம். இப்பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் இம் மூன்று தரங்களையும் ஒன்றிணைத்து பல்தரக் கற்பித்தலை நடத்த முடியும். வகுப்பறைகளின் வசதியைப் பொறுத்து குறித்த 37 மாணவர்களையும் ஒன்று சேர்த்து ஒரே வகுப்பறையிலோ அல்லது அருகிலுள்ள மூன்று வகுப்பறைகளிலோ குறித்த ஆசிரியர் கற்பித்தலை மேற்கொள்ள முடியும். இம்மூன்று தரங்களையும் சேர்ந்த மாணவர்களின் பாடங்கள் ஒன்றாகவோ அல்லது வேறுபட்டதாகவோ அமையலாம்.

ஒரே வகுப்பறையிலுள்ள மாணவர்களை ஒரே நேரத்தில் ஒரு ஆசிரியரால் கற்பித்தல் நடாத்துவதே சவாலாகக் கருதப்படும் நிலையில் இது எவ்வாறு சாத்தியம் என யோசிப்பதற்கும் வாய்ப்புள்ளது. இங்கு ஆசிரியர் பல உத்திகளையும் அணுகு முறைகளையும் கையாள வேண்டியது அவசியமாகும். பல்தரக் கற்பித்தலில் சுயகற்றல், குழுக்கற்றல் என்பன மிகவும் பயன்பாடுடைய இரு உத்திகளாகும்.

குறித்த நேரத்தில் குறிப்பிட்ட பாடவிடயத்தை நிறைவு செய்வதனை நோக்கமாகக் கொண்டு மாணவர்களை சுயகற்றலின் பால் ஈடுபட ஊக்கப்படுத்துவது முதலாவது உத்தியாகும். அத்துடன் தரம், தகைமை, வயது, பாடம் போன்ற பல்வகைமை அடிப்படையில் மாணவர்களைக் குழுக்களாக்கி ஏற்கனவே திட்டமிடப்பட்ட செயற்பாட்டை வழங்கி நடை முறைப்படுத்துவது மற்றைய உத்தியாகும். இவ்வேளைகளில் மாணவர் களைக் கண்காணித்து, அவர்களை ஊக்கப்படுத்தி வழிகாட்ட வேண்டியதும் ஆசிரியரின் கடமையாகும்.

பொதுவாக பல்தரக் கற்பித்தலில் மிக முக்கிய நான்கு விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

- வகுப்பறை அமைப்பு
- மாணவர்களை ஒருங்கிணைத்தல்
- கற்றல் வளங்களைப் பயன்படுத்தல்
- பாடத்தைத் திட்டமிடுதல்

இவை யாவற்றையும் உள்ளடக்கியதாக Dilash Anginesh மற்றும் Bondistha (1994) ஆகியோர் பல்தரக் கற்பித்தலுக்கான பின்வரும் நான்கு அடிப்படைக் கொள்கைகளை முன்வைத்துள்ளனர். அவை

- ஒவ்வொரு மாணவரும் தனிப்பட்ட திறனைப் பெறுவர்.
- மாணவர் அனுபவத்தினூடாகச் சிறப்பாகக் கற்பர்.
- ஒருவர் மற்றவரிடமிருந்து இலகுவாகக் கற்பர்.
- கற்பித்தல் திட்டம் முன்னேறிச் செல்லும்.

பல்தரக் கற்பித்தலுக்கான அவசியம்

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, அவர்கள் கற்கும் பாடங்களின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை அமைந்திருக்க வேண்டியது அவசியமாதாகும். அத்துடன் ஆரம்ப நிலை, இடை நிலை என்பனவற்றைப் பொறுத்து மாணவர்-ஆசிரியர் விகிதம் நியமமான முறையில் காணப்படுதலும் அவசியமானதாகும். ஆயினும் பல்வேறு காரணிகளினால் வகுப்பறை ஒன்றில் மாணவர்களின் எண்ணிக்கையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் சடுதியாக மாற்றத்திற் குள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. இவ் வேளைகளில் ஆசிரியர்- மாணவர் விகிதத்தில் பாரிய வேறுபாடு ஏற்படலாம். அத்துடன் சில காரணங்களால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கபட்டும் வருகின்றன. இதனால் குறுகிய காலத்தில் அதிகமான பாடத்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டிய தேவையும் உள்ளன. இவ் வேளைகளில் ஆசிரியர்கள் வழமையான நேரசூசி நடைமுறைக்கு மேலதிமாக தரம், பாடம் என்பனவற்றை கருத்தில் கொள்ளாமல் பணியாற்ற வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. இத்ததைய நிலமைகளில் "பல்தரக் கற்பித்தல்" பொருத்தமான ஓர் உபாயமாகக் கருதப்படுகின்றது. ஆசிரியர்-மாணவர் விகிதத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய பொதுவான மேலும் சில காரணிகள் தொடர்பாக அடுத்ததாக இங்கு ஆராயப்படுகின்றன.

ஆசிரியர் நிரம்பல்

கல்வி அமைச்சின் 2021ம் ஆண்டில் தொகை மதிப்பின் அடிப்படையில் இலங்கையில் 10,146 பாடசாலைகள் உள்ளதாக அறியமுடிகின்றது. இவற்றை நாட்டின் புவியியல் அடிப்படையில் கஷ்ரப்பிரதேச, தூரப் பிரதேச, பெருந்தோட்டப் பிரதேச, நகரப்பிரதேச என பல்வேறு வகையாக பிரித்து நோக்கலாம். மேலும் தேசிய பாடசாலை, மாகாணப் பாடசாலை என்றும் 1 AB , 1C, வகை II மற்றும் வகை III என்றும் வேறுபடுத்தியும் நோக்கலாம். இவ் அனைத்துப் பாடசாலைகளிலும் “ஆசிரியர் நிரம்பல்” சீராக அமைந்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

2021 ஆம் ஆண்டின் தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் மாணவர் - ஆசிரியர் விகிதம் பின்வருமாறு அமைந்துள்ளது.

பாடசாலை வகை	மாணவர் – ஆசிரியர் விகிதம்
தேசிய பாடசாலை	21 : 1
மாகாண பாடசாலை	16 :1
1AB	20 : 1
1C	17 : 1
வகை II	13 : 1
வகை III	18 : 1

இது தேசிய ரீதியான ஓர் அவதானமாகும். மாகாண, மாவட்ட, வலய, ரீதியில் பாகுபடுத்தும் போது இதில் பல வேறுபாடுகள் காணப்படும். அத்துடன் இலங்கையில் 50 இலும் குறைவான மொத்த மாணவர் எண்ணிக்கைகளைக் கொண்ட பாடசாலைகள் 1480 ஆக உள்ளன. இப் பாடசாலைகளில் அதிபர் உட்பட ஒரு அல்லது இரு ஆசிரியர்களே நியமனம் பெற்றிருப்பர். ஆயினும் பல்வேறு தரங்களில் மாணவர்கள் இருப்பார்கள். இத்தகைய நிலைமைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு “பலதரக் கற்பித்தல்” அணுகுமுறையே மிகப் பொருத்த மானதாகும்.

இதற்கு மேலதிகமாக பின்வரும் காரணிகளால் நிரந்தரமாகவோ அல்லது காலத்திற்கு காலமோ பாடசாலைக்கு பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஆசிரியர்களின் வரவும் மாறுபட்டதாக காணப்படும்.

அவையாவன :

- கலாசாரக் காரணிகள்.
- போக்குவரத்து இடர்பாடுகள்.
- இயற்கை அனர்த்தங்கள்
- நோய்த் தொற்றுக்கள்
- பாடசாலைகளில் வகுப்பறைகளின் எண்ணிக்கைகளின் பற்றாக்குறை
- கஸ்ரப்பிரதேச பாடசாலைகளை ஆசிரியர்கள் விரும்பாமை
- ஒரே நாளில் அதிகமானோர் லீவு எடுத்தல்
- ஒரே பாடசாலையில் ஆசிரியைகள் பலர் மகப்பேற்று விடுமுறையில் நிற்றல்
- கல்வி தொடர்பான பெற்றோரின் எதிரான மனப்பாங்கு
- மாணவர்களின் சுயதொழில் ஈடுபாடு

இக்காரணிகளால் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கேற்ப நியமமான முறையில் "ஆசிரியர் நிரம்பலை" பேணுவதில் சிரமங்கள் காணப்படும். இவ்வேளைகளில் பாடசாலை அதிபர்கள் பொருத்தமான ஆசிரியர்களைக்கொண்டு பல்தரக்கற்பித்தலை ஏற்பாடு செய்யமுடியும்.

பல்தரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வேண்டிய திறன்கள்:

ஆசிரியர்களின் வகிபாகமானது மாணவர்களின் தேவைகள், கற்றல் சூழல் என்பனவற்றைப் பொறுத்து மாறவேண்டியது அவசியமாகும். இவ்வாறு வகிபாக மாற்றம் ஏற்படும்போது ஆசிரியர்களுக்கு பல்வேறு திறன்கள் இன்றியமையாதவையாகும். 21 ஆம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்கள் எட்டு திறன்களைக் கொண்டிருக்க வேண்டும் என யுனெஸ்கோ எதிர்பார்க்கின்றது. அவையாவன பாடப்புலமை, உயர்தொழிற்றகைமை, தொடர்பாடலின் பிரத்தியேகத்திறன்,கற்பித்தலில் மாணவர்களை பங்காளி களாக பயன்படுத்தும் ஆற்றல், படைப்பாற்றல், பிரச்சினையை இனங் காணலும் தீர்த்தலும்,சமூக நீதிக்கு முக்கியத்துவம் கொடுத்தல் என்பன வாகும். இவை தொடர்பாக முன்பு விரிவாக ஆராயப்பட்டுள்ளன இவற்றிற்கு மேலதிகமாக பல்தரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் களுக்கு பின்வரும் திறன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. கலைத்திட்ட இயைபாக்கம்

பாடசாலைகளில் நடைமுறையிலுள்ள கலைத்திட்டமானது குறிப்பிட்ட தரங்களை அடிப்படையாகக் கொண்டே விருத்தி செய்யப் பட்டுள்ளது. இதில் பிரதேச தகைமை, மாணவர்களின் பல்வகைமை வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. இதனால் பல்தரக் கற்பித்தல் நடைமுறைப்படுத்தும் ஓர் ஆசிரியர் மாணவர்களின் தேவை, இயல்புகள், தகைமைகள் என்பனவற்றை கருத்தில் கொண்டு பொதுக் கலைத்திட்டத்தை நெகிழ்ச்சித் தன்மையுடையதாக இயைபாக்கம் செய்யவேண்டியது அவசியமாகின்றது.

2. கற்பித்தல் துணைச் சாதனங்களை தயாரித்தலும் பயன்படுத்தலும்

பல்தரக் கற்பித்தலில் ஓர் ஆசிரியர் ஒரே நேரத்தில் பல்வேறு தரங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றிணைத்து வகுப்பை நடாத்தவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. பாடவிடயத்தில் சரியான எண்ணக் கருவாக்கத்தை ஏற்படுத்துவதற்காக பொருத்தமான கற்பித்தல் துணைச் சாதனங்களைத் தெரிவு செய்து, அவற்றை தயாரிக்க வேண்டிய தேவையும் மிக அதிகமாகவுள்ளது. இத்தகைய நிலைமைகளில் மாணவர் களையும், பெற்றோர்களையும் உதவிக்கு பயன்படுத்தமுடியும்.

3. மாணவர்களை குழுக்களாக ஒழுங்கமைத்தல்

பல்தரக் கற்பித்தலில் சுயகற்றல், குழுக்கற்றல் என்பன முக்கியத்துவம் பெறுவதனை நாம் அறிவோம். குழுக்கற்றல் செயற்பாட்டிற்காக பாடம், தகைமை, தரம் அடிப்படையில் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். பின்னர் இக்குழுக்களை சுயமாக இயங்கும் குழு, பகுதியாக ஆசிரியர் உதவிபெறும் குழு, முழுமையாக ஆசிரியர் உதவி பெறும் குழு, சுயகற்றலில் ஈடுபடும் குழு என வேறுபடுத்திக் கொள்வதும் சிறப்பானதாகும்.

4. மாணவர்களின் கற்றல் அடைவுகளைக் கண்காணித்தலும் ஊக்கப்படுத்தலும்

வழமையான வகுப்பிற்கு மேலதிகமாக பல்வேறு தரங்களைக் கொண்ட மாணவர்கள் பலதரக்கற்பித்தல் வகுப்பறையில் இருப்பார்கள். முக்கியமாக விசேட தேவையுடைய மாணவர்களும் இவ்வகுப்பறையில்

இருக்கக் கூடும். இதனால் அனைவரினதும் கற்றல் அடைவுகளை கண்காணித்து அவர்களை ஊக்கப்படுத்தவேண்டியது ஒரு சவாலான பணியாகும்.

5. வகுப்பறையை ஒழுங்குசெய்தல்

மாணவர்களின் எண்ணிக்கை வழமைக்கு மாறாக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் ஆசிரியர், மாணவர்கள் ஒவ்வொருவரையும் நேரடியாகப் பார்க்குமாறு அரைவட்டம், சிறுகுழு வட்டங்களை அமைத்து வகுப்பறையை ஒழுங்கு செய்யலாம். இதனை வகுப்பறைக்கு வெளியிலும் மண்டபத்திலோ அல்லது மர நிழலிலோ ஏற்பாடு செய்யமுடியும்.

6. விளைதிறன் மிக்க நேர முகாமைத்துவம்

பல்வகைமை கொண்ட மாணவர்கள் வகுப்பறையில் இருக்கின்ற காரணத்தினால் குறித்த பாடவேளையில் பல்தரக்கற்பித்தல் நடாத்துவது மிகவும் சிரமமானதாகும். ஆசிரியர் மிகவும் கவனமாக பாடத்தை திட்டமிட்டால் மாத்திரமே தனது நோக்கம் நிறைவு பெறும். குறிப்பாக நேரத்தை முழுமையாக பயன்படுத்துவதற்காக ஒரு கால அட்டவணை தயாரித்துக்கொள்வது சிறப்பானதாகும். எடுத்துக்காட்டாக மூன்று தரங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒன்று சேர்த்து பல்தரக் கற்பித்தல் நடாத்த வேண்டியுள்ளது எனக்கொள்வோம். ஆசிரியர், மாணவர் பிரதிநிதி (மாணவ தலைவன் அல்லது மீத்திறன் உள்ள மாணவன்), செயற்பாடுகள், கற்றல் வளங்கள் என்பனவற்றை கருத்தில் கொண்டு ஒரு மணித்தியால பாடவேளைக்காக பின்வருமாறு நேர பங்கீட்டை அமைத்துக்கொள்ள முடியும்.

நேரப் பங்கீடு	தரம் 6	தரம் 7	தரம் 8
முதல் 20 நிமிடங்கள்	ஆசிரியர்	மாணவர் பிரதிநிதி	சுய கற்றல்
இரண்டாம் 20 நிமிடங்கள்	சுய கற்றல்	ஆசிரியர்	மாணவர் பிரதிநிதி
இறுதி 20 நிமிடங்கள்	மாணவர் பிரதிநிதி	சுய கற்றல்	ஆசிரியர்

இத்தகைய மாதிரிக்கேற்ப தமக்கு வழங்கப்பட்ட நேரம், தரங்கள் என்பன வற்றை அடிப்படையாகக் கொண்டு பல் தரக்கற்பித்தலை நடாத்தும் ஆசிரியர் பொருத்தமான கால அட்டவணையைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

வெவ்வேறு தரங்களுக்கு வேறுபட்ட பாடங்களை கற்பித்தல்

சில சர்ந்தப்பங்களில் வேவ்வேறு தரங்களுக்கு வேறுபட்ட பாடங்களை பல்தரக்கற்பித்தல் முறைமையில் கற்பிக்க வேண்டி ஏற்படலாம். இத்ததைய நிலைமைகளில் வகுப்பறையை முகாமை செய்வது சிக்கலானதும் வேறுபட்டதுமாகும். இவ்வாறான நிலைமையில் பல்தரக் கற்பித்தல் ஆசிரியர் பின்வரும் உபாயங்களைக் கையாள முடியும்.

- பாடவேளை ஆரம்பிக்கும்போது பொதுவான செயற்பாடுகளை மாணவர்களுக்கு அளித்து வகுப்பறையின் கற்றல் சூழலை மகிழ்ச்சி கரமாக உருவாக்குதல்.
- ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு தலைவரைத் தெரிவு செய்து அவர்கள் சார்ந்துள்ள வகுப்பை அமைதியாகவும் ஒழுக்கமாகவும் பேணும் பொறுப்பை அத்தலைவர்களிடம் ஒப்படைத்தல்.
- ஒவ்வொரு வகுப்பிற்கும் வெவ்வேறாக இருக்கையை உருவாக்கிக் கொடுத்து அதன்படி மாணவர்கள் அமர்ந்த பின்னர் அவர்களின் செயற் பாடுகளை கவனிக்கத்தக்க வகையில் ஆசிரியர் தம் இருப்பிடத்தை தெரிவு செய்து கொள்ளல்.
- ஒரு வகுப்பிற்கு பாடங்களைக் கற்பிக்கும்போது மற்றய வகுப்புகளுக்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை வழங்கி கற்றல் நிகழ்வுகளைக் கவனித்தல்.
- தேவைப்படும் போது மாணவர்களுக்கு பின்னூட்டல் வழங்குதல்.
- மூன்று தரங்களுக்கு கற்பிக்க வேண்டிய சர்ந்தப்பங்களில் ஆசிரியர் ஒரு வகுப்பிற்கு ஒரு புதிய தலைப்பையும் மற்றய இரு வகுப்புகளுக்கு சுயகற்றல் மற்றும் குழுச்செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்.

பல்தரக் கற்பித்தல் ஆசிரியருக்கான சிறப்புக்கள்

- பாடசாலையில் குறித்த ஆசிரியர் கல்வியாளராக உருவாதல்
- பாடசாலையில் முன்மாதிரியானவராகத் திகழ்தல்
- பாடசாலையின் மாற்ற முகவர்
- மாணவர்களின் சுயகற்றலுக்கு உதவுபவர்
- கற்றல் விளைவுகளை உயர்வாக்குபவர்
- குழுச் செயற்பாட்டினூடாக மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குபவர்
- செயற்பாட்டினூடாக பதகளிப்பு நீக்கப்பட்டு எதிர்கால வாழ்விற்கு மகிழ்ச்சிகரமான அனுபவத்தைக் கொடுப்பவர்

பல்தரக் கற்பித்தலில் மாணவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

- சிறிய வயதில் தொடர்பாடல் திறன் விருத்தி
- குழு கற்றலில் ஈடுபாடு, உதவும் மனப்பாங்கு விருத்தி
- எண்ணக்கரு தெளிவாக விளக்கம் பெறுவர்
- மாணவர்களுக்கு சமூக சேவை பற்றி மனப்பாங்கு விருத்தி பெறும்
- குழுக் கலந்துரையாடல் மூலம் பயம்- பீதி அற்றுப்போகும்
- அனைவரும் மகிழ்ச்சியான கற்றலில் ஈடுபடுவர்
- மாணவர்களுக்கு புதிய கற்றல் சூழல் கிடைக்கும்

பல்தரக் கற்பித்தலில் ஆசிரியருக்கான சவால்கள்

பல்வேறு வகுப்புக்களை ஒரே அறையில் ஒரே நேரத்தில் கையாள்வது

- எல்லாப் பாடங்களுக்கும் கற்பித்தல் துணைகள் தயாரித்தல்
- மெல்ல கற்கும் மாணவர்களில் தனிப்பட்ட கவனம் செலுத்துதல்
- போதுமான வாசிப்பு பயிற்சி வழங்குதலும் மேற்பார்வை செய்தலும்
- மீத்திறன் உடையவர்களில் மேலதிக கவனம் செலுத்துதல்
- மாணவர்களின் கஸ்ரமான பகுதிகளை அடையாளம் காணலும் அவற்றை கற்பித்தலும்
- குழுச் செயற்பாட்டில் ஒரே நேரத்தில் கவனம் செலுத்துதல்
- மதிப்பீட்டில் கவனம் செலுத்துதல்
- நேர முகாமை

இவற்றிற்கு மேலதிகமாக "பல்தரக் கற்பித்தல்" தொடர்பாக போதுமான அறிவும் இது தொடர்பான சாதகமான மனப்பாங்கும் ஆசிரியருக்கு இருக்குமாயின் அனைத்து சவால்களையும் வெற்றிகாண முடியும்.

முடிவுரை:

காலத்தின் தேவை கருதி, சமகால மாணவர்களின் இயல்புகள், நாட்டங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய மாற்றங்களை நடைமுறைப் படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது ஆகும். "பல்தரக்கற்பித்தல்" தொடர்பான போதுமான அறிவை கல்விப்புலம் சார்ந்த அனைவரும் கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக பாடசாலைகளில் இதனை நடைமுறைப் படுத்துவதற்கு, இதுபற்றி போதுமான விளக்கம் அதிபர்களுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் ஆசிரியர்களுக்கு வழிகாட்டி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இது தொடர்பான போதுமான புலமை இல்லா விட்டால் இதனை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துவதில் பல இடர்பாடுகள் காணப்படும். கல்விச் சமூகத்தின் நன்மை கருதி திறந்த பல்கலைக் கழக கல்விப் பீடத்தினால் நடாத்தப்படும் பட்ட மேல் கல்வி டிப்ளோமா பாடநெறியில் "பல்தரக் கற்பித்தல்" எனும் ஒரு பாடம் அறிமுகம் செய்யப் பட்டுள்ளமையும் அத்துடன் "பல்தரக் கற்பித்தலுக்கான சான்றிதல் கற்கை நெறி" ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் ஆசிரியர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

இயற்கை அனர்த்தங்கள், சூழல் பாதிப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எதிர்பாராத விதமாக பாடசாலை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வரவில் சடுதியான வீழ்ச்சி காணப்படும். இவ்வேளைகளில் பல்தரக் கற்பித்தலினூடாக பாடசாலைச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக கஸ்ரப்பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு "பல்தரக்கற்பித்தல்" அணுகுமுறை கூடிய பயன்பாடுடையதாக இருக்கும். இத்தகைய உயர் நோக்கங்களைக் கொண்ட ஆசிரியர்களுக்கு இவ் ஆக்கம் ஊக்கமளிக்கும் என்பது நூலாசிரியரின் எதிர்பார்ப்பாகும்.

> நாம் நேற்றுக் கற்பித்ததைப் போல் இன்று கற்பிப்போம் எனில்
> எமது மாணவர்களின் நாளைய நாளை திருடிக் கொள்வோம்.
> - ஜோன் டூயி -

7. குழுக் கற்பித்தலில் 5E இன் முக்கியத்துவம்

அறிமுகம் :

எமது நாட்டின் கல்வித்துறையானது பொதுக்கல்வி, உயர்கல்வி என இரு பிரதான பெருங்கூறுகளைக் கொண்டுள்ளது. உயர்கல்வி வாய்ப்பினை அதிகரிப்பதற்கு அடிப்படையாக பொதுக்கல்வி அமைகின்றது. பொதுக் கல்வியில் ஏற்படுகின்ற குறைபாடு, பலவீனம் என்பன உயர்கல்வி வாய்ப்பினையே இல்லாமல் செய்கின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. இதன் காரணமாக பொதுக்கல்வியின் மிக முக்கியத்துவம் உணரப்பட்டு அவ்வப் போது,பொதுக்கல்வியில் மாற்றங்கள் செய்யப்பட்டு வந்தன. தேசிய கல்வி ஆணைக்குழுவின் 1992ஆம் ஆண்டிலான அறிக்கைக்கு ஏற்ப 1998 இல் பொதுக்கல்வியில் புதிய சீர்திருத்தங்கள் முன்வைக்கப் பட்டன. ஆரம்பப் பிரிவு முதல் பல்கலைக்கழகம் வரை பல விடயங்கள் இச் சீர்திருத்தத்திற்கு உள்ளாகின. ஒன்பது தேசிய கல்வி இலக்குகள், ஐந்து தேவையான தேர்ச்சிகள் என்பவற்றிற்கேற்ப இம் மாற்றங்கள் நடைபெற்றன. இச் சீர்திருத்தத்தின் அவசியத்திற்கு பின்வரும் விடயங்களின் குறை பாடுகளே காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. தேசிய மட்டச் சாதனை குறைவு, வன்செயல் அதிகரிப்பு, தற்கொலையில் முன்னணி, சர்வதேச சமூகத்தின் விசனம், கல்வியில் வீண்விரயம், தொழில் வேண்டிய போராட்டம் மற்றும் சத்தியாக்கிரகம் என்பன அவற்றுள் சில.

குறிப்பாக இடைவிலகல் தொடர்பான அப்போதைய ஆய்வில், பாடசாலை செல்லவேண்டிய வயதை அடைந்த பிள்ளைகளில் 97% ஆனோர் தரம் 1 இற்கு அனுமதி செய்யப்படுவதாகவும் இவர்களில் தரம் ஐந்தினை பூர்த்தி செய்பவர்கள் 95% எனவும் அறியமுடிகின்றது. மேலும்

70% ஆனோர் க.பொ.த. (சா/த) இற்கு உள்வாங்கப்படுவதாகவும் இவர் களில் 36% ஆனோர் க.பொ.த. (உ/த) இற்கு அனுமதி பெறுவதாகவும் இவ் ஆய்வு தெரிவிக்கின்றது. மேலும் இவர்களில் 2% ஆனோர் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவதாகவும் இவ் ஆய்வு மேலும் கூறுகின்றது. தரம் 1 இல் அனுமதிக்கப்பட்ட இம் மாணவர்கள் சுமார் 13 வருட காலம் பாடசாலை முறைக் கல்வியில் ஈடுபட்டபோதிலும் 98% ஆனோருக்கு நடந்த பரிதாபமான கதிதான் என்ன? நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைகளும் அந்நாட்டின் 'பெரு வளம்' என்பதால் மிக மோசமான வளவிரயம் இங்கு ஏற்பட்டுவருவது கவலைப்பட வேண்டிய விடயமாகும்.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக ஆராயும்போது 2022/ 2023 ஆண்டில் 91,754 பேரில் 42 500 பேர் மாத்திரமே இலங்கையிலுள்ள 16 தேசிய பல்கலைக்கழகங்களுக்கும், 4 உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விண்ணப்பித்தவர்களில் சுமார் 46% ஆனோர் மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவது மற்றுமொரு வள விரயமாகவே கருதப்படவேண்டும். அனுமதி பெறத்தவறிய சுமார் 54% ஆனோர் தமது கட்டிளைமைப்பருவத்தில் திசை தெரியாமல் திண்டா டுவது எமது நாட்டில் வருடாந்தம் காணக்கூடிய விடயமாகும்.

தொழிற் சந்தைக்குத் தேவையான ஆளணிகளை உருவாக்குவதற்கு தற்கால கல்விமுறை தவறிவிட்டதாக மற்றுமொரு குற்றச்சாட்டுமுள்ளது. வெறுமனே கடதாசித் தகைமைகளை மட்டுமே பட்டதாரிகள் கொண்டுள்ள தாக தனியார் தொழில் அதிபர்கள் நகைக்கின்றனர். இலவசமாக பொதுக் கல்வி, உயர்கல்வி என்பவற்றை வழங்கிய அரசாங்கமே ஏதோ ஒரு தொழிலை அவர்களுக்கு வழங்கவேண்டிய பரிதாபகரமான நிலையி லுள்ளது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என எத்தனை வருடங்களுக்கு முதல் நாம் கூறத்தொடங்கினோம்? ஆனாலும் இன்றும் பாடசாலைகள் இதனைத்தானே செய்து கொண்டிருக்கின்றன. இத்தகைய அவலங்களுக் கெல்லாம் மூலகாரணம் எமது முறைசார் பாடசாலைக் கல்விமுறையில் உள்ள குறைபாடு எனலாம். இந்த கல்விமுறை ஆக்கத்திறன் அற்ற வெறும் அறிவை மட்டுமே வழங்கிவருவதாக தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

நமது நடைமுறைக்கல்வி முறையினூடாக நாம்

- அறிந்தவற்றைக் கற்றல்
- முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டவற்றை கற்றல்
- ஏற்கனவே காணப்படுபவற்றை கட்டியெழுப்புதல்

ஆகிய பணிகளையே மீண்டும் மீண்டும் செய்து வருகின்றோம். புதிய 'சகத்திரம்' எதிர்பார்ப்பது போன்று எமது கல்வி முறையில் பாரிய மாற்றம் ஒன்று அவசியமாகின்றது. இம் மாற்றமானது

- அறிந்தவற்றைமாற்றியமைத்தல்
- இதுவரை தீர்மானிக்கப்படாதவற்றை தேடல்
- எதிர்காலத்திற்கு தேவையானவற்றை கட்டியெழுப்புதல்.

போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்துவதாக அமைதல் வேண்டும். அத்தகைய கல்வி முறைக்கு ஏற்ப 2007இல் அறிமுகம் செய்யப்பட்ட கலைத்திட்ட மறுசீரமைப்பில் குழுக்கற்பித்தலுக்காக 5E செயற் பாட்டுத்திட்டம் முன்வைக்கப்பட்டது.

'ஒன்றிணைந்த பூரணமான ஆளுமை கொண்ட நற்பிரஜைகளை நாட்டிற்கு வழங்குவதே பாடசாலையின் பெரும் பணி' என்ற உயர்ந்த சிந்தனைக்கு குழுக்கற்பித்தலுக்கான '5E செயற்பாட்டுத்திட்டம்' நிட்சயம் வழிவகுக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். குழுக் கற்பித்தல் நடாத்தும் ஓர் ஆசிரியருக்கு இது தொடர்பான போதிய அறிவு இன்றியமையாததாகும்.

ஆசிரியர் வகிபாகம் (3T Model) :

கல்வி மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர் வகிபாகமும் மாறவேண்டியது அவசியமாகும். இத்தகைய மாற்றமானது, 3T மாதிரி வடிவில் விளக்கப் பட்டுள்ளது.

ஆரம்பக்கால கல்வி முறையில் ஆசிரியர் எஜமானராகவும் மாணவன் அடிமையாகவும் இருந்து வந்துள்ளனர். ஆசிரியருக்கே அனைத்தும் தெரியும் மாணவர்களுக்கு எதுவுமே தெரியாது என்ற கோட்பாடும் அன்றிருந்தது. ஆசிரியர் கூறுவதை வேதவாக்காக மாணவர் கேட்டு, குறிப்பெடுத்துக்கொள்ளும் 'ஒரு வழித் தொடர்பாடல்' ஆக இது தொடர்ந்தது.

இது கடத்தல் (Transmission) வகிபாகம் என அழைக்கப்பட்டது. இங்கு ஆசிரியர் கடத்துபவர் (Transmitter) என விசேட பெயரைப் பெற்று வந்தார்.

கல்வி என்பது '3H களின் செயற்பாடு' என்ற காந்தியடிகள், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் சிந்தனைக்கு அமைவாக முதலாவது H- Head மாத்திரமே இங்கு செயற்பட வாய்ப்பிருக்கிறது. இங்கு மூளை மாத்திரமே அறிவு சுரங்கத்தைப் பெறும் ஒரு கருவியாக செயற்பட்டது.

இதன் பின்னர் இடைக்காலத்தில் கற்றல் செயற்பாடு இரு வழித் தொடர்பாடலாக மாற்றம் பெற்றது. ஆசிரியர் மாணவர் இருவரும் சமபங்காளிகளாக கடமையாற்றினர். இதனை 'பரிமாற்றம் (Transaction) வகிபாகம் என அழைத்தனர். இச்செயற்பாட்டின் போது ஆசிரியர் வசதி செய்து கொடுப்பவர் (Facilitator) என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.

சமகாலத்தில் மாணவனை எஜமானாகக் கொண்ட 'நிலைமாற்றம் (Transformation) வகிபாகம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. இங்கு பல் வழித் தொடர்பாடல் ஏற்பட வாய்ப்பு அதிகமாகும். ஆசிரியர் வளவாளர் (Resource person) என இவ் வகிபாகத்தில் அழைக்கப்படுவார். காந்தியடிகள் குறிப்பிட்ட 3Hகளும் அதாவது Head, Hand, Heart அனைத்தும் இங்கு செயற்படுகின்றன. அதேவேளை மாணவர் 'தேர்ச்சி' பெற்றுவருவதை ஆசிரியர், நேரடியாக அவதானிக்க முடியும். தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்கு, திறன், ஆளிடைத் தொடர்பு ஆகிய பல்வேறு கூறுகளின் சேர்க்கையாகும். இத்தனை சிறப்பு மிக்க 'நிலைமாற்றம்' வகிபாகத்திற்கு 5E செயற்பாட்டுத்திட்டம் மேலும் ஆக்கம் அளிக்கவல்லது.

KASP மாதிரி

Knowledge	-	அறிவு	←	Head
Attitude	-	மனப்பாங்கு	←	Heart
Skill	-	திறன்	←	Hand
Practice	-	தொடர்பயிற்சி		

P1 — சமூகத்திறன்

P2 — ஆளுமைக் குணவியல்பு

ஆரம்ப காலங்களில் ஆசிரியர் தமது தொழில் தகைமையான பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறியைப் பயிலும் போது அவர்களின் உதடுகளில் முணுமுணுக்கும் ஒரே ஒரு வார்த்தை அறிவு, திறன், மனப் பாங்கு என்பதாகும். மாணவனுக்கு முதலில் அறிவை அளவுக்கு அதிகமாக வழங்கி திறன், மனப்பாங்கு என்பனவற்றில் எவ்வித அபிவிருத்தியுமே ஏற்பட வாய்ப்பிருக்காத கல்வி முறையே ஆரம்பத்தில் இருந்தது. தற்போது சம காலத்திற்கு பொருந்தும் வகையில் KASP மாதிரி நடை முறைப்படுத்தப் படுகின்றது.

இவை ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாக வளர்ச்சியடைந்து செல்வதாகும். குறைவாக அறிவைப் பெற்ற ஒரு மாணவன் தனது மனப் பாங்கு மாற்றத்தினூடாக பயிற்சி மூலம் திறனைப் பெற்று வாழ்நாள் முழுவதும் செம்மையாக வாழ்வதனை இது குறிக்கின்றது.

அறிவு என்பது மூளை (Head) உடனும் மனப்பாங்கு என்பது இதயத்துடனும் (Heart) திறன் என்பது கை (Hand) உடனும் தொடர்புபட்டு செல்வதாகவும் இது அமைகின்றது. இந்த KASP மாதிரிக்கு ஏற்ப குழுக்கற்பித்தலுக்கான 5E செயற்பாட்டுத்திட்டம் உருவாக்கம் பெற்றுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

குழுக்கற்பித்தலின் 5E இன் முக்கியத்துவம் :

எந்தவொரு வெற்றிகரமான செயற்பாட்டிற்கும் திட்டமிடல் அவசிய மாகும். ‘திட்டமிடத்தவறும் ஒருவர் பிழை விட திட்டமிடுகின்றார்’ என்ற கருத்திற்கு அமைவாக ஒரு ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழையும் பொழுது திட்டமிடலுடன் செல்லவில்லையாயின் கற்றல் செயற்பாடு பலவீனமடைந்துவிடும். மாணவர் துலங்கல் ஏற்பட வாய்ப்பே இருக்காது. ஒத்திகை இல்லாத நாடகம் போன்றே அது இருக்கும். இதனால் கடந்த காலங்களில் ஆசிரியர்கள் பாடக்குறிப்புடன் தன் கடமையை செய்வனே செய்து வந்தனர். காலத்தின் தேவைக்கேற்பவும் உலகில் ஏனைய நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாகவும் ஆசிரியரின் ‘நிலைமாற்றம்’ வகிபாகத்திற்கு உறுதுணையாகவும் குழுக்கற்பித் தலுக்காக 5E இனை அர்ப்பணிப்புடன் செயற்படுத்த வேண்டியது வெற்றிகரமான ஆசிரியரின் கடமையாகும்.

இந்த 5E களும்

E1 :	Engagement	-	இணைதல்
E2:	Exploration	-	தேடல்
E3:	Explanation	-	விளக்கல்
E4:	Elaboration	–	விரித்தல்
E5:	Evaluation	–	மதிப்பீடு ஆகும்.

இந்த நடைமுறை வகுப்பறைக்கு மட்டுமல்ல, எமது நடைமுறை வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஒத்துப் போகக் கூடியதாகும். அதேவேளை ஒவ்வொரு E களும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட தாகும். இவற்றை ஒவ்வொன்றாக எடுத்து நோக்குவோம்.

E1: Engagement – **இணைதல்**

வகுப்பறை எஜமானர்களுக்கு வழிகாட்டுவதற்காக வளவாளர் என்ற நடிப்பங்குடன் வகுப்பறைக்குள் நுழையும் ஆசிரியர் ஒருவர் நடத்த வேண்டிய முதற்பணி இதுவாகும். பலதரப்பட்ட உடல், உள, சமூக பிரச்சினை களால் நசுக்கப் பட்டுள்ள மாணவர்களை மீட்டு தன் வழியே இழுப்பதற்கு ஆசிரியர் கையாளும் உத்தியே ‘இணைதல்’ ஆகும். மன ஒருமைப்பாடு, பாடத்தில் நாட்டம், இதமான மனநிலை, முன்னறிவை மீட்டல், தேடலுக்கான ஆயத்தம் என்பனவற்றை ஏற்படுத்துவதற்கு இது வழிவகுக்கும். நடைமுறையில் பின்பற்றப்படும் பாடம் பிரவேசம் என்பதற்கு ஒத்ததாக உள்ளது.

மாணவன் முதலில் தன்னுடனும், அடுத்து ஆசிரியருடனும் இறுதியாக பாடத்துடனும் பொருத்தப்பாடு அடைவதன் காரணமாக இதற்கு ‘இணைதல்’ என்ற பெயர் மிகப்பொருத்தமாகும். இணைதல் செயற்பாடு இல்லையேல் இலக்கு எட்டப்படுவது சாத்தியமற்றதாகும். ஒரு வகுப்பறை எத்தகைய உயிரோட்டமாக இருக்கப்போகின்றது என்பதனை ‘இணைதல்’ செயற்பாடு முன்கூட்டியே தெரிவித்து விடக்கூடியது.

கல்வி உளவியலில் பவ்லோவின் தூண்டி – துலங்கல் கொள்கை யுடன் இது தொடர்புபட்டுள்ளது. இச்செயற்பாட்டினூடாக மாணவரிடையே பெரும் துலங்கலை ஏற்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான தூண்டியை

ஆசிரியர் கையாளவேண்டும். பாடம், பாடவிடயம், படிப்பு என்பன கசப்பான ஒரு மருந்து என்ற எண்ணங்களுடன் இருக்கும் அதிகமான மாணவர்களுக்கு இனிப்பான ரொனிக் கொடுப்பதற்கு ஒப்பமான நடவடிக்கையே இதுவாகும். ஒதுக்கப்பட்ட பாடவேளையில் (10- 20)% நேரத்தினை இதற்கு பயன்படுத்த முடியும் . ஆசிரியர் பின்வரும் உத்திகளை 'இணைதல்' செயற்பாட்டிற்காக கையாள முடியும்.

- வினாக்களை முன்வைத்தல்.
- படங்கள், செய்தித்தாள், கவிதை, கதைபோன்ற தூண்டிகளைப்
- பயன் படுத்தல்.
- விடய ஆய்வை முன்வைத்தல்
- சம்பாசனை, வகிபாகமேற்று நடித்தல்.

வளவாளரான ஆசிரியர் தான் நடத்தப்போகும் செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு மாணவனை செயற்பாட்டுடன் இணைக்கும் நோக்கில் இதனை பொருத்தமான முறையில் 'பிரவேசப்பெட்டி' இல் ஆசிரியர் எழுதிவருவது அவசியமானதாகும்.

E2: Exploration - தேடல்

இணைதல் செயற்பாட்டின் போது மாணவர்களுக்கு விருப்பமான இனிப்பான ரொனிக்கைக் கொடுத்த ஆசிரியர் ஒருவர் மாணவரை உற்சாகப்படுத்தி தைரியத்துடனும் ஆர்வத்துடனும் தேடலில் ஈடுபடுத்தி உரிய தீர்வை அறிந்து கொள்ள வழிகாட்டும் செயற்பாடே 'தேடல்' எனப் படுகிறது. இது கற்றல் செயற்பாட்டின் இதயப்பகுதியாகும். மாணவர்கள் எந்தளவுக்கு தேடலில் ஈடுபடுகின்றார்களோ அந்தளவிற்கு பாடவிடயத்தில் 'முழுமை' பெற்றவர்களாக மாறவும் இடமுண்டு மேலும் எதிர்காலத்தில் ஒரு சிறந்த ஆய்வாளனாக உருமாற்றம் பெறுவதற்கும் வாய்ப்பு அதிகமாகும். தேடல் நிகழ்வின் போது ஆசிரியர் பின்வரும் உத்திகளை கையாள முடியும்.

- குழுக்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல்.
- குழுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரம் விநியோகித்தல்.
- முன்வைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

பொதுவாக குழுக்களின் எண்ணிக்கை நிரந்தரமானதாகவும், அதே உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இருப்பது மாணவரிடையே தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்த வழிவகுக்கும். இதனால் குழுக்கள் திட்டமிடப் பட்ட முறையில் மாற்றம் செய்யப்படுவது உளவியல் சார் தேவையாகும். தங்கள் ஒவ்வொரு பணிகளையும் தாங்களாகவே தீர்மானிக்க ஆசிரியர் மாணவருக்கு வழிகாட்டுதல் வேண்டும். அதேவேளை அனைத்து மாணவர்களையும் ஏதுமோர் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்த ஆசிரியர் முயல வேண்டும். குழச் செயற்பாட்டிற்காக நியமிக்கப்படும் தலைவர்களை விட வெளிப்படு தலைவர்கள் வினைத்திறன் மிக்கவராக இருப்பார்கள்.

E3: Explanation – விளக்கல்

ஆபிரகாம் மாஸ்லோ தேவைக்கொள்கையில் கூறியது போன்று ஒவ் வொரு மாணவரும் சுயதிறனில் நிறைவை அடைவதற்கும், கணிப்பை பெறுவதற்கும் இயல்பூக்கம் கொண்டவராக இருப்பார்கள். முதலில் விருப்போடு பாடத்துடன் இணைந்து, பின்னர் ஆர்வத்துடன் தேடியும் தாம் கண்டறிந்தவற்றை தமது சகபாடிகள், ஆசிரியர் முன்னிலையில் ஒப்புவித்து அதன் மூலம் கணிப்பை பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் சந்தர்ப்பமே 'விளக்கல்' எனப்படும். "சந்தர்ப்பம் கிடைக்கும் போது சாதனைகள் பிறக்கும்" என்ற நெப்போலியனின் கூற்றுக்கு இந்த "விளக்கல்" செயற்பாடு களம் அமைக்கின்றது. அதேவேளை மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் 'கவின் நிலை' கொண்டதாக வகுப்பறை மாறுபடுவதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. இதனைவிட ஆளுமை விருத்தி, தொடர்பாடல் தேர்ச்சி என்பவற்றையும் 'விளக்கல்' செயற் பாட்டினூடாக மாணவர்கள் அடைந்து கொள்வர்.

மாணவர் சிறப்பான முறையில் தமது கருத்தினை முன்வைக்கும் போது ஆசிரியரும் மாணவர்களும் செவிமடுத்தல் அவசிய மானதாகும். இதற்கு ஏதுவாக மாணவர் குழுக்களாக தொடர்ந்தும் இருந்து தமது பணிகளை மேற்கொள்வதை விடுத்து 'முழுவகுப்பு' அமைவிட ரீதியாக, அனைத்து மாணவர்களையும் அமரச்செய்து ஆசிரியர் வழி காட்டல் வேண்டும். ஒவ்வொரு குழுக்களும் முன்வைப்பு செய்தபின் ஆசிரியர் மிக நன்று, நன்று, சராசரி, விருத்தியடைய வேண்டும் போன்ற பாராட்டுக்

களை வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்துதல் முக்கியமானதாகும். இதன்மூலம் 'விளக்கல்' செயற்பாடு மேலும் விருத்தியடைவதற்கு வாய்ப்பு அதிகரிக்கும்.

E4 Elaboration - விரித்தல்

பாடவிடயங்களை மேலும் விரிவுபடுத்தி 'சரியான எண்ணக் கருவாக்கம்' உருவாக நடைபெறும் செயற்பாடு 'விரித்தல்' ஆகும். ஒரு சிறந்த ஆசிரியரின் பாடப்புலமை, தூரசிந்தனை, தனித்துவம் என்பன வெளிப்படும் சந்தர்ப்பமும் இதுவாகும். பாடவிடயம் தொடர்பாக பல சந்தேகங்களுடனும் குழப்பங்களுடனும் இருக்கும் மாணவர்களுக்கு அமிர்தம் கிடைக்கும் வேளையும் இதுவே தான். இங்கு மூன்று முக்கிய அம்சங்கள் ஒன்றின்பின் ஒன்றாக நடைபெறும்.

1. குறை நிரப்புதல்

ஒரு குழு முன்வைத்த கருத்து தொடர்பாக குழுவில் உள்ள ஏனையவர் தமது கருத்தை கூறி விடயங்களை மேலும் விரித்தல் 'குறை நிரப்புதல்' ஆகும்.

2. இற்றைவரை முற்றாக்கல்

ஒரு குழுவின் முன்வைப்பு தொடர்பாக வகுப்பிலுள்ள ஏனையகுழு உறுப்பினர்கள் தமது கருத்தை முன்வைத்தல் 'இற்றை வரை முற்றாக்கல்' எனப்படும். இச் செயற்பாடு மூலம் பாட விடயம் நன்கு அலசி ஆராயப் படும். அதே வேளை மாணவரிடையே போட்டி மனப்பான்மையை தேடலின் ஆர்வத்தையும் ஏற்படுத்தும். மேலும் மாணவர்கள் பல இடங் களிலும் பல விடயங்களை தேடி அறிந்து வருவதற்கும் பல புத்தகங் களை வாசிப் பதற்கும் இதன் மூலம் வழி அமைத்துக் கொடுக்கப்படும்.

3. மீளாய்வு

மாணவர் கூறத்தவறிய விடயங்களையும், தெளிவில்லாமல் கூறிய விடயங்களையும் ஆசிரியர் கூற நினைத்து வந்த அம்சங்களையும் ஆசிரியர் முன்வைத்து பூரண நிறைவை ஏற்படுத்தும் செயற்பாடு 'மீளாய்வு எனப்படும்.

உதாரணமாக யானையின் உருவத்தை அறியாத ஒருவருக்கு படம் வரைந்து காட்டவேண்டிய ஒரு தேவை ஏற்பட்டுள்ளது என்போம். மாணவர்களை ஐந்து குழுக்களாக பிரித்து தும்பிக்கை, முகம், கால், உடம்பு, வால் ஆகிய ஒவ்வொரு பகுதிகளையும் வரையும்படி ஒவ்வொரு குழுவுக்கும் அறிவுரை வழங்கலாம். அவர்கள் வரைந்துள்ள உருவத்தை முன்வைப்பு செய்யும் பொழுது யானையின் உருவம் முழுமை பெறாத தாக அமையும். ஆசிரியர் சரியான பரிமாணங்களுக்கு ஏற்ப யானையின் உருவத்தை உண்மைத்தன்மை கெடாதவாறு பொருத்துகின்ற செயற்பாடே 'மீளாய்வு' ஆகும். இங்கு பாட விடயம் தொடர்பாக சரியான எண்ணக் கருவாக்கம் உருவாக்கப்படும்.

இவ்வேளையில் ஆசிரியர் பாடப்பொருள் சுருக்கத்தை கரும்பல கையில் எழுதிக்காட்டுதல் வேண்டும். அப்போது மாணவர்கள் குறிப் பெடுக்க உதவியாக இருக்கும். இதன் மூலம் வீட்டில் மாணவரின் கொப்பி களை பார்வையிடும் ஆர்வமுள்ள பெற்றோரையும் திருப்தி செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. இப் பாடப் பொருள் சுருக்கத்தை ஆசிரியர் தெளிவாக திட்டமிட்டு 'மீளாய்வு பெட்டி' இல் எழுதிக் கொண்டு வருதல் வேண்டும். இம் மீளாய்வு செயற்பாட்டு வேளையில் ஆசிரியரின் பாடப் புலமை வெளிப்படுவதால் இது ஆசிரியர் தொடர்பான தெளிவான புலக் காட்சியை மாணவருக்கு ஏற்படுத்தும்.

வகுப்பறையில், விளக்கல், விரித்தல் ஆகிய இரு செயற்பாடுகளும் முழுவகுப்பு அமைவில் ஒரே நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நடை பெறும்.

E5: Evaluation – மதிப்பீடு

எந்தவொரு செயற்பாட்டிலும் 'மதிப்பீடு' நடைபெறுவது அத்தியா வசியமாகும். பலம், பலவீனம், நலிவு, சுழிவுகள் என்பனவற்றை மதிப்பீடு காட்டித்தரும். மதிப்பீடு நடைபெறுவது 'அறுவடை' செய்யப்படுவதற்கும் ஒப்பானதாகும். மதிப்பீடு தரம் வாய்ந்தாக அமைவதற்கு கணிப்பீடு அவசியமானதாகும். இதனால் கணிப்பீடு, மதிப்பீடு என்பன ஒன்றுட னொன்று தொடர்புபட்ட இரு விடயங்களாகும்.

கணிப்பீடு : Assessment

அடையவேண்டிய இடத்தை நோக்கி மாணவரை உந்திவிடுதல் கணிப்பீடு ஆகும்.

மதிப்பீடு : Evaluation


மாணவனால் அடையப்பட்ட இடத்தின் மட்டத்தை தீர்மானித்தல் மதிப்பீடு ஆகும்.

உயரம் பாய்தல் போட்டியில் பங்குகொள்ளும் ஒருவர் முதல் தடவையாக பாயும் போது தவறிவிடுகின்றார் எனக் கொள்வோம். அவர் மீண்டும் இலக்கை அடைவதற்காக சகபாடிகளும் ஆசிரியர்களும் தைரியமூட்டி, உற்சாகப்படுத்தி, நுணுக்கங்களை தெரியப்படுத்துவது வழமை. இச்செயற்பாடு. 'கணிப்பீடு ஆகும். இதன் காரணமாக போட்டியாளர் மீண்டும் அந்த இலக்கை பாய்ந்து விட்டார் எனின் நடுவர் அளவு நாடாமூலம் அந்த உயரத்தை அளந்து குறித்துக்கொள்வார். இச்செயற்பாடு மதிப்பீடு ஆகும். ஆகவே மதிப்பீட்டை பெறுமதியாக்க கணிப்பீடு அவசியம் என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளலாம். பரிசோதனை மூலம் ஸ்கின்னர் முன்வைத்த நிரலித்த போதனைக்கான செயற்பாடே கணிப்பீடும் மதிப்பீடும் ஆகும்.

வகுப்பறையில் தேடல் (E2) செயற்பாட்டின் ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர் கணிப்பீட்டுப் பணியை தொடங்குதல் வேண்டும். ஒவ்வொரு மாணவர்களையும் ஆசிரியர் அவதானித்து, அவர்களுக்கு பொருத்தமான ஆலோசனைகளை முன்வைப்பதும் அவசியமானதாகும். மேலும் கணிப்பீடு நடைபெறும் வேளைகளில் இரு விடயங்களை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும்.

1. **பின்னூட்டல் (Feed Back):** மாணவரின் இயலாமைகள், நலிவுகள் என்பன இனங்காணப்பட்டு அவற்றை மேம்படுத்திக் கொள்வதற்காக ஆசிரியரினால் நடாத்தப்படும் செயற்பாடு இதுவாகும். விசேடமாக மெல்லக்கற்போர் இங்கு கூடிய கவனம் செலுத்தப்படுவார்கள்.
2. **முன்முகவூட்டல் (Feed Forward)**: மாணவரின் இயலுமைகள், வலிவுகள் இனங்காணப்பட்டு அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காக

ஆசிரியரினால் நடாத்தப்படும் செயற்பாடு இதுவாகும். இங்கு சராசரி மாணவர்களும் மீத்திறன் மாணவர்களும் கூடிய கவனம் செலுத்தப் படுவார்கள். கணிப்பீடு. மதிப்பீட்டின் போது ஆசிரியர் குறைந்தது ஐந்து நியதிகளை அமைத்துக் கொள்ளமுடியும். அவை



1. பாடவிடயம் சார்ந்த அறிவு (K)
2. பாடவிடயம் சார்ந்த மனப்பாங்கு (A)
3. பாடவிடயம் சார்ந்த திறன் (S)
4. அன்றாட வாழ்வுக்கு வேண்டிய ஓர் முக்கிய ஆற்றல் (P1)
5. மேலும் ஓர் ஆற்றல் (P2)

முடிவுரை :

பல சிறப்பம்சங்களை கொண்டது குழுக்கற்பித்தலுக்கான இந்த 5E செயற்பாட்டுத் திட்டம். இது செம்மையாக நடைமுறைப்படுத்தப்படும் போது ஒரு மாணவன் பூரண புலமை பெற அதிக வாய்ப்புள்ளது. இதன் மூலம் எமது நாட்டு மாணவர்களின் ஆற்றல் மற்றும் தராதரம் சர்வதேச அந்தஸ்தை எட்டிப்பிடிக்க வழி ஏற்படும். இது தற்கால ஆசிரியர் சமூகத்தின் கைகளிலே தங்கியுள்ளது. ஏனெனில் அனைத்து செயற்பாட்டினதும் திறவுகோல் ஆசிரியர்களேதான்.

குழுக்கற்பித்தலை நடாத்தும் ஆசிரியர் ஒருவருக்கு பின்வரும் சவால்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

- நேரப் பற்றாக்குறை.
- அசிரியருக்கு போதிய விளக்கமின்மை.
- ஆசிரியரின் எதிரான மனப்பாங்கு.
- அதிபரின் உற்சாகமும் ஆலோசனையும் இன்மை.
- வளவாளர்களிடையே இது தொடர்பான ஒருமைப் பாடின்மை.
- வினைத்திறன் மிக்க மேற்பார்வை இன்மை.

போன்ற பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஏதுவா யிருப்பினும் ஒரு ஆசிரியர் ‘மாற்ற முகவர்’ என்றஅடிப்படையில் வகுப் பறைக்குள் இதனை நிறைவேற்றவேண்டிய பெரும் பொறுப்புமிக்கவராவார்.

8. உள்ளடங்கற் கல்வியும் அதன் முக்கியத்துவமும்

அறிமுகம் :

மனிதனின் அடிப்படை உரிமைகளில் முதன்மையானது கல்வி யாகும். கல்வி உரிமையைப் பெற்றுக்கொள்வதன் மூலமே ஒரு பிள்ளை தனது ஏனைய அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். கல்வியானது மக்களை வலுவூட்டுகின்றது. அத்துடன் ஏனைய உரிமைகளை அனுபவிப்பதற்கு அடிப்படையாகவும் தவிர்க்க முடியாததாகவும் உள்ளது.

1948 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் பின்வருவமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> “கல்வி பெறும் உரிமை யாவருக்கும் உள்ளது. கல்வி இலவசமாக அமையவேண்டும். குறைந்தது ஆரம்ப, இடைநிலை மட்டங்களி லாவது கல்வி இலவசமானதாக இருத்தல் அவசியம். கல்வியானது அடிப்படைச் சுதந்திரத்தையும் மனித உரிமைகளை யும் மதிப்பதாக வும், மனிதனின் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். அனைத்தும் சமவாய்ப்பின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.”

இதனடிப்படையில் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைகளுக்கும் கல்வியை வழங்கவேண்டிய கடமைப்பாடு அந்நாட்டு அரசிற்குள்ளது. ஆரம்ப கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை தொடர்வதற்கான வாய்ப்பு அனைவருக்கும் இருக்கவேண்டும். குறிப்பாக யாவருக்கும் கல்வி சமத்துவமான முறையில் வழங்கப்பட வேண்டியது அவசியமான தாகும். ஆயினும் நடைமுறையிலுள்ள கல்வி முறையில்

- பொருளாதார ரீதியாக பின்தங்கிய சிறுவர்கள்
- உடல் - உள குறைபாடுடைய சிறுவர்கள்
- இயலாமை உள்ள பிள்ளைகள்
- இடம்பெயர்ந்த சிறுவர்கள்
- தெருவோரச் சிறுவர்கள்
- நிறுவனப் பராமரிப்பிலுள்ள சிறுவர்கள்

போன்ற வகுதியினரை உள்வாங்குவதில் திருப்தியின்மை காணப்படுவதாகப் பரவலாகக் குறை கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, பாடசாலைக்கு உள்வாங்கப்பட்ட மாணவரிடையே கல்வியை வழங்குவதில் சமத்துவமமின்மை காணப்படுவதாகவும், மற்றொரு குறைபாடு முன்வைக்கப்படுகின்றது. ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்கள் பெரும்பாலும் ஒரே வயதுக் குழுவினராகவே காணப்படுவர். ஆயினும் இவர்களிடையே பால்நிலை, மதம், இனம், குடும்ப சூழல், குடும்ப அந்தஸ்து போன்ற தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றுடன் சேர்ந்து இவர்களது நோய், உடல் - உள குறைபாடுகள், திறமை மட்டம், முந்திய கல்வித்தகைமை என்பனவும் கல்விச் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் வகுப்பறையிலுள்ள அனைத்து மாணவர்களினதும் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் வகுப்பறைச் செயற்பாடுகள் யாவும் அமைதல் வேண்டும். அவ்வாறு அமைந்தால் மாத்திரமே “கல்வியில் சமவாய்ப்பு” என்பது பொருத்தமானதாக அமையும். ஆயினும் அநேகமான வகுப்பறைகளில் சாதாரண நிலமைகளில் காணப்படுகின்ற மாணவர்களை மாத்திரம் மையப்படுத்தியே கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதாக பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கல்வியில் உள்வாங்குதல், சமவாய்ப்பளித்தல் ஆகியவற்றில் மேற்குறிப்பிட்ட குறைபாடுகளைக் கருத்தில் கொண்டும் மனித உரிமைகள் தொடர்பான அழுத்தம் காரணமாகவும் ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி வழங்குவதனை உறுதி செய்வதற்காகச் சர்வதேச ரீதியில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் மிக முக்கியமானவையாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடமுடியும்.

- 1989 - பிள்ளைகளின் உரிமை பற்றிய ஐ. நா. பிரகடனம்.
- 1990 - எல்லோருக்கும் கல்வி தொடர்பான உலக மகாநாடு. (ஜொம்ரைன் பிரகடனம்)
- 1993 - குறைபாடுடைய பிள்ளைகளுக்கு சமவாய்ப்பளிக்கும் ஐ. நா. பிரகடனம்.
- 1994 - விசேட தேவைகள் கல்வி தொடர்பான சலமன்கா பிரகடனம்.
- 2000 - உலக கல்வி பொதுமன்று (Darkar – 2000)
- 2001 - குறைபாடுடையோர் கல்வி பெறுவதற்கான உரிமை.
- 2005 - ஐ.நா வின் குறைபாடுடையோருக்கான உடன்பாடு.

எல்லோருக்கும் கல்வி (Education for all - EFA):

1990 ஆம் ஆண்டில் தாய்லாந்தின் Jomtien நகரில் இடம்பெற்ற சர்வதேச மகாநட்டில் "எல்லோருக்கும் கல்வி" என்ற கருப்பொருள் உருவாக்கப்பட்டது. மனித உரிமையின் அடிப்படையாகக் கல்வி இருப்பதனாலும் சமூக - பொருளாதார - அரசியல் விரிவாக்கத்திற்கு கல்வி அத்திவாரமாக இருப்பதனாலும் "எல்லோருக்கும் கல்வி" என்பது முக்கியத்துவம் பெறுவதாக இம்மகாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. மேலும் எவ்வித வேறுபாடுமின்றி நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் கல்வி வழங்கப்படுவதனை நோக்கமாகக் கொண்டு ஆறு இலக்குகள் இம் மகாநாட்டில் முன்வைக்கப்பட்டன. அவையாவன

1. முன்பிள்ளை பருவ பராமரிப்பையும் கல்வியையும் விரிவுபடுத்தல்.
2. அனைவருக்கும் இலவசமானதும் கட்டாயமானதுமான ஆரம்பக் கல்வியை வழங்குதல்.
3. இளைஞர்களுக்கும் வளர்ந்தோர்களுக்குமான கற்றலையும் வாழ்க்கைத் திறனையும் முன்னேற்றுதல்.
4. வளர்ந்தோருக்கான எழுத்தறிவை 50 சதவீதத்தால் அதிகரித்தல்.
5. பால் ரீதியான சமத்துவத்தை 2015 அளவில் அடைதல்.
6. கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துதல்.

இவ் இலக்குகள் யாவும் 2015 ஆம் ஆண்டளவில் எட்டப்படல் வேண்டும் எனவும் இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இலங்கை உட்பட 192 நாடுகள் இப்பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டன.

விசேட தேவை உடையவர்களுக்கான சர்வதேச கல்வி மகாநாடு (Salamanca Statement – 1994) :

1994 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் Salamanca நாகரில் இக்கல்வி மகாநாடு நடைபெற்றது. UNESCO இன் அனுசரணையுடன் ஸ்பெயின் நாட்டு அரசு இம் மகாநாட்டை நடாத்தியது. 92 அரசாங்கங்களையும் 25 சர்வதேச அமைப்புக்களையும் சேர்ந்த 300 பேருக்கு மேற்பட்டோர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

- சர்வதேச மனித உரிமைப்பிரகடனம் (1948)
- எல்லோருக்கும் கல்வி தொடர்பான உலக மகாநாடு (1990).
- குறைபாடுடைய பிள்ளைகளுக்கான சமவாய்ப்பளிக்கும் ஐ. நா பிரகடனம் (1993).

என்பனவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு மகாநாடாகவே இது நடைபெற்றது. மிக முக்கியமாக "உள்ளடங்கல் கல்வி" என்பதனை சர்வதேச ரீதியில் விருத்தி செய்வதனையே பிரதான நோக்கமாக இது கொண்டிருந்தது. இம்மகாநாட்டில் ஐந்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை

1. ஒவ்வொரு குழந்தைகளும் கல்விக்கான அடிப்படை உரிமையைக் கொண்டுள்ளனர்.
2. ஒவ்வொரு குழந்தைகளும் தனித்துவமான இயல்புகள், ஆர்வம், இயலுமை, கற்றல் தேவைகளைக் கொண்டுள்ளனர்.
3. பல்வேறுபட்ட குழந்தைகளுக்கு ஏற்ப கல்வி அமைப்பு வடிவமைக்கப் படுவதோடு அதற்கான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப் படுவது கட்டாயமானது.
4. விசேட தேவைசார் குழந்தைகள் கல்வியில் உள்வாங்கப்படுவதோடு வழமையான பாடசாலையிலே அவர்கள் கற்பதற்கு வாய்ப்பளித்தல்.
5. வழமையான பாடசாலைகளில் போதுமான வசதிகளுடன் விசேட தேவைகளையுடைய மாணவர்களை உள்வாங்குவதோடு கற்பித்தல் முறையானது முழுமையாக மாணவர் மையமாக அமைந்திருத்தலும் அவசியமானது.

விசேட தேவை சார் குழந்தைகள் :

"விசேட தேவைகள் சார் பிள்ளைகள் என்போர் உள, உடல், சமூகப் பண்புகளில் சாதாரண மாணவரை விட வேறுபடுவோர்."

- S. A. Kirk (1986)

ஒரு வகுப்பறையில் பல்வேறுபட்ட மாணவர்களை காணமுடியும். இவர்கள் ஒவ்வொருவரினதும் விருப்பு, வெறுப்பு, கவர்ச்சி, உணர்வுகள் எல்லாம் வேறுபட்டவை. இதனால் இவர்கள் ஒவ்வொருவரும் விசேட தேவைசார் குழந்தைகள் தான் என்ற வாதங்களும் உண்டு.

கற்றலில் இடர்படும் குழந்தைகளும் கற்றலின்பால் கூடிய ஈடுபாடு காட்டும் குழந்தைகளும் விசேட தேவைசார் குழந்தைகள் எனவும் கருதப்படுகின்றனர். விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள் பின்வருவன வற்றில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கொண்டிருப்பர்.

- புலன்சார் குறைபாடு.
- உடல்சார் மற்றும் உடனலக் குறைபாடு.
- அறிவுசார் குறைபாடு.
- நடத்தைசார் குறைபாடு.
- பேச்சு மற்றும் மொழிசார் குறைபாடு.
- கற்றலில் குறைபாடு.
- மீத்திறன் அல்லது திறமையான மாணவர்கள்.

William L. Heward என்பவர் பொதுவாக விசேட தேவைகள் உள்ளவர்கள் என்போர் பின்வரும் வகைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கொண்டிருப்பர் என கருதுகின்றார்.

- கற்றல் இடர்பாடு.
- நடத்தைச் சீர்கேடு.
- மந்த புத்தி.
- தொடர்பாடல் ஒழுங்கினம்.
- கேட்டல் குறைபாடு.
- பார்வை குறைபாடு.
- மீத்திறன் உடையோர்.
- உடல் ஊனமுற்றோர்.

பொதுவாக விசேட தேவையுடைய குழந்தைகளை பின்வரும் ஐந்து வகைப்படுத்தலுக்குள் உட்படுத்த முடியும்.

- மீத்திறன் உடையோர்
- மெல்லக் கற்போர்
- உளக் குறைபாடுடையோர்
- உடல் குறைபாடுடையோர்
- நெறி பிறழ்ந்தோர்

உள்ளடங்கல் கல்வி :

"எல்லோருக்கும் கல்வி" என்ற அடிப்படையில் குறைபாடு உடைய பிள்ளைகள் அல்லது குறைபாடற்றும் கல்வி மறுக்கப்பட்ட பிள்ளைகள் அனைவரையும் சாதாரண வகுப்பறையில் ஒன்று சேர்ப்பதே உள்ளடங்கல் கல்வியின் பிரதான நோக்கமாகும். இவ்வாறான வகுப்பறைகளில் கல்வியில் பங்குபற்றுதலும் கல்விக்கான சமவாய்ப்பும் ஊக்குவிக்கப் படுகின்றது. அதுமட்டுமல்ல இவ்வாறான மாணவர்களிற்கு ஏற்படக்கூடிய உளவியல் பாதிப்புகளும் தவிர்க்கப்படுகின்றது. தன்னால் முடியாது, தனக்கும் கல்விக்கும் வெகுதூரம் மற்றும் தான் எதற்கும் பொருத்தமற்றவர் என்று எதிர்மனப்பாங்கில் உள்ள மாணவர்களை சாதகமாக்கிக் கொள்வதில் உள்ளடங்கல்வி பெரும் பங்காற்றுகின்றது. உள்ளடங்கல் கல்வியினூ டாக இயலாமை உடைய மாணவர்களும் சாதாரண மாணவர்களும் ஒன்றிணைந்து கொள்வதற்கு வழி ஏற்படுகின்றது. இவ் ஒன்றிணைப்பானது நான்கு முறைகளில் நடைபெறலாம்.

- **உடல் தொடர்பான ஒன்றிணைப்பு :**

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் சாதாரண பிள்ளை களுக்குமிடையே உடல் ரீதியான இடைவெளியை இத்தகைய ஒன்றிணைப்பு குறைப்பதற்கு முயல்கின்றது.

- **செயற்பாட்டு ரீதியான ஒன்றிணைப்பு :**

வகுப்பறைச் செயற்பாடுகளில் இரு சாராரும் இணைந்து பணியாற்றுவதற்கு உள்ளடங்கல் கல்வி மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

குழுச்செயற்பாடு, விளையாட்டு, வகுப்பறைக் கடமைகளில் விசேட தேவை உடைய பிள்ளைகள் பங்காற்றும் பொழுது அவர்களது "ஆளுமை" விருத்தி செய்யப்படுகின்றது.

- **சமூக ஒன்றிணைப்பு :**

இதன் மூலம் சமூக ரீதியான இடைவெளி குறைக்கப்படுகின்றது. தொடர்பாடல் திறன், ஒருவருக்கொருவர் உதவுதல் போன்ற விழுமிய பண்புகள் விருத்தி செய்யப்படுகின்றன. இதன் மூலம் சமூகமயப்படுத்தலுக்கு அத்திவாரம் இடப்படுகின்றது.

- **சமுதாய ஒன்றிணைப்பு :**

சமூகத்தில் தானும் ஒரு பிரஜை என்ற நம்பிக்கை இதன் மூலம் உருவாகின்றது. சமுதாய பொறுப்புக்களை முன்னின்று ஏற்றுக்கொள்வ தற்கும், இணைந்து பணியாற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

உள்ளடங்கல் கல்வியின் வரைவிலக்கணம் :

உள்ளடங்கல் கல்வி என்பது "சாதாரண வகுப்பறையில் அனைத்து மாணவர்களையும் ஒன்றிணைத்து வழங்கப்படும் கல்வி" என இலகுவாக விளங்கிக்கொள்ளமுடியும். முக்கியமாக விசேட தேவையுள்ள மாணவர்கள் தமது வீட்டுச்சூழலில் தமது உறவுகளுடன் அயலிலுள்ள பாடசாலையில் கல்வியை தொடர்வதே இதன் பிரதான நோக்கமாகும். இம்மமாணவர்களும் வகுப்பறையில் ஓர் அங்கமாகும். (Special needs students are "a part" of the class room not "apart") ஏனைய மாணவர்களுக்கு கிடைக்கின்ற வசதிகள், வாய்ப்புக்கள், உரிமைகள் அனைத்தும் இவர்களுக்கும் உள்ளடங்கல் கல்வியினூடாக கிடைக்கின்றது. "உள்ளடங்கல் கல்வி" என்பதற்கு கல்வியாளர்கள் பல வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர்.

மிட்லர் (Mittler, 2000) என்பவர் "பாடசாலை உள்ளடங்கல் என்பதற்கான ஒரு உத்தியோக பூர்வமான அங்கீகரிக்கப்பட்ட வரைவிலக் கணம் கிடையாது எனவும் பின்வரும் விடயங்கள் அதில் உள்ளடங்கப்படல் வேண்டும்" எனவும் கூறுகின்றார்.

- எல்லா மாணவர்களும் வேண்டிய உதவிகளுடன் வழமையான

பாடசாலைகளில் சாதாரண வகுப்பறையில் இணைதல்.

- அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு பாடசாலைகளும் கலைத்திட்டம், போதனா முறைகள், கணிப்பீட்டு முறைகள் என்பனவற்றை இயைபாக்கம் செய்தல்.
- உள்ளடங்கல் கல்வியை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர் பாடசாலை சமூகத்தின் உச்ச உதவியைப் பெற்று கற்றல் – கற்பித்தல் செயற்பாடு களை பொறுப்பேற்றலும் தொடர்ச்சியாக அதனை முன்னெடுத்தலும்.

இத்தகைய கருத்துகளுக்கு அமைவாக பால், இனம், மொழி, திறன், வறுமை, நோய், இயலுமை போன்ற வேறுபாடின்றி அனைத்து மாணவர்களையும் சாதாரண வகுப்பறையில் ஒன்றிணைப்பு செய்யும் நடைமுறையே "உள்ளடங்கல் கல்வி" எனக் கூறலாம். இதற்கமைவாக பாடசாலைகளும் தமது நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்பாடுகள் அனைத்தை யும் இயைபாக்கம் செய்யவேண்டியதும் அவசியமானதாகும்.

உள்ளடங்கல் கல்வி தொடர்பான ஏழு கொள்கைகள் :

1. அனைத்து மாணவர்களுக்கும் கற்பித்தல்

மாணவர்கள் வெவ்வேறு வழிகளில் கற்கின்றார்கள். கற்பித்தலினூடாக மாணவர்களின் திறன்களை விருத்தி செய்யவேண்டிய பொறுப்பு ஆசிரியர் களுக்கு உண்டு. ஒரு பாட உள்ளடக்கத்தை மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஒரே நேரத்தில் பல உத்திகளை ஆசிரியர் கையாள வேண்டியுள்ளது. இதற்காக ஆசிரியர் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

- ஒரு பாடத்தை கற்பிப்பதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கையாளுதல் பற்றி சிந்தித்தல்.
- ஏனைய ஆசிரியர்களுடன் "எவ்வாறு கற்பிப்பது" என்பது பற்றி கலந்துரையாடல்.
- வகுப்பறை அனுபவங்களை ஏனைய ஆசிரிய நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.
- மாணவர்களின் கருத்துக்கள், வினாக்களைக் கவனமாகக் கேட்டல்
- மாணவர்களின் இயலுமை, பின்னணி என்பன வேறுபட்டுள்ளது என்பதனைக் கருத்தில் கொள்ளல்.

2. பல்வேறு ஒத்த தன்மைகளைத் தேடல்.

தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதலும் ஒத்த தன்மையை உறுதிப் படுத்தலும் மாணவர்களின் கற்றலில் பங்களிப்புச் செய்யக்கூடியவை. ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆற்றல்களும் இயலுமைகளும் இருக்கும். இவர்களது தனிப்பட்ட தன்மைகளை அறிந்து அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் கற்றலில் அவர்கள் சாதிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனுடாக அவர்கள் சுயஊக்கம் பெறவும் வாய்பு ஏற்படு கின்றது. மாணவர்களின் ஒத்த தன்மையை உறுதிசெய்வதற்கும் அதனை ஊக்குவிப்பதற்கும் ஆசிரியர் பின்வரும் வழிகளைக் கையாள முடியும்.

- செயற்பாட்டை உருவாக்குதல்.
  இதன் மூலம் தன் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளவும் தன் இயலு மையை நினைத்துப் பெருமை அடையவும் வாய்ப்பு கிடைக்கின்றது.
- மாணவர்களை செய்திட்டத்தில் ஈடுபடுத்தல்.
- மாணவர்களின்தனிப்பட்ட அனைத்து இயலுமைகளையும்ஊக்குவித்தல்.
- மாணவர்களுக்கு விருப்பமானதும் பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குதல்.
- ஒவ்வொரு மாணவர்களினாலும் சாதிக்கக் கூடிய விடயங்களைப் பற்றி கலந்துரையாடல்.
- ஒவ்வொரு மாணவர்களையும் ஏற்றுக்கொள்ளுதலும் மதித்தலும்.

3. தவறான அபிப்பிராயங்களை தவிர்த்தல்.

மாணவர்கள் தமது இயலாமை, நோய், குறைபாடு, முந்திய அனுபவம், குடும்பச் சூழல் காரணமாக கல்விச் செயற்பாடு தொடர்பாக பல தவறான அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பர். இத்தகை அவர்களின் கற்றலில் தடையை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். சரியானதும் பொருத்தமான துமான அணுகுமுறைகளைக் கையாண்டு இத்தகைய மாணவர்களின் எதிரான மனப்பாங்கை மாற்றி அமைக்கவேண்டியது ஆசிரியரின் பிரதான கடமையாகும்.

மாணவரிடையே காணப்படுகின்ற வேற்றுமை உணர்வையும், பொருத்தமற்ற நம்பிக்கைகளையும் இல்லாமல் செய்வதற்கு ஆசிரியர் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும்.

- அனைத்து மாணவர்களினதும் உணர்வுகள் மனப்பாங்குகள் பற்றி கலந்துரையாடல்.
- சம்பாசனைகளையும் பிரதிபலிப்புக்களையும் விருத்திசெய்தல்.
- தவறான நடத்தைகளை இனங்காண்பதற்கு உதவுதல்.
- தெளிவான விதி முறைகளையும் எல்லைகளையும் நிர்ணயித்தல்.
- தவறான அபிப்பிராயங்கள் தொடர்பான பயத்தை நீக்குதல்.

4. சமூக நீதியை விருத்தி செய்தல்.

உள்ளடங்கள் கல்வியில் உள்வாங்கப்பட்ட மாணவர்கள் வகுப்பறையிலுள்ள ஏனைய மாணவர்கள், கற்பிக்கின்ற ஆசிரியர்கள், பகுதித்தலைவர்கள், அதிபர் ஆகிய அனைத்து தரப்பினர்களாலும் விசேட தேவைசார் மாணவர்கள் ஏற்றுக்கொள்ளப்படலும் மதிக்கப்படலும் அவசியமானதாகும். அவ்வாறாயின் மாத்திரமே இம்மாணவர் பாடசாலைக்குத் தொடர்ச்சி யாகவும் விருப்புடனும் வருகைதர வாய்ப்பு ஏற்படும். அதுமட்டுமல்ல வகுப்பறையிலுள்ள ஏனைய மாணவர்கள் இவர்களுக்கு வேண்டிய உதவிகளை விருப்புடன் செய்வதற்கும் ஊக்கப்படுத்தப் படுவார்கள். இதற்காக சமூக நீதி, சமத்துவம் தொடர்பான கருத்துக்களை பாடசாலையில் விருத்தி செய்வது அவசியமானதாகும். சிறுவர் உரிமை, எல்லோருக்கும் கல்வி தொடர்பான விழிப்புணர்வுகளை பாடசாலை சமூகத்திற்கு ஏற்படுத்துவது பொருத்தமானதாகும். ஐ. நா. சபையினால் கடைப்பிடிக்கப் படுகின்ற முக்கிய சர்வதேச தினங்களைப் பாடசாலையில் நடைமுறைப் படுத்துவதன் மூலம் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தமுடியும்.

5. பொருத்தமான உபகரணங்களை தெரிவுசெய்தல்.

கற்பித்தலின்போது மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதற்கும் சரியான எண்ணக்கருவாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பொருத்தமான கற்றல் உபகரணங்கள் அவசியமானவையாகும். பொருத்தமான பாடப் புத்தகம், வர்ணப் படங்கள், கற்பித்தல் சாதனங்கள் என்பவற்றை ஆசிரியர் தெரிவது சிறப்பானதாகும்.

6. சமய, கலாசாரம் பற்றி கற்பித்தலும் கற்றலும்.

ஒவ்வொரு மாணவர்களும் தமது சமய கலாச்சாரத்தை பூரணமாக அறிந்திருக்கவேண்டும். அத்தோடு ஏனைய சமய கலாச்சாரங்களைப் பற்றியும் அறிய ஆவல் கொண்டவராக இருத்தல் வேண்டும். சகபாடிகளை மதிப்பதற்கும் அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் அவர்களது சமய, கலாச் சாரங்களை அறிந்திருப்பது அவசியமானதாகும்.

7. பொருத்தமான பாடத்தை ஒன்று சேர்த்தலும் உள்வாங்கலும்.

விசேட தேவையுடைய மாணவர்களின் இயலுமை, விருப்பு, கவர்ச்சி என்பன வேறுபட்டவைகளாகும். இதனால் இவர்களுக்கான கலைத்திட்டம் பொருத்தமான வழிகளில் இயைபாக்கம் செய்யப்படல் வேண்டும். வகுப்பறைக்குச் செல்கின்ற ஆசிரியர் ஒருவர் சாதாரண மாணவர்களையும் விசேட தேவையுடைய மாணவர்களையும் கருத்திற் கொண்டு பாடவிடயம், கற்பித்தல் முறை, கணிப்பீட்டுமுறை, ஊக்குவித்தல் போன்றவற்றில் வெவ்வேறான நடைமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமானதாகும்.

முடிவுரை :

ஒவ்வொரு குழந்தைகளும் நாட்டினது வளமாகும். அனைவருக்கும் தேவைகளும், உரிமைகளும் இன்றியமையாதவையாகும். முக்கியமாக அனைவருக்கும் கல்வி பொருத்தமான வேளையில் பொருத்தமான வழிகளில் கொடுக்கப்படல் வேண்டும். கல்வி கற்பதினூடாகவே ஒவ்வொரு வரும் நிறைவுடனும் கௌரவத்துடனும் வாழமுடியும். இனம், மதம், நிறம், பால், ஆற்றல், இயலுமை என்ற வேறுபாடின்றி அனைவரும் கல்வியில் உள்வாங்கப்படுவது முக்கியமானதாகும். அது மட்டுமல்ல அனைவருக்கும் சமமான கல்வி வழங்கப் படலும் வேண்டும். குறைபாடு டையவர், கைவிடப்பட்டவர், விசேட தேவை யுடையவர் அனைவரையும் கல்வியில் ஒன்றிணைக்கும் செயல்முறையே "உள்ளடங்கல் கல்வி" ஆகும். இதற்கான ஏற்பாடுகள், கோட்பாடுகள் அனைத்தும் பொருத்தமான முறையில் வகுக்கப்பட்டுள்ளன. இதனை செவ்வனே நடைமுறைப் படுத்துவது சமூகத்தின் கைகளில் தான் உள்ளது. அரசு இதற்கான வழிமுறைகளை ஊக்குவித்து வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது

அவசியம். சமூகம் இவர்களுக்கான கௌரவத்தையும் வாய்ப்பையும் வழங்குவதோடு பாடசாலை இவர்களை ஏற்றுக்கொண்டு ஊக்குவிக்க வேண்டும். விசேடமாக வகுப்பறைக்குச் செல்கின்ற ஆசிரியர் பணி மிகவும் சவாலானதாகும். வகுப்பறையில் உள்ளடக்கப்பட்ட மாணவர்களின் இயல்புகள், பின்னணி, தேவை, இயலுமை என்பனவற்றை அறிந்து அதற்கான பொருத்தமான கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவது மிக முக்கியமானதாகும். இதற்காக ஆசிரியர் தம்மை தயார்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும். விசேட தேவைசார் மாணவர்களின் இயல்புகள், அவர்களது தேவைகள், அவர் களுக்கான கற்றல் முறைகள் என்பனவற்றை ஆசிரியர் ஒருவர் அறிந்து கொள்ளவேண்டியது கட்டாயமானதாகும். வகுப்பறைச் செயற்பாடு வெற்றி கரமாக அமையும் பொழுது மாத்திரமே "உள்ளடங்கல் கல்வி" உயிரோட்டம் பெறும். மனித உரிமைகளை மதிக்கும் ஒவ்வொருவரினதும் பிரதான கடமை "உள்ளடங்கல்வி" வெற்றிகரமாக தொடர்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

ஒவ்வொரு மாணவருக்கும் தனித் திறமை இருக்கும்
இந்தத் திறமையைக் கண்டறிவதும்
அவற்றைச் சிறப்பாக செயற்படுத்தும் வகையில்
நமது கற்பித்தலை மாற்றியமைப்பதும்
நமது கடமையும் பாக்கியமும் ஆகும்.
- Robert John Meehan-

9. வகுப்பறை முரண்பாட்டு முகாமைத்துவம்

அறிமுகம் :

> “நான்கு சுவர்களைக் கொண்ட அறையைக்
> கல்விக் கூடம் என்பதனை விட, ஆற்றலையும்
> அறிவையும் மழுங்கடிக்கச் செய்யும்
> ஒரு சிறைச்சாலை எனலாம்.’ -Ivan Illich

வகுப்பறையே பாடசாலையொன்றின் மையநிலைப்பகுதியாகும். நான்கு சுவர்களைக் கொண்ட 20 x 20 அளவான அறையினுள் சுமார் நாற்பது மாணவர்கள் அவர்களது தளபாடங்களுடன் பாடசாலை நாளொன்றில் சுமார் ஆறு மணித்தியாலங்கள் காலத்தைக் கழிக்கின்றனர். ஒரு வகுப்பறை பெரும்பாலும் ஒரே வயதுக் குழுவினரைக் கொண்டுள்ள போதிலும் அவர்களது விருப்பு, வெறுப்பு, தேவைகள், சிந்தனைகள், செயற்பாடுகள், தகைமை மட்டம், குடும்பப்பின்னணி, சூழல் அனைத்தும் மாறிகளாகவே உள்ளன. ஒரு பாடவேளைக்காக செல்லுகின்ற ஆசிரியர் ஒருவர் இத்தனை மாணவர்களையும் தன்பால் ஈர்த்து தனது நோக்கத்தை செவ்வனே நிறைவேற்றுவதற்காக அரியமுயற்சி செய்ய வேண்டியுள்ளது. வகுப்பறையின் ‘முதல்நிலை முகாமையாளர்’ என்ற பெருமைக்குரிய ஆசிரியரின் இவ்வரிய முயற்சிக்கு தமது பாடப்புலமையும் தொழில் தகைமையும் வழிகாட்டு கின்றன. வகுப்பறையில் காத்திருக்கின்ற அனைத்து மாணவர்களின் எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் நிறைவேற்றி வெற்றிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்த வேண்டியது ஆசிரியரின் பெரும் பொறுப்பாகும்.

‘ஒரு வினைத்திறனுள்ள ஆசிரியரின் செயற்பாட்டில்
முக்கியமானது வகுப்பறையில் ஒரு கற்றல் சூழலை
வருட ஆரம்பத்திலே ஏற்படுத்துவதாகும்.’ –Mary Beth

சமகாலத்தில் கற்றல் சூழலை ஏற்படுத்துவதிலும் வகுப்பறையை மகிழ்ச்சி கரமாக பேணுவதிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் தோல்வியையே கண்டு வருகின்றனர். இந்த தோல்வியானது இலங்கை கல்வி வரலாற்றில் நான்கு தசாப்தமாகவே இருந்து வருகின்றது. இதற்கு ஆதாரமாக 1992 மே இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை யின் சில வாசகங்களை இங்கு முன்வைக்க முடியும்.

இவ் அறிக்கையின் 5 வது அத்தியாயத்தில் வகுப்பறை தொடர்பாக பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. வகுப்பறை தொழிற்பாடு மிகவும் ஒரே பாங்காய் ஒரே தொனியில் அமைந்திருந்தது.
2. வகுப்பறைகளில் ‘சோம்பல் கதை அமர்வுகளே’ அதிகமாக இருந்தன.
3. ஆசிரியர் முற்று முழுக்க பள்ளி மாணவரின் பாடப் புத்தகத்தையே நம்பியிருந்தார்.

இத்தகைய வாசகங்கள் இக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாக இருப்ப தாகவே அவதானங்கள் தெரிவிக்கின்றன. வகுப்பறை, கற்றல் – கற்பித்தல், கலைத்திட்டம் தொடர்பாக ஏராளமான மாற்றங்களையும் புதுமைகளையும் கல்விச் சமூகம் அவ்வப்போது புகுத்தி வந்துள்ளபோதிலும் வகுப்பறை தொடர்பாக, விசேடமாக குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் தென்படவில்லை என்றே அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன.

முரண்பாடுகள்

“யுத்தம் ஏற்படுவது மனித மனங்களுக்குள்ளே ஆகும்.
ஆகையால் சமாதான வேலி கட்டவேண்டியது
மனித மனங்களுக்குள்ளேயே” –யுனஸ்கோ –

முரண்பாடு என்பது தனிமனிதனுக்குள்ளே அல்லது இருவருக் கிடையே அல்லது மேற்பட்டோரிற்கிடையே உருவாகும் கருத்து வேறு பாட்டால் அல்லது எதிர்ப்பின் பேறாக தோற்றம் பெறக்கூடியதாகும்.

இதனை 'எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், தேவைகள் என்பனவற்றிற் கிடையேயான இணக்கப்பாடின்மை' எனவும் கூறலாம். இது தனிமனிதனுக் குள்ளேயே மனச்சாட்சிக்கும் கடமைக்கும் இடையிலோ அல்லது எதிர் பார்ப்பிற்கும் விளைவிற்கும் இடையிலோ இலகுவாக உருப்பெறக் கூடியதாகும். ஒரு வார்த்தை அல்லது ஒரு சம்பவம் அல்லது ஒரு பொருள் அல்லது ஒரு மனிதன் என்பன முரண்பாட்டின் அடிப்படை காரணிகளா கின்றன. முரண்பாட்டின் விளைவாக மனஅழுத்தம் ஏற்பட்டு பிரச்சினைகள் உருவாகின்றன.

முரண்பாடுகள் ஆரம்பத்தில் ஒரு சிறு ஏது காரணமாகத் தோன்றி, பெருந்தொகையானோரை உள்ளடக்கி உலக யுத்தத்திற்கே அத்திவார மிடக்கூடியதாகும்.

உதாரணமாக வகுப்பறையில் ஒரு மாணவனுக்கு தனது பாடத்தின் மீதோ அல்லது ஆசிரியர் மீதோ அல்லது வகுப்பறை மீதோ ஏற்படுகின்ற ஒரு சிறு முரண்பாடானது அவனை பாடசாலையை விட்டு வெளியேற்றி, வாழ்நாளில் கல்விக்கான வாய்ப்பையும் இல்லாமல் செய்துவிடக் கூடியதா கும். இதனால் அம்மாணவனின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகின்றது.

வகுப்பறையில் முரண்பாட்டிற்கான இடைத் தொடர்புகள்

"குழப்பநிலை என்பது வாழ்க்கையின் ஆற்றல், அது
உண்மையில் மாற்றத்திற்காக எமக்கு கிடைக்கும் வாய்ப்பு."

-Ramsay Clark

வகுப்பறையில் முரண்பாடுகள் ஏற்படக்கூடிய பிரதானமான தனியாள் தொடர்புகள் பின்வருமாறு அமையலாம். அவை

மாணவர் - பாடம்
மாணவர் - மாணவர்
மாணவர் - ஆசிரியர்
மாணவர் - அதிபர் என்பனவாகும்.

குறிப்பாக, ஒரு பாட அலகு மாணவருக்கு சரியாக விளக்கம் பெறப்பட வில்லையாயின் அம்மாணவன் அப்பாடத்தின் மீதும், கற்பிக்கும் ஆசிரியர் மீதும் முரண்பாடு அடைகின்றான்.

முரண்பாட்டின் உடனடி விளைவுகள்

வகுப்பறையில் சிறிதாக உருவாகும் முரண்பாட்டின்போது பின்வரும் விளைவுகளை உடனடியாக அவதானிக்க முடியும்.

- கண்கள் நேருக்கு நேர் நோக்காமை
- பேச்சுவார்த்தைகளைக் குறைத்துக் கொள்ளல் அல்லது தவிர்த்தல்
- குறை கூறுதல்.
- ஒதுங்கியிருத்தல்.
- தாழ்வுச்சிக்கல்.
- வெறுப்பை வெளியிடல்.
- கடமையை பற்றுணர்வுடன் செயற்படுத்தாமை.
- ஒவ்வாமை.
- வெளியேறுதல்.

வகுப்பறையின் 'முதல்நிலை முகாமையாளர்' ஆசிரியர் என்ற வகையில், முரண்பாடு தோற்றம் பெறுவதற்கு காரணமாக இருக்கக்கூடிய வரும் ஆசிரியராகவே பெரும்பாலும் இருக்கின்றார். வகுப்பறையில் ஆசிரியரின் வார்த்தைப்பிரயோகம், கற்பித்தல் பாணி, அணுகுமுறை, நேர்மையற்ற செயற்பாடு ஆகியன மாணவரின் பிஞ்சு உள்ளங்களின் முரண்பாட்டினை மிகவும் இலகுவாக ஏற்படுத்திவிடக்கூடியது. மாணவர்கள் பல்வேறு கோணங்களில் ஆசிரியரை எதிர்பார்த்திருப்பர். இவை நிறைவேறாத போது இலகுவாக முரண்பாடு உருவாகிவிடும்.

'ஒரு வகுப்பறையின் வினைத்திறமை ஆசிரியர்களைப் பற்றிய மாணவர்களின் புலக்காட்சியிலே பெரிதும் தங்கியுள்ளது' என்பதனை தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக The black board in the Jungle (1998) எனும் ஆய்வறிக்கையில்

'இலங்கைப் பாடசாலைகளில் பண்புசார் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் வளங்கள் அல்லது அமைப்பைப் பொறுத்தமட்டில் பிரச்சினைகள் தென்படுவதில்லை. ஆசிரியனின் மனப்பாங்குகளை பொறுத்தவரையிலே பிரச்சினைகள் காணப்படுகின்றன' என விக்ரோறியா பேக்கர் என்பவர் குறிப்பிடுகின்றார்.

முரண்பாட்டுவகைகள்

தனி ஒரு மனிதனிடத்தே முரண்பாடு தோன்றுவதற்கு ஏதுவாக அமையும் காரணங்களை பொதுவாக ஐந்து பிரிவுகளாக வகுக்கலாம்.

1. தனியாள் தொடர்பு முரண்பாடு.
2. தகவல் முரண்பாடு.
3. அறநெறி முரண்பாடு.
4. அமைப்புசார் முரண்பாடு.
5. தேவைகள் சார் முரண்பாடு.

1. தனியாள் தொடர்பு முரண்பாடு

வகுப்பறையில் விளக்கமின்மை, தவறான புரிந்துணர்வு, தொடர் பாடல் குறைபாடு, பிழையான தீர்மானம், பரிவுடன் செயற்படாமை, செவி சாய்க்காமை, பக்கம் சாய்தல், தனது கருத்தை மட்டும் சரியென ஏற்றல் போன்ற காரணிகளால் தனியாள் தொடர்பு முரண்பாடு ஏற்பட வாய்ப் புள்ளது. மாணவர்களின் இத்தகைய முரண்பாடுகள் அவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தி கல்வியில் பின்தங்கும் நிலையை உருவாக்குவ தோடு உடல் உள குறைபாடுகளையும் ஏற்படுத்திவிடும்.

2. தகவல் முரண்பாடு

பாடவிடயமாகிய தகவல்களில் உள்ள தவறுகள், குறைபாடுகள், நிறைவின்மை போன்றவற்றால் வகுப்பறையில் தகவல் முரண்பாடு ஏற்படுகின்றது.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது சரியான எண்ணக்கரு வாக்கம் உருவாகும் வண்ணம் ஆசிரியர் தமது கற்பித்தலை நடாத்துதல் வேண்டும். இல்லையேல் மாணவர் மத்தியில் தகவல் முரண்பாடுகள் ஏற்பட இடமுண்டு. அதேவேளை மதிப்பீடு நடைபெறும் வேளையின் போது வினாக்களின் மயக்கம் காரணமாகவோ, பாடவிடயம் சரியாக தெரிந்திராததன் விளைவாகவோ அல்லது மாணவர் பிழையாக விடை யளிக்கும் போதோ இத்தகைய முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன.

3. அறநெறி முரண்பாடு

சமகாலத்தில் ஒரு வகுப்பறையில் ஆசிரியர் - மாணவரிடையே அதிகமாக ஏற்படுவது அறநெறிசார் முரண்பாடுகளாகும். பாடசாலை சட்ட திட்டங்களை மாணவர் மதிக்காதபோதும், அதிபர் ஆசிரியர்களை மதிக்காதபோதும் ஏற்படுவது அறநெறி முரண்பாடாகும். மேலும் வகுப்பறையில் மாணவர் அமைதியாக இராமை, அறிவுறுத்தல்களை பின்பற்றாமை, சுத்தம் பேணாமை, வீட்டு வேலைகளை நிறைவேற்றாமை என்பனவும் மாணவரிடையே ஏற்படும் பிணக்குகள் என்பனவும் இத்தகைய முரண்பாட்டின் விளைவுகளே.

4. அமைப்புசார் முரண்பாடுகள்

யாதுமோர் நிறுவனத்துடன் ஒவ்வொரு நபரும் பெறும் இடம் ஒழுங் கமைக்கப்பட்டுள்ள விதமே 'அமைப்பு' என்பதால் கருதப்படுகின்றது.

குறிப்பாக வகுப்பறையில் மாணவர் சமமாக, நேர்மையாக நடாத்தப்படாதபோது இத்தகைய முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. வகுப்பு தலைவர், மாணவர் தலைவர் தெரிவு நடைபெறும் போது, போட்டிகளுக்கு மாணவர்களை தெரிவு செய்யும்போது அதிபரோ அல்லது ஆசிரியரோ பக்கச்சார்பாக நடந்து கொண்டால் மாணவர் மத்தியில் இத்தகைய முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அதேவேளை பாடவேளையின்போது ஆசிரியர் ஒருவர் குறித்த ஒரு மாணவன் மீது கூடிய அக்கறை காட்டும்போதும் ஏனைய மாணவர் முரண்பட நேரிடும். மேலும் வருட ஆரம்பத்தில் வகுப்பில் புதிதாக சேரும் மாணவர்கள், பழைய மாணவர்களால் புறக் கணிக்கப்படும் போதும் இத்தகைய முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பு அதிகமாகும்.

5. தேவைகள் சார் முரண்பாடு

எந்த ஒரு உயிரிற்கும் பிறப்பு முதல் இறப்பு வரை பல தேவைகள் அவசியமானவையாகும் இது இயற்கையான ஓர் இயல்பூக்கமாகும். இந்த தேவைகள் உடல் சார்ந்ததாகவோ அல்லது உளம் சார்ந்ததாகவோ இருக்கலாம்.

ஏற்கனவே இங்கு கருதப்பட்ட அனைத்து முரண்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைவது தேவைகள் நிறைவேற்றப் படாமையேயாகும்.

இதனால் ஏனைய முரண்பாடுகள் யாவும் இதனுள் அடக்கப்படவும் கூடும். அமெரிக்க உளவியலாளரான ஆபிரகாம் மாஸ்லோ என்பவர் தேவைக் கொள்கையை முன்வைத்துள்ளார். அவை

1. உடலியற் தேவை.
2. காப்புத்தேவை.
3. அன்பு உறவுத்தேவை.
4. கணிப்புத் தேவை.
5. சுயதிறனில் நிறைவுதேவை. என்பனவாகும்.

வகுப்பறையில் இத்தேவைகள் ஆசிரியரால் நிறைவேற்றப்பட வேண்டியது கட்டாயமானதாகும். மாணவர்கள் தங்கள் ஆசிரியரிடம் அன்பு, உறவு, பாதுகாப்பு, கணிப்பு, பாராட்டு, ஊக்குவிப்பு, வழிகாட்டல் அனைத்தையும் எதிர்பார்த்தே பாடசாலைக்கு வருகின்றனர். இவற்றை ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

முரண்பாட்டு முகாமை :

"எம்மால் காற்றினை நிறுத்த முடியாது
ஆனால் காற்று வீசும் திசையை அறிந்து
எம் வாழ்க்கை பயணத்தை மாற்றியமைக்க முடியும்"
- மகாத்மா காந்தி -

முகாமைத்துவம் என்பது சரியானதை சரியான நேரத்தில் செய்தலாகும். (Doing the right things right) -Peter Drucker-

தெரிந்தோ, தெரியாமலோ மாணவர் மத்தியில் பல முரண்பாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. அதிககளவான முரண்பாடுகள் ஆசிரியரின் செயற்பாடுகளினாலே ஏற்பட இடமுண்டு என்பதனை நாம் இங்கு கண்டுள்ளோம். இத்தகைய முரண்பாட்டினை முகாமை செய்ய வேண்டிய பெரும் பொறுப்பும் ஆசிரியரிற்கே உரித்தானதாகும். இது சாத்தியமாகாத சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறான வேளைகளில் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரையோ அல்லது அதிபரையோ நாட முடியும்.

"முரண்பாடுகளுக்கு வெளியே ஒரு மூன்றாம் ஆள் இருப்பது
முரண்பாடுகளைச் சமாதானப்படுத்துவதற்கு
ஏதுவாகும் காரணியாகும்." -ரூபின், பிரவுண் -

முரண்பாடு எளிதானதாக இருப்பின் அதற்கான காரணமும் தெளிவானதாகவே காணப்படும். சிக்கலான சில முரண்பாடுகள் தோற்றம் பெறும் போது அதற்கான தீர்வுகளை சரியாக இனங்கண்டுகொள்ள முடியாமலிருக்கும். இம்முரண்பாட்டிற்கான வெளிப்படைக் காரணங்கள், மறைமுகக் காரணங்கள் ஆகிய அனைத்தையும் அறிந்து கொள்ளாது அதற்கான தீர்வுகளை எவராலும் எட்டவும் முடியாது.

முரண்பாட்டிற்கான காரணங்களை கண்டறிவதற்கான எளிதான பகுப்பாய்வு முறை முரண்பாட்டுப்படம்' (Conflictmap) என அழைக்கப் படுகின்றது. இது மூன்று படிமுறைகளைக் கொண்டது.

1. பிரச்சினையை பெயரிடல்.
2. முரண்பாட்டுடன் தொடர்பானவர்களை இனங்காணல்.
3. இத்தரப்பினர்களின் தேவைகளையும் ஐயப்பாடுகளையும் இனங்காணல்.

இத்தகைய படிமுறைகளினூடாக மென்மையாக கலந்துரையாடல், அவதானத்துடன் செவிமடுத்தல், விடயத்தை புரிந்துகொள்ளல் மூலம் தீர்வுகளை எட்டமுடியும். இத்தீர்வானது

வெற்றி - வெற்றி
வெற்றி - தோல்வி
தோல்வி - வெற்றி
தோல்வி - தோல்வி

என்பனவற்றுள் ஒன்றாக இருக்கலாம். ஆயினும் இரு தரப்பினரையும் திருப்தி செய்யுமாறு வெற்றி - வெற்றி தீர்வே சிறந்த தீர்வாக அமையக் கூடியது. மென்மையான கலந்துரையாடல் ஊடாக, பிழையை ஏற்றுக் கொள்ளல் மூலமோ அல்லது ஒருவரை ஒருவர் மன்னிப்பதன் மூலமோ இத்தகைய சிறப்பான தீர்வுக்கு வரமுடியும்.

இதனை கீழே காட்டப்பட்டுள்ள உரு தெளிவாக விளக்குகின்றது.



முடிவுரை :

> "எல்லோரும் நடந்த பாதையில் நீங்களும் நடவாதீர்கள்
> மாறாகப் பாதைகளே இல்லாத இடத்தில் நடக்கமுயலுங்கள்.
> உங்கள் காலடித்தடம் மற்றவர்களுக்கு புதிய பாதையாக அமையும்."
>
> - R. Zaphiropoulos-

மாணவர்களின் எதிர்காலமே ஆசிரியர்தான். எதிர்கால தலைவர் களை உருவாக்கும் பெரும் பொறுப்பும் ஆசிரியர்களிடமேயுள்ளது. ஆசிரியரின் அலட்சியம், கவலையீனம், கருத்து முரண்பாடு, விதண்டா வாதம் அனைத்தும் ஒரு மாணவர் சமூகத்தையே அழித்து விடக்கூடியது. மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு, மாணவர் முரண்பாடு அதன் முகாமை அனைத்தையும் ஆசிரியர்கள், வினைத்திறனுடன் செயல்படுத்த வேண்டும். இதற்காக ஆசிரியர் தம்மை, தமது மனப்பாங்கை மாற்றிக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். இதன் காரணமாக அனைத்திற்கும் தீர்வாகவும், இவ் ஆக்கத்தின் முடிவாகவும் The New Indian Express (2002) பத்திரிகையானது நடாத்திய ஆய்வொன்றின் பிரகாரம் 21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்களிடம் இருக்கவேண்டிய விடயங்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

- பாடப்புலமை.
- தொடர்பாடலிலான பிரத்தியேக திறன்.
- மாணவர் அனுபவங்களுடன் கூடிய கற்பித்தல் திறன். நவீன கற்பித்தல் உபகரணப் பயன்பாடு.
- மாணவர்களை பங்காளிகளாக மாற்றும் உத்தி.
- நேரந்தவறாமை, கட்டுப்பாடு, முன்மாதியான நடத்தை. ஆசிரியர் மாணவர் உறவினைச் சீராகப் பேணல்.
- கற்றலில் வாழ்நாள் மாணவர்.

> நான் இந்த உலகிற்கு வந்தமைக்கு காரணம்
> என் பெற்றோர்கள்
> இவ் உலகம் என்னிடம் வந்தமைக்கு காரணம்
> என் ஆசிரியர் அரிஸ்ரோட்டிஸ்
>
> - மகா வீரன் அலெக்சாண்டர்-

10. வினாப்பத்திரத்தின் உள்ளடக்கத் தகுதி

அறிமுகம் :

வெற்றிகரமான கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை நடாத்துவதே சிறந்த ஓர் ஆசிரியரின் பிரதானமான நோக்கமாகும். இதற்காக முன் கூட்டியே செவ்வனே பாடத்தை திட்டமிட்ட ஆசிரியர் பாடக்குறிப்பு மற்றும் கற்பித்தல் உபகரணம் என்பனவற்றுடன் தைரியமாக வகுப்பறைக்குச் செல்கின்றார். இத்தகைய உயர்ந்த பண்புடைய ஆசிரியரின் நோக்கம் எந்தளவு நிறைவேறியுள்ளது என்பதை அறிவதற்காக “மதிப்பீடு” நடாத்தப்படுவது அவசியமானதாகும். இதன் மூலம் மாணவர்கள் குறித்த பாட அலகில் எந்தளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதனை அறியமுடிகின்றது. அத்துடன் ஆசிரியர்களும் தமது நோக்கம் எந்தளவு நிறைவேறியுள்ளது என்பதனையும் கற்பித்தலின் பலம் மற்றும் பலவீனத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதனூடாக எதிர்கால கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் ஏற்படுத்த வேண்டிய பொருத்தமான மாற்றங்களைத் தீர்மானிப்பதற்கு ஆசிரியருக்க முடிகின்றது. சமகாலத்தில் பாடசாலைகளில் தவணை முடிவிலும் வருட இறுதியிலும் நடைபெற்று வருகின்ற அடைவுப்பரீட்சைகள் மிக முக்கியமானதாக அனைவராலும் கருதப்படுகின்றன. “இறுதி மதிப்பீடு” எனக் கருதப்படுகின்ற இத்தகைய பரீட்சைகளை நடாத்துவதற்கு பொதுவாக எமது நாட்டில் “வினாப்பத்திரம்” ஒரு பொருத்தமான அளவீட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ் அளவீட்டுக் கருவியின் “தராதரம்” எதிர்பார்க்கப்படும் மதிப்பீட்டில் செல்வாக்குச் செலுத்தக் கூடியது. அது மட்டுமல்ல மாணவர்களின் எதிர்காலத்திலும் பெருந்தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியது. அளவீட்டுக்

கருவி ஒன்றின் தராதரத்தைத் தீர்மானிக்கும் மிக முக்கிய காரணிகளாக நம்பகம், தகுதி என்பன கருதப்படுகின்றன.

பாடசாலைகளில் கடந்த காலங்களில் தவணை மற்றும் வருட இறுதிப் பரீட்சைகளுக்கான வினாப்பத்திரங்களை வலயக் கல்வி அலுவலகம் மற்றும் மாகாண கல்வி அலுவலகம் என்பன தயாரித்து வந்தன. ஆயினும் தற்போது இப்பணியை பாடசாலை மட்டத்திலேயே குறித்த பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களால் நடைமுறைப்படுத்துவது பற்றி கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதனால் சகல ஆசிரியர்களும் வினாப்பத்திரம் தயாரிப்பது தொடர்பாக பூரணமான தெளிவு பெற வேண்டியது அவசிய மானதாகும். இம் முக்கிய தேவையினை நிறைவேற்றும் பொருட்டு இத்தலைப்பில் கவனம் செலுத்தப்பட்டு இவ் ஆக்கம் எழுதப்படுகின்றது. பாடசாலைகளில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களும் இவ்வாக்கத்திற்கு வரவேற்பளிப்பர் என்பது எமது நம்பிக்கையாகும்.

நம்பகம் :

“நம்பகம்” என்பது ஓர் அளவீட்டுக்கருவியானது எதனை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றதோ அதனை எந்தளவிற்கு திருத்தமாக அளவீடு செய்கின்றது என்பதனைக் குறிக்கின்றது. அதாவது, குறித்த இவ்வளவீட்டுக் கருவியைப் பயன்படுத்தி கருதப்பட்ட மாணர்களை எத்தனை தடவை அளவிட்டாலும் பெறப்படும் அளவீடானது மாறாத ஒரே பெறுமானம் உடையதாக அமைய வேண்டும். வினாப்பத்திரமொன்றின் நம்பகத்தின் அளவைத் தீர்மானிப்பதற்காக புள்ளிவிபரவியலில் “நம்பகக் குணகம்” கணிக்கப்படுகின்றது. பெரும்பாலும் சோதனை- மறு சோதனை முறை, சமவலு அமைப்பு முறை, இரு பாதி முறை, மற்றும் கூடர் றிச்சாட்சன் முறை ஆகிய நான்கு முறைகளைப் பயன்படுத்தி “நம்பகக்குணகம்” கணிக்கப்படுகின்றது. விசேடமாக நம்பகத்தில் வினாப்பத்திரத்தில் அமைந் துள்ள வினாக்களின் வகைகள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக கட்டுரை வகை வினாக்கள் குறைவான நம்பகம் கொண்டவை. இதற்கு மேலதிகமாக வினாப்பத்திரத்தின் பாடப்பரப்பு, வினாக்களின் எண்ணிக்கை, கடினத்தன்மை, அமைப்பு , பயன்படுத்தப்படும் அறிவுறுத்

தல்கள், மாணவரின் உள-உடல் நிலைமை மற்றும் மதிப்பீட்டில் ஏற்படும் குறைபாடு போன்றவையும் நம்பகத்தை தீர்மானிக்கும் காரணிகளாகும். ஆயினும் ஒரு வினாப்பத்திரத்தின் மற்றொரு தராதரமாகக் கருதப்படுகின்ற "தகுதி" சிறப்பாக அமையும் போது நம்பகமும் உயர்வடைவதற்கு வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

தகுதி :

ஒரு வினாப்பத்திரமானது எதனை, எந்த அளவுக்கு அளவிடுகின்றது என்பதைப் பற்றி தெரிவிப்பது தகுதியாகும். அதாவது, குறித்த வினாப்பத்திர மானது எதனை அளவிடும் பொருட்டு ஆக்கப்பட்டதோ அந்நோக்கத்தை எந்த அளவுக்கு நிறைவேற்றுகின்றது என்பதைப் பற்றி விளக்கம் அளிப்பதே "தகுதி" என்பதால் கருதப்படுகின்றது. வினாப்பத்திரத்தின் தகுதியை தீர்மானிப்பதற்காக அமைப்புத் தகுதி அல்லது முகத்தகுதி, உள்ளடக்க தகுதி, முன்னறி தகுதி மற்றது உடன்நிகழ் தகுதி ஆகிய நான்கு வகையான தகுதிகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. இவ் ஆக்கத்தின் தலைப்பிற்கு அமைவாக தொடர்ந்து உள்ளடக்கத் தகுதி பற்றி விரிவாக ஆராயப்படுகின்றது.

உள்ளடக்கத் தகுதி

பாடசாலையில் ஆசிரியர்கள் தனித்தோ அல்லது குழுவாகவோ தாம் கற்பிக்கும் பாடங்களிற்கான வினாப்பத்திரங்களை தயாரிக்க வேண்டிய தேவை உள்ளது. இவ் வினாப்பத்திரங்கள் வெவ்வேறு நோக்கத்திற்காக தயாரிக்கப்படலாம். எவ்வாறாயினும் வினாப்பத்திரத்தில் குறித்த காலப்பகுதிக்கான பாடத்திட்டம் முழுமையாக உள்ளடக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதனையே "உள்ளடக்கத் தகுதி" கருதுகின்றது. அதாவது "உள்ளடக்கத் தகுதி என்பது ஒரு வினாப்பத்திரத்தில் குறித்த காலப்பகுதிக்கான பாடத்திட்டம் எவ்வகையில் பிரதிநிதித்துவம் பெறுகின்றது" என்பதாகும்.

உதாரணமாக, கணிதபாடத்தில் தரம் 9 இற்கு முதலாம் தவணைப் பரீட்சை வினாப்பத்திரம் ஒன்று தயாரிக்க வேண்டிய தேவை உள்ளது

எனவும் தரம் 9 கணிதபாட நூலில் முதலாம் தவணைக்காக 6 பாட அலகுகள் 40 பாட வேளைக்காக ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் கொள்வோம். தயாரிக்கப்படும் வினாப்பத்திரம் 6 பாட அலகுகளையும் உள்ளடக்கியிருந் தால் அது உள்ளடக்கத்தகுதியுள்ள வினாப்பத்திரம் எனக் கூறலாம். அத்துடன் ஒவ்வொரு பாட அலகுகளில் இருந்தும் தெரிவு செய்யப்படும் வினாக்களின் எண்ணிக்கை பாட வேளைகளின் எண்ணிக்கைக்கு நேர்விகித சமனாக இருக்க வேண்டும் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொரு முக்கிய அம்சமாகும். அதாவது மூன்று பாட வேளைக்காக ஒரு வினா ஒதுக்கப்பட்டிருந்தால் ஆறு பாடவேளைக்காக இரு வினாக்கள் ஒதுக்கப்படுவது சிறப்பானதாகும்.

இவற்றிற்கு மேலதிகமாக தகுதியுடைய ஒரு வினாப்பத்திரம், பல்தேர்வு வினா, சுருக்க விடை வினா, அமைப்புக் கட்டுரை வினா மற்றும் கட்டுரை வினா ஆகிய பல்வேறு வகையான வினா வகைகளைக் கொண்டிருப்பதோடு அறிதல் சார் ஆட்சியின் மட்டங்களான அறிவு, விளக்கம், பிரயோகம், பகுப்பு, தொகுப்பு மற்றும் மதிப்பீடு என்பனவற்றை அளவீடு செய்வதற்கான வினாக்களையும் கொண்டிருகக்க வேண்டும். மாணவர்களின் வயது, தரம், பல்வகைமை, பாடம் மற்றும் பரீட்சைக்கான நேரம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பாட ஆசிரியர் இவற்றைத் தீர்மானித்துக் கொள்ள முடியும். ஒரு வினாப்பத்திரத்தில் இத்தகைய பல்வேறு அம்சங் களை பொருத்தமான முறையில் உள்ளடக்கிக் கொள்வதற்கான திட்டம் “விடயத்திறன் அட்டவணை” என அழைக்கப் படுகின்றது.

விடயத்திறன் அட்டவணை

ஒரு வினாப்பத்திரத்தை தயாரிப்பதற்கான திட்டம் “விடயத்திறன் அட்டவணை” என பொதுவாக கருதப்படுகின்றது. இது விபரக்கூற்று அட்டவணை, நீலப் படிவம் மற்றும் இருவழி அட்டவணை ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் தயாரிக்கப்பட இருக்கின்ற வினாப்பத்திரம் தொடர்பான பூரணமான விளக்கத்தை இந் நீலப்படிவம் வெளிப்படுத்தக் கூடியது. தவணை, தரம், பாடம், பரீட்சைக் கான நேரம், பாட அலகுகள், வினா வகைகள், வினாக்களின் எண்ணிக்கை,

ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகள் மற்றும் ஒவ்வொரு வினாவும் எந்த ஆற்றலை அளவீடு செய்கின்றது போன்ற அனைத்து அம்சங்களும் ஒரு விடயத்திறன் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருக்கும். வினாப்பத்திம் தயாரிப்பதற்கு முன்னரே இதனை தயாரிக்க வேண்டும் என்பதும் இதன் மூலம் மிகவும் சிறந்த உள்ளடக்கத் தகுதியுடைய வினாப் பத்திரத்தை தயாரிக்க முடியும் என்பதனையும் ஆசிரியர்கள் கருத்தில் கொள்வது அவசியமாகும். இவ்விடயத்திறன் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு குறித்த தரத்திற்கான மாதிரி வினாப்பத்திரத்தைத் தயாரித்துக் கொள்ளலாம். அதன் பின்னர் முற் சோதனை நடாத்தப்பட்டு அதனைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் முறையான வினாப்பத்திரத்தை தயாரிக்க முடியும்.

மாதிரியாக, கணிதபாடத்தில் தரம் 9 இற்கு முதலாம் தவணைப் பரீட்சை வினாப்பத்திரம் ஒன்று தயாரிப்பதற்கான விடயத்திறன் அட்டவணையின் மாதிரி இறுதியாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதில் குறித்த 6 பாட அலகிலும் மொத்தமாக 15 வினாக்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

விடயத்திறன் அட்டவணையின் முக்கியத்துவம்

வகுப்பறையில் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதனை அறிவதற்கு மதிப்பீடு நடாத்தப்படுவது அவசியமானதாகும். எமது பாடசாலைகளில் பெரும்பாலும் மதிப்பீட்டுக் கருவியாக “வினாப்பத்திரம்” பயன்படுத்தப்படுகின்றது. வினாப்பத்திரத்தின் தராதரம் உயர்வாக அமையும் பொழுது மாத்திரமே கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதனை செம்மையாக தீர்மானிக்க முடியும். இவ் வினாப்பத்திரத்தின் தராதரத்தை தீர்மானிப்பதில் வினாப்பத்திரத்தின் “உள்ளடக்கத் தகுதி” பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவ் உள்ளடக்கத் தகுதியை உறுதி செய்யும் திட்டமாக விடயத்திறன் அட்டவணை கருதப்படுகின்றது. ஓர் ஆசிரியர் பரீட்சைக்கான வினாப்பத்திரம் தயாரிப்பதற்கு முன்னர் விடயத்திறன் அட்டவணை தயாரிப்பதன் மூலம் பல்வேறு நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன.

அவற்றுள் பின்வருவன முக்கியமானவையாகும்.

- குறித்த வினாப்பத்திரத்தில் உரிய பாடப்பரப்புக்கள் யாவும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- பாடவேளைகளின் எண்ணிக்கைகளுக்கு நேர்விகித சமனாக வினாக்களின் எண்ணிக்கை அமைந்திருக்கும்.
- அனைத்து வினா வகைகளும் வினாப்பத்திரத்தில் உள்ளடக் கப்படுவதற்கு வாய்ப்பு அதிகமாகும்.
- அறிதல் சார் ஆட்சியின் ஆறு மட்டங்களையும் அளவீடு செய்வதற் கான வினாக்கள் வினாப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- புள்ளிகள் பொருத்தமான முறையில் வழங்கப்பட்டிருக்கும்.
- வினாப்பத்திரம் தொடர்பான தவணை, பாடம், தரம், ஒதுக்கப்பட்ட நேரம் போன்ற அம்சங்கள் வினாப்பத்திரத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

முடிவுரை:

21 ஆம் நூற்றாண்டு ஆசிரியர்கள் மாணவர்களின் ஆற்றலை கட்டியெழுப்புவற்கான திறவு கோல். இதனால் "ஆசிரியர்கள் வாழ்நாள் மாணவர்கள்" என்பதற்கு அமைவாக தம்மை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பாடத்தைத் திட்டமிடல், நவீன கற்பித்தல் உபகரணத்தை பயன்படுத்தல், பாடத்தை நடைமுறைப்படுத்தல், மதிப்பீட்டுக் கருவி தயாரித்தல், பின்னூட்டல் வழங்குதல் மற்றும் ஊக்கப்படுத்துல் போன்ற அனைத்து செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் பங்காற்றி புதியதும் எதிர்பார்க்கப்படுவதுமான மாணவர் சமுகத்தை கட்டியெழுப் பங்காற்றுவோம்.

நான் எனது மாணவர்களுக்கு ஒருபோதும்
கற்பிப்பதில்லை. அவர்கள் கற்றுக்கொள்ளக் கூடிய
சூல்நிலைகளை மட்டுமே வழங்க முயற்சி செய்கின்றேன்.
-அல்பாட் ஐன்ஸ்டீன்-

நீலப் படிவம் -மாதிரி

முதலாம் தவணைப் பரீட்சை

தரம் : 9 பாடம் : கணிதம் நேரம் : 3 மணி

பாட அலகுகள்	பல்தேர்வு வினாக்கள்					சுருக்க வினாவிடை					அமைப்பு கட்டுரை			கட்டுரை வகை		மொத்தம்
	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	
1.	*					*								*		3
2.		*					*				*					3
3.			*									*			*	3
4.				*									*			2
5.					*			*								2
6.									*	*						2
நோக்கவியல்																
1. அறிவு	*	*	*	*	*											5
2. விளக்கம்						*	*	*	*	*						5
3. பிரயோகம்																
4. பகுப்பு											*	*		*	*	4
5. தொகுப்பு													*	*	*	3
6. மதிப்பீடு																
புள்ளிகள்	1	1	1	1	1	2	2	2	2	2	15	15	15	20	20	100

நேரத்தை வீணாக்கும் போது
கடிகாரத்தைப் பார்!
ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.
- சுவாமி விவேகானந்தர்-

11. கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

அறிமுகம் :

கல்வியின் பிரதானமான நோக்கம் "மாணவரிடையே அறிதல் சார் ஆட்சி, எழுச்சி சார் ஆட்சி, உள இயக்க சார் ஆட்சி என்பனவற்றை விருத்தி செய்வதாகும்" என பெஞ்சமின் புளூம் (1956) என்ற ஆய்வாளர் கருதுகின்றார். இவை முறையே அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன் எனவும் கருதப்படுகின்றன. ஆயினும் இலங்கைப் பாடசாலை முறைமை யில் அறிதல் சார் ஆட்சிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக கல்விப் புலம் சார்ந்தவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ் அறிதல் சார் ஆட்சியை பெஞ்சமின் புளூம் (1956) என்பவர் ஆறு மட்டங்களாக வகைப்படுத்தியுள்ளார். அவை முறையே அறிவு , விளக்கம், பிரயோகம், பகுப்பு, தொகுப்பு, மதிப்பீடு ஆகும். பாடசாலைகளில் மாணவர்களின்அறிதல் சார் ஆட்சியை அளவீடு செய்வதில் முதன்மை அம்சமாக "பாட அடைவு" கருதப்படுகின்றது. இது "கல்வி அடைவு" எனவும் அழைக்கப் படுகின்றது.

ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் அல்லது பாடநெறியில் மாணவர் அடைய முடிந்த தனிப்பட்ட இயலுமையே "கல்வி அடைவு" என சர்வதேச கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. மேலும் கல்வி அகராதியில் பாடசாலையில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் மாணவர் பெறக்கூடிய அறிவு வளர்ச்சி அல்லது திறன் விருத்தியே கல்வி அடைவு என வரைவிலக் கணப்படுத்தப்பட்டுள்ளது.

Read Zendan (2010) என்பவர் பரீட்சையொன்றில் குறித்த நேரத்தில் மாணவர் வெளிப்படுத்துகின்ற உண்மையான முன்னேற்றமே "கல்வி அடைவு" எனவும் குறித்த பாடத்தில் மாணவர் அடைந்துள்ள இக்கல்வி

அடைவை அளவீடு செய்வதற்காக பாடசாலைகளில் "அடைவுப் பரீட்சைகள்" நடாத்தப்படுகின்றன எனவும் குறிப்பிடுகின்றார்.

இக் கல்வி அடைவை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்காக பாடசாலைகளில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பெரும் பிரயத்தனம் எடுத்துவருகின்றனர். குறிப்பாக வகுப்பறையில் கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளில் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்ற ஆசிரியர் களின் பெரும்பாலான செயற்பாடுகள் கல்வி அடைவை மையப்படுத்தியே அமைந்துள்ளன.

கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் :

கடந்த நான்கு தசாப்தங்களில் ஆய்வாளர்கள் கல்வி அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் அதிக எண்ணிக்கையான மாறிகளை (காரணிகளை) அடையாளங் கண்டுள்ளனர். Hattie (2009) என்பவர் 138 மாறிகள் கல்வி அடைவுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளதாக தனது ஆய்வினுடாக எடுத்துக்காட்டியுள்ளார். இவற்றுள் மிகவும் முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்ற ஒன்றிணைந்த காரணிகள், ஆசிரியர் தொடர்பான காரணிகள் மற்றும் மாணவர் தொடர்பான காரணிகள் என்பன இங்கு ஆராயப் பட்டுள்ளன.

1. ஒன்றிணைந்த காரணிகள்

John Laughran (1999) என்பவர் தமது ஆய்வில் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக நான்கு பெரும் பிரிவுகளை எடுத்துக் காட்டியுள்ளார். மாணவர் தொடர்பான காரணிகள்,பாடசாலை தொடர்பான காரணிகள், ஆசிரியர் தொடர்பான காரணிகள், பாடம் தொடர்பான காரணிகள் என்பனவே அவையாகும். மாணவர் தொடர்பான காரணிகளில் மாணவர்களின் வயது, அவர்களது இயலுமை, கற்றலுக்கான மாணவர்களின் மனப்பாங்கு, மாணவர்களின் அறிவு, கற்றல் முறைகள், ஆர்வமும் ஊக்கமும், மொழி விருத்தி, கலாச்சாரச் செல்வாக்கு என்பன உள்ளடக்கப் படுவதாக குறிப்பிடும் ஆய்வாளர்; பாடசாலை தொடர்பான காரணிகளில் பாடசாலை வகை, கலைத்திட்டமும் பாடவிடயங்களும், பாடநூல்கள், பரீட்சை முறைகள், பெற்றார் - சமூகத்தின் எதிர்பார்ப்புகள், பாடசாலை

உட்கட்டமைப்பு என்பனவற்றைக் கருதுகின்றார். இதேபோல் ஆசிரியர் தொடர்பான காரணிகளில் ஆசிரியர்களின் மனப்பாங்கு, ஆசிரியர்களின் கற்பித்தல் பாணி, ஆசிரியர்களின் பாடப்புலமை, தொழில் வாண்மை விருத்தி, அனுபவம் என்பனவற்றை குறிப்பிடும் ஆய்வாளர் பாடம் தொடர்பான காரணிகளில் பாட உள்ளடக்கத்தின் முக்கியத்துவம், பாடம் செய்முறை யானதா அல்லது அறிவு சார்ந்ததா என்பது, பாடம் பொதுவானதா குறிப்பானதா என்பது போன்றவற்றைக் கருதுகின்றார்.

Brimer & Pauli (1971)ஆகிய ஆய்வாளர்கள் சர்வதேச ரீதியில் செய்த ஆய்வில் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக உள்ளகக் காரணிகள், வெளியகக் காரணிகள் என இருகாரணிகளை இனங் கண்டுள் ளனர். இவற்றுள் பரீட்சை தொடர்பான பயிற்சி, பெற்றாரின் அக்கறை, பொருத்தமற்ற பாடநூல்கள், கற்பித்தல் நுட்பங்கள், ஊக்கப்படுத்தலில் குறைபாடு, பொருத்தமற்ற கலைத்திட்டம் ஆகியன உள்ளகக் காரணியாகவும் குறிப்பிட்டு வெளியகக் காரணியாக வறுமையைக் கருதுகின்றனர். மாணவர்களின் நடத்தைக் கோலங்கள், மனப்பாங்கு, ஆர்வம் என்பன வற்றிற்கு வறுமையே காரணம் என இவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

மாணவர்களின் கல்வி அடைவில் 7% பாடசாலை தொடர்பான காரணிகளும் 13% ஆசிரியர் தொடர்பான காரணிகளும் 80% மாணவர் தொடர்பான காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. மாணவர் தொடர்பான காரணிகளில் மாணவரின் நடத்தை, வீட்டுச்சூழல், நுண்ணறிவு, ஊக்கல் என்பன உள்ளடக்கப்படுகின்றன (Marzano, 2000).

மாணவர்கள் நேரடியாக அறிவுறுத்தும் முறையில் (Direct instructional method) கற்பிக்கப்படும் போதும், தாம் என்ன கற்கின்றோம் என்பதனை விளங்கிக் கொள்ளும் போதும் மாணவர்களின் அடைவு அதிகரிக்கும். இவ்வடைவு அவர்களின் சமூக பொருளாதார நிலமையுடன் உறுதியாகத் தொடர்பு பட்டதாகும் (Aimee Howley & Craig Howley ,2007).

மாணவர்களின் கல்வி அடைவை உயர்த்தவல்ல ஒன்பது அறிவுறுத்தும் தந்திரோபாயங்களை (Instructional Strategies) Marzano (1998) என்பவரால் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவை

» வகுப்பறையில் பாடவிடயங்களில் ஒற்றுமை வேற்றுமைகளை அடையாளம் காணல்.
» பாடவிடயத்தைச் சுருக்கமாக்கிக் குறிப்பெடுத்தல்
» வீட்டு வேலையும் பயிற்சியும் செய்தல்.
» கூடிய முயற்சியும் தேவையானவற்றை அடையாளங் காணலும்.
» குழுக் கற்றல்
» இலட்சியம் வகுத்தலும், பின்னூட்டலும்.
» பல்வேறு வகைப்பட்ட முன்வைப்புக்கள்
» கருதுகோள்களை உண்டாக்கலும் பரீட்சித்தலும்.
» முந்திய அறிவைத் தூண்டுதல்

ஆசிரியர் தொடர்பான காரணிகள் :

கல்வி முதன்மை பெற்று விளங்குவதாலும் மாணவர்களின் கல்வி அடைவுகளில் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதாலும் ஆசிரியர்களின் தரம் குறித்த கவலைகள் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் அதிகரித் துள்ளன (Hammond, 2017).

மாணவர்கள் எந்தப் பாடசாலையில் படித்தாலும் ஆசிரியர்களின் உள்ளடக்க அறிவும், போதனா அறிவும் மாணவர்களின் கல்வி அடைவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது (Odumosu, Olusesan & Abel, 2016).

ஆசிரியர்களின் நம்பிக்கைகள், பாட அறிவு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றுக்கு இடையே குறிப்பிடத்தக்க தொடர்பை பல ஆராய்ச்சிகள் கண்டறிந்துள்ளன. எடுத்துக்காட்டாக, கற்பித்தலுக்கான ஆசிரியர்களின் பாடம் சார்ந்த அறிவு, அறிவு மேம்பாடு, முடிவெடுத்தல், திட்டமிடல் மற்றும் அறிவுறுத்தல் நடைமுறைகள் ஆகியவற்றுடன் வலுவான தொடர்பு களைக் கொண்டிருப்பதை முந்தைய கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன, இது மாணவர் அடைவுகளை வெகுவாகப் பாதிக்கிறது (Hill , Umland, Litke & Kapitula, 2012).

Lawrence (2012) என்பவர் ஆசிரியர்களின் மனப்பாங்கு, ஆசிரியர்களின் கற்பித்தல் பாணி, ஆசிரியர்களின் பாடப்புலமை, தொழில் வாண்மை விருத்தி, அனுபவம் என்பன மாணவர்களின் கல்வி அடைவில்

செல்வாக்குச் செலுத்தகின்றன என்கின்றார். ஆசிரியர்களின் மனப்பாங்கு, ஆசிரியர்கள் கடமையில் அர்ப்பணிப்பு, மாணவர்களுடனான உறவு மற்றும் மாணவர்களின் பாடத்தின் மீதான அணுகுமுறை ஆகியன அவர்களின் கல்வி அடைவில் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன (Adeyemi, 2010).

Olle (2008) என்பவர் மாணவர்களுடனான ஆசிரியர் அணுகுமுறை, வகுப்பறைக் கட்டுப்பாடு வகைகள், பாடத்திட்ட உள்ளடக்கம், தொழில் வாண்மைத் தகுதி மற்றும் பாடத்தைத் திட்டமிடல், கற்பித்தல் உள்ளடக் கங்கள் மற்றும் விளக்கக்காட்சி, தொடர்புடைய கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துதல் என்பன கல்வி அடைவில் தாக்கம் செலுத்துகின்றன எனக் காட்டியுள்ளார்.

Laura Goe (2008) என்ற ஆய்வாளர் மாணவர்களின் கல்வி அடைவில் "ஆசிரியரின் பண்பு" செல்வாக்குச் செலுத்துவதாகவும் "ஆசிரியரின் பண்பு" என்பது ஆசிரியரின் கல்வித்தகைமை, குணவியல்பு, பயிற்சி மற்றும் விளைதிறன் ஆகிய நான்கு பெரும் பிரிவுகளினுள் அடங்குவதாகவும் குறிப்பிடுகின்றார்.

Ankomah, Koomson, Busn & Oduro (2005) ஆகியோர் கல்வி அடைவில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆசிரியர் காரணிகளாக பதவியில் உள்ள ஆசிரியர் களின் எண்ணிக்கை, ஆசிரியர் – மாணவர் விகிதம், ஆசிரியர் தகுதிகள் மற்றும் ஆசிரியரின் தனிப்பட்ட பண்புகள் என்பனவற்றையும் தனிப்பட்ட பண்புகளில் கல்வித் தகுதிகள், கற்பித்தற் பயிற்சி, உள்ளகப் பயிற்சி, திறன் மற்றும் சேவை/அனுபவம் என்பன அடங்கும் எனவும் குறிப்பிட்டுள் ளனர். கற்பித்தல் ஒழுக்கத்தில் ஆசிரியர்களின் கல்விப் பின்னணி மற்றும் ஆசிரியர்களின் பிற பண்புக்கூறுகள் மாணவர் தொடர்பான அடைவுகளுடன் குறிப்பிடத்தக்க தொடர்புகளைக் கொண்டுள்ளன என்பதை கூடுதல் ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன (Wayne & Youngs, 2003).

Hodges (1980) என்ற ஆய்வாளர் பாடப்பரப்பில் ஆழமான விடயத்தைப் பிரயோகித்தல், விமர்சன ரிதியான எண்ணத்தை விருத்தி செய்தல், மாணவர்களின் உற்சாகத்தை மேம்படுத்தல், சிறிய குழுக்களாக்கித் தனிப்பட்ட கவனத்தைப் பயன்படுத்தல், மேலதிக வளங்களை மாணவர்க

ளுக்கு வழங்குதல், ஆசிரியர்களுடன் கூடி வேலை செய்தல், வாண்மை விருத்தி ஆகிய வகுப்பறைச் செயற்பாடுகள் மாணவர்களின் கல்வி அடைவை உயர்த்தவல்லன எனக் கூறுகின்றார்.

1984 ஆம் ஆண்டு UNESCO இனால் இலங்கையின் கல்வி அடைவு தொடர்பாகச் செய்யப்பட்ட ஆய்வில் "ஆசிரியர் தொடர்பான காரணிகளாக" போதிய பாட ஆயத்தமின்மை, மாணவர்களின் ஆற்றல் இனங் காணப் படாமை, கலைத்திட்டம் தொடர்பான போதிய தெளிவின்மை, புத்தாக்க கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தாமை போன்றவை இனங் காணப் பட்டுள்ளன.

மாணவர் தொடர்பான காரணிகள்

Onuoha & Eze (2013) ஆகியோர் மாணவர்களின் கல்வி அடைவில் மாணவர்களுடன் தொடர்புபட்ட பதட்டம், சுய-செயல் திறன், சுய - கருத்து, வெளிப்புற உந்துதல் என்பனவும் மற்றும் பாடசாலைச் சூழலுடன் தொடர்புடைய அனுபவங்கள், ஆசிரியர் மற்றும் கற்பித்தல் போன்ற காரணிகளும் செல்வாக்குச் செலுத்தும் என முன்னிலைப்படுத்தினர்.

Lawrence (2012) மாணவர் தொடர்பான காரணிகளில் மாணவர்களின் வயது, அவர்களது இயலுமை, கற்றலுக்கான மாணவர்களின் மனப்பாங்கு, மாணவர்களின் அறிவு, கற்றல் முறைகள், ஆர்வமும் ஊக்கமும், மொழி விருத்தி, கலாச்சாரச் செல்வாக்கு என்பன உள்ளடக்கப்படுவதாக குறிப்பிடு கின்றார்.

Momoh-Olle (2008) என்பவர் மாணவர்களின் கல்வி அடைவுக்கு பங்களிக்கும் மாணவர் தொடர்பான காரணிகளாக மாணவர்களின் மனப்பான்மை, தனிப்பட்ட வேறுபாடுகள், உடல் ஆரோக்கியம், தயார் நிலை மற்றும் எதிர்பார்ப்பு என்பனவும் வீடு, கலாச்சார மற்றும் பெற்றோர் காரணிகளாக வீட்டுப் பின்னணியின் தூண்டுதல் காரணிகள், வீட்டின் பொருளாதார நிலைமை என்பனவும் நிறுவன காரணிகளாக பாடசாலை வகை, மாணவர் தொகை, கட்டுப்பாடு, ஒழுக்கம்,பணியாளர்கள் தொடர்புகள், சேர்க்கை மற்றும் தேர்வு, அல்லது மதிப்பீட்டுக் கொள்கைகள் என்பன வற்றைக் குறிப்பிடுகின்றார்.

Solbery (1998) என்பவர் கல்வி அடைவில் மாணவர் தொடர்பான ஆறு முதன்மைத் திறன்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவை சுய கட்டுப்பாட்டைக் கட்டியெழுப்புதல், சகபாடிகளின் தொடர்பு, இலக்கு களை அமைத்தல், நெருக்கீடு முகாமை, ஆரோக்கிய மேம்பாடு, ஊக்கல் என்பனவாகும் என்கின்றார்.

முந்திய கல்வித் தகைமை

மாணவர்களின் கல்வி அடைவை முன்கூட்டியே தெரிவிக்கக் கூடிய முதல் தரக் குறிகாட்டியாக அம்மாணவர்களின் முந்திய கல்வித் தகைமை அடையாளங் காணப்பட்டுள்ளது (Jansen & Bruinsma, 2005; Ning & Downiny, 2010).

கற்றலுக்கான முன்னுரிமை

சுய ஊக்கப்படுத்தல், மாணவர்களின் வயது, கற்றலுக்கான முன்னுரிமை கல்வி அடைவில் தாக்கம் செலுத்துகின்றது (Aripin, Mahmood, Rohaizad, Yeop, & Anuar, 2008).

மாணவர்களின் கற்றல் முன்னுரிமையும் ஆசிரியரின் கற்றல் பாணியும் மாணவர்களின் கல்வி அடைவில் நேரான தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. கற்றல் முன்னுரிமை என்பது “இயற்கையானது, பழக்கவழக்க மானது, தெரிவு செய்யப்பட்டவழி” ஆகும் (Harb & El-Shaarawi, 2006).

மாணவர் மனப்பாங்கு

கற்றல் தொடர்பாக மாணவர்களின் நேரான மனப்பாங்கு அவர்க ளின் கல்வி அடைவில் கூடிய செல்வாக்குச் செலுத்துகின்றது (Jansen & Buruinsma, 2005; Rau & Durand, 2000). ஆங்கிலமொழி அடைவு தொடர்பான நைஜீரியாவில் Kakey (2010) என்பவரால் செய்யப்பட்ட ஆய்வில் மாணவர்களின் மனப்பாங்கு அடைவில் பெரும் செல்வாக்குச் செலுத்துவதாக எடுத்துக்காட்டியுள்ளார்.

கற்கும் முறையும் கற்கும் நேரமும்

குறிப்பெடுத்தல், ஞாபகப்படுத்தல், கேட்டல், பிரச்சினை தீர்த்தல் திறன் என்பன கல்வி வெற்றிக்கு இன்றியமையாதவையாகும் (Rozalski,2008).

மாணவர்கள் தமது கற்றல் திறனையும் பழக்கவழக்கத்தையும் மேம்படுத்து வதன் மூலம் கல்வி அடைவை அதிகரிக்கச் செய்ய முடியுமெனப் பல ஆய்வுகள் வெளிக்காட்டியுள்ளன (Motosotso& Abenga, 2010; Yip, 2009). மாணவர்களின் "சுய கற்றல் நேரம்" அவர்களின் கல்வி அடைவில் தொடர்புபடுகின்றது(Plant et al. ,2005).

முடிவுரை :

ஆய்வாளர்களினால் குறிப்பிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பல்வேறு காரணிகள் மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்துவதனை அறிய முடிகின்றது. இதனை மாணவர் தொடர்பான காரணிகள், குடும்பம் தொடர்பான காரணிகள், சூழல் தொடர்பான காரணிகள், ஆசிரியர் தொடர்பான காரணிகள்,பாடசாலை தொடர்பான காரணிகள் மற்றும் சமூகம் தொடர்பான காரணிகள் என பல்வேறு பெரும் பிரிவுகளாக நோக்க முடியும். ஆயினும் மாணவர்களின் கல்வி அடைவில் ஆசிரியர் தொடர்பான காரணிகளே கூடிய செல்வாக்குச் செலுத்துவதனை அதிகமான ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. ஆசிரியர் தொடர்பான காரணிகளான ஆசிரியர்களின் மனப்பாங்கு, நம்பிக்கை, பாட அறிவு, கல்வித் தகைமை, ஆளுமை, அனுபவம் மற்றும் பயிற்சி போன்றவற்றை வெளிப்படுத்தும் குறிகாட்டியாக பெரும்பாலும் அவர்களின் "கற்பித்தல்" விளங்குகின்றது. ஆசிரியர்களின் பாடம் சார்ந்த அறிவு, கற்பித்தல் திறன், கற்பிப்பதில் அர்ப்பணிப்பு மற்றும் புதிய யோசனைகளுக்கான திறந்த தன்மை, அனைத்தும் கற்பித்தலின் வெற்றியைத் தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்க முடியும் (Waseka , Enose , Simatwa & Okwach , 2016). இதன் காரணமாக கற்பித்தலை வினைத்திறனாக மாற்றியமைப்பதற்கு கல்வி அமைச்சினாலும் பாடசாலை சமூகத்தினாலும் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பாக போதிய விளக்கத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்வதோடு அதற்கேற்ப தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

12. சுயகற்றல் நுட்பங்கள்

அறிமுகம் :

எமது நாட்டில் முறைசார் கல்வி அமைப்பில் அடைவுப் பரீட்சைகளும், கணிப்பீடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. பரீட்சையை மையமாகக் கொண்டே கற்றல் கற்பித்தல் முறைகளும் ஏனைய பாடவிதான செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பாடசாலைகளை மதிப்பீடு செய்வதற்கான மிக முக்கிய குறிகாட்டியாக 'பரீட்சை முடிவுகள்' இருப் பதே இதற்கான காரணமாகும். பரீட்சை முடிவுகளுக்கு மேலதிகமாக பல பண்புசார் விருத்திகள் இருந்த போதிலும் சமூகத்தினால் பரீட்சை முடிவுகளே அனேகமாக முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

சமகாலத்தில் தேசிய ரீதியில்மூன்று பரீட்சைகள் நடைபெற்று வருவதை நாம் அறிவோம். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா/த) பரீட்சை, க.பொ.த.(உ/த) பரீட்சை என்பனவையே அவை. சின்னஞ் சிறிய வயதில், தன்னைப்பற்றியோ தன் எதிர்காலத்தைப் பற்றியோ தெளிவில்லாத பத்து வயதில் தேசிய ரீதியான முதல் பரீட்சைக்கு மாணவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். மாணவர்களை காட்டிலும் குறிப்பாக மாணவர்களின் பெற்றோர்களின் கௌரவப் பிரச்சினையாகவும் இப்பரீட்சை விளங்கி வருகின்றது. எதிர்கால சாதனைக்கும், இப்பரீட்சைக் கும் இடையே எவ்விதமான இணைவுகளும் இல்லை என்பதனை பல ஆய்வுகள் மெய்பித்துள்ள நிலையிலும் கூட பெற்றோர்களும், சமூகத்தின ரும் மிகவும் கூடிய அழுத்தத்தை இப்பரீட்சைக்கு கொடுத்து வருகின்றனர். வசதி குறைந்த மாணவர்களுக்கு சகாயப்பணம் வழங்குதல் மற்றும்

நகர்ப் புறப் பாடசாலைகளில் தரம் 6 இல் அனுமதி பெறுதல் என்பவற்றைப் பிரதானமாகக் கொண்டு இப்பரீட்சை நடாத்தப்பட்டு வருகின்றது. ஒரு மாவட் டத்தில் பரீட்சைக்கு தோற்றும் வசதி குறைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 12 சதவீத மானோர் தெரிவு செய்வதனை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ரீதியாக வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்படுகின்றன.

மாணவர் தமது 16 வயதில் கட்டிளமைப் பருவ ஆரம்பத்தில் தோற்றும் இரண்டாவது தேசிய பரீட்சை க.பொ.த. (சா/த) பரீட்சையாகும். மிக முக்கியமாக க.பொ.த. (உ/த) வகுப்பிற்கு அனுமதி பெறுவதனையும் மேலதிகமாக தொழில் நுட்பக்கல்லூரிக்கு அனுமதி பெறுவதனையும் சிறிய தொழில் வாய்ப்புக்களை பெறுவதனையும் நோக்காகக் கொண்டு இப்பரீட்சை நடாத்தப்படுகின்றது. எமது நாட்டில் சுமார் ஐந்து இலட்சம் பேர் இப்பரீட்சைக்கு வருடாந்தம் தோற்றி வருகின்றனர். இவர்களில் 10 சதவீதமானோர் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்று வருவதும் 50 சதவீதத்திலும் கூடிய மாணவர்கள் கணித பாடத்தில் சித்திபெறத் தவறுவதும் கவலை தரும் விடயமாகும்.

மற்றைய மிக முக்கிய பரீட்சை க.பொ.த.(உ/த) பரீட்சையாகும். மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் மிக முக்கியமான போட்டிப் பரீட்சை இதுவாகும். அதுமட்டுமல்ல 13 வருட பாடசாலைக் காலத்தின் 'இறுதி அறுவடை' என்று கூட இப்பரீட்சையைக் கூறலாம். எமது நாட்டில் சுமார் இரண்டரை இலட்சம் பேர் வருடாந்தம் இப் பரீட்சைக்குத் தோற்றி வருகின்றனர். இவர்களில் சுமார் எட்டு சதவீதமானோர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். பல்கலைக்கழக அனுமதி பெற முடியாதவர்களுக்கு அவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தகைமை பெறும் பட்சத்தில் கல்வியியல் கல்லூரி, உயர் தொழில் நுட்பக் கல்லூ ரிகளுக்கு அனுமதி பெறும் வாய்ப்புக்களும் அதிகமாகவுள்ளன.

பாடசாலை என்ற விசாலமான அமைப்பில் பங்குதாரர்களாக கல்வி அமைச்சு, கல்வி நிர்வாகிகள், அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் என்ற பெரிய வலையமைப்பு இருந்த போதிலும் மிகவும் அதிகமான மாணவர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று தேசிய பரீட்சைகளிலும் தோல்வி கண்டு வருவது கவலையளிக்கும் விடயம் மட்டுமல்ல தேசிய விரயமாகவும் கருதப்பட வேண்டிய தொன்றாகும்.

பொதுவாக மாணவர்களின் பரீட்சை அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் பல காரணிகளை ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். குடும்பம், சமூகச்சூழல், பாடசாலை, ஆசிரியர்கள், சகபாடிகள், மாண வரின் மனப்பாங்கு, மாணவர்களின் சுய கற்றல், பாணி என்பன இவற்றுள் முக்கியமானவை. இவை ஒவ்வொன்றும் பல விசாலமான விடயங்களைக் கொண்ட பெரும் பரப்புகளாகும். இங்கு நூலாசிரியரின் பிரதான நோக்கம் 'சுய கற்றல் பாணி' என்ற விடயத்தை ஆராய்வதும் இதனூடாக க. க.பொ.த. (சா/த), க.பொ.த.(உ/த) பரீட்சை அடைவுகளை மேம்படுத்துவதற்காக மாணவர் களுக்கு பொருத்தமாக சுயகற்றல் உத்திகளை முன்வைப்பதுமாகும்.

சுயகற்றல் :

பாடசாலையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு, பிரத்தியேக வகுப்பு என்பனவற்றிற்கு மேலதிகமாக 'மாணவர்களின் சுயகற்றல்' அவர்களின் பரீட்சை அடைவில் பெரும் செல்வாக்கு செலுத்துவதாக அறியப்படுகின்றது. எந்த அளவிற்கு மாணவர்களின் சுயகற்றல் அதிகரிக் கின்றதோ அந்தளவிற்கு அவர்களின் பெறுபேறுகளும் அதிகரிக்கும். ஆயினும் சுயகற்றல் பாணி, சுயகற்றல் காலம் என்பன ஒவ்வொரு மாணவர் களுக்கிடையேயும் வேறுபட்டே காணப்படுகின்றன. இது தொடர்பாக நியமப்படுத்தப்பட்ட திட்டங்கள் எதுவும் மாணவர்களிடையே இல்லை என்றே கூறலாம். அத்துடன், இது தொடர்பாக வழிகாட்டுவதற்கு பாடசாலையில் முறையான திட்டங்களும் இல்லை. எப்படி நீங்கள் படிக்கின்றீர்கள்? என ஒரு மாணவர்களிடம் வினவும் போது இதற்கு ஒருமைப்பட்ட, நிறைவான விடை கிடைப்பதில்லை. அதிகமான மாணவர்களுக்கு எப்படி சுயகற்றல் செய்வதென்றே தெரிவதில்லை. இதற்கான திட்டங்கள் எதுவும் அதிகமானவர்களிடம் இருப்பதில்லை. எந்தவொரு வெற்றிகரமான செயற்பாட்டிற்கும் 'திட்டமிடல்' என்பது மிக முக்கியமானதாகும். 'திட்டமிடத்தவரும் ஒருவர் பிழைவிடத் திட்ட மிடுகின்றார்' என்ற கருத்திற்கு அமைவாக தமது 'சுயகற்றல்' பற்றி சரியாக திட்டமிடத்தவறும் மாணவர்கள் தமது எதிர்பார்ப்பை அடைய முடியாமல் போய்விடுகின்றது.

சுயகற்றலுக்கான திட்டம்

சிறந்த சுய கற்றல் முறைகள் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றுள் பிரான்சிஸ் றொபின்சன் (1970) முன்வைத்த **'SQ3R'** எனும் முறை பிரபல்யமானதும் நடைமுறைச் சாத்தியமானது மாகும். இதனூடாக இவர் பின்வரும் 5 படிகளை முன்வைத்துள்ளார்.

S : Survey - எல்லைப்படுத்தல்

Q : Question - வினாக்கேட்டல்

R : Read - வாசித்தல்

R : Recite - சொல்லிப்பார்த்தல்

R : Review - மீட்டுப்பார்த்தல்

Survey : எல்லைப்படுத்தல்

இது சுய கற்றலை எல்லைப்படுத்தலை முக்கியப்படுத்துகின்றது. எதனை? எப்படி? எங்கு? எவ்வளவு காலம் ? கற்பது என்ற விடயங்களை இது உள்ளடக்குகின்றது. இதனை மிகவும் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் சுய கற்றல் நேரசூசி ஒன்று அவசியமாகின்றது. காலையில் துயில் எழுவது முதல் நித்திரைக்குச் செல்லும் வரை தனது தினசரி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இது தயாரிக்கப்படல் வேண்டும்.ஒவ்வொரு கற்றலுக்குமாக அதிகூடிய நேரமாக 90 நிமிடம் ஒதுக்கீடு செய்யலாம். ஒவ்வொரு கற்றலின் பின்னரும் 15 நிமிடம் ஓய்வெடுப்பது சிறப்பானதாகும். தொடர்ச்சியாக சுய கற்றலைவிட ஓய்வுடன் கூடிய கற்றல் வெற்றியளிக்கும். க.பொ.த. (உ/த) மாணவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் கற்றலில் ஈடுபடுவது அவசியமானதாகும். அவ்வாறாயின் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது இரு மணித்தியாலங்களை ஒதுக்கிக் கொள்ளமுடியும்.

பாடவிடயத்தை படிக்க ஆரம்பிக்க முன்னர் அது பற்றி மேலோட் டமாக மதிப்பீடு செய்வதும் முக்கியமானதாகும். தாம் சுயகற்றலில் ஈடுபடவிருக்கும் பாட அலகின் தலைப்புக்கள், உபதலைப்புக்கள், பாடச் சுருக்கம் என்பவற்றையும் கருத்தில் கொள்வதும் 'எல்லைப்படுத்தலில்' உள்ளடக்கப்படுகின்றது.

கற்றல் நடைபெறும் இடம், கற்றல் சூழல் என்பனவும் முக்கியமானவை யாகும். தூய்மை, அமைதி, காற்றோட்டம், வெளிச்சம் உள்ள இடங்களை கற்றலுக்காக தெரிவு செய்து கொள்ளவேண்டும். உளத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக இந்த இடம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றம் செய்யப்படுவதும் நல்லது. அத்துடன் படிக்கின்ற மேசையில் அதிகமான புத்தகங்களையோ அல்லது அதிக பொருட்களையோ வைத்திருப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். இது மனச்சலிப்பையும் களைப்பையும் தவிர்த்துக் கொள்ளும். சுய கற்றலுக்கு பயன்படுத்தப்படும் புத்தகம் மாத்திரமே அவ்வேளையில் அம் மேசையில் இருத்தல் வேண்டும். மேசை விரிப்பு தூய வெண்மையான துணியாக இருப்பது சிறந்தது. கற்கும் நேரத்தில் கூடியவரை மாணவர் நிமிர்ந்து இருந்து கற்பது கற்றலை வளமுள்ளதாக்கும். இதன் மூலம் மன அலைச்சல், நித்திரை, சோம்பல் என்பன தவிர்க்கப்படும்.

Question : வினாக்கேட்டல்

நேரசூசியின் பிரகாரம் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் அமரும் ஒருவர் பாட விடயத்தை வாசிப்பதற்கு முன்னர் அப்பாட அலகு தொடர்பான பல்வேறு வினாக்களை வாசிப்பதனையே இது குறிக்கின்றது. பாடப்புத்தகம், பாடக்குறிப்பு என்பனவற்றிற்கு மேலதிகமாக மாணவர் களிடம் இருக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் வினாப்பத்திரங்களும் அலகு ரீதியான ஒப்படைகளுமாகும். ஆரம்ப நாட்களிலேயே மாணவர்கள் இதனை சேகரித்து கோவைப்படுத்தி வைத்துக்கொள்வதும் முக்கியமானது.

குறித்த பாட அலகிலுள்ள வினாக்களை முன்னரே வாசிப்பதால் கற்க வேண்டிய முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தி வாசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

Read : வாசித்தல்

குறித்த பாட அலகிற்குரிய வினாக்களை வாசித்து முடித்த பின்னர் அம்மாணவர் பாடவிடயத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தேடலை இது குறிக்கின்றது. வினாக்களுக்குரிய விடை அறியப்படும் வரை மீண்டும்

மீண்டும் பாட விடயத்தை வாசிக்க வேண்டும். வாசிக்கும்போது மெதுவான சத்தத்துடன் பொருள் விளங்கி தொடர்புபடுத்தி வாசிக்க வேண்டும். குறித்த வினாவுக்கான விடை அறியப்பட்டவுடன் அப்பாட அலகில் எழுப்பக்கூடிய மேலும் பல வினாக்களை உருவாக்கி மீண்டும் மீண்டும் வாசிப்பதினூடாக அப்பாட அலகை மேலும் தெளிவாக்கிக் கொள்ள முடிவதோடு நிறைவான மனப்பதிவையும் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். வாசிக்கின்ற வேளைகளில், கற்கும் பாடத்தின் பிரதான கருத்துக்களை சுருக்க குறிப்புக்களாக எழுதி வருதலும் பொருத்தமானதாகும். சுருக்கக் குறிப்பு எழுது வதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக சிறிய கொப்பிகளைப் பயன்படுத்த முடியும்.

இக்குறிப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும், திருத்தமானதாகவும் எழுதப்படல் வேண்டும்.

Recite: சொல்லிப்பார்த்தல்

வாசித்த விடயங்களை சொந்த மொழியில் சொல்லிப் பார்த்தலை இது குறிக்கின்றது. சுய கற்றல் நடைமுறையின் இதயப்பகுதியாக இதனை கருதலாம். ஆரம்பத்தில் இது மிகவும் கடினமானதாகவே தோன்றும். பாடவிடயங்களை சிறிது சிறிதாக வாசித்து பின்னர் சொல்லிப் பார்ப் பதன் மூலம் இச்செயற்பாட்டில் பயிற்சி பெறமுடியும். தொடர்ச்சியான பயிற்சியும் முயற்சியும் திருவினையாக்கும்.

Review: மீட்டுப்பார்த்தல்

நேரசூசியின் பிரகாரம் வாசித்து முடித்த விடயத்தை நிறுத்திய பின்னர் புத்தகம் அல்லது பாடக்குறிப்பை மூடிவைத்துவிட்டு கற்றவற்றை சுருக்கமாக மீட்டிப் பார்ப்பதனை இது குறிக்கின்றது. இப்பாட அலகில் முன்னர் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு முழுமையாக விடை எழுதுதலும் இதனுள் அடக்கப் படுகின்றது.

இதற்கு மேலதிகமாக தற்போது குறிப்பிட்ட இந்த 3R இற்கு மேலதிகமாக 2R பற்றியும் பேசப்படுகின்றது. அவை

R: Reflect : சிந்தனைத் தெறிப்பு

கற்றவிடயம் தொடர்பாக மேலதிக விடயங்களையும் உதாரணங் களையும் சிந்திப்பதை இது குறிக்கின்றது. இதன் மூலம் விடயங்கள் மனதில் ஆழப்பதிவாகிவிடும்.

R: Relate: தொடர்புபடுத்திப்பார்த்தல்

கற்ற விடயங்களை தமது சொந்த வாழ்க்கை அனுபவங்கள் அல்லது சம்பவங்களுடன் இணைத்துப் பார்ப்பதனை இது குறிக்கின்றது. கற்ற விடயங்கள் நீண்டகாலம் நினைவில் இருப்பதற்கு இது உதவி செய்யும்.

இவ்வாறாக பிரான்சிஸ் றொபின்சன் குறிப்பிட்ட SQ 3R உடன் மேலும் 2R ஐச் சேர்த்து SQ 5R என அழைக்கலாம்.

முடிவுரை :

இவ்வாறு நேரசூசியின் பிரகாரம் ஒவ்வொரு கற்றல் வேளைகளிலும் மேலே கூறப்பட்ட SQ 3R அல்லது SQ 5R படிமுறைகளை மாணவர் தொடர்ச்சியாக பின்பற்றும் போது கல்வியில் அவர்களின் வெற்றிக்கான வாய்ப்பு மிக அதிகமாகும். ஆசிரியர்கள் தமது கற்பித்தல் வேளைகளின் போதும் சுயகற்றல் திறன்களை மாணவரிடத்தே விருத்தி செய்வதற்கான வழிகாட்டல்களையும் வழங்குவது அவசியமும் காலத்தின் தேவையுமாகும்.

சுயகற்றல் ஆரம்பிப்பதற்கு முன்பாக குறைந்தது 10 நிமிடமாவது பிரார்த்தனை செய்வது மன அமைதிக்கு அத்திவாரமிடக் கூடியது. இங்கு பிரார்த்தனை என்பது இறை வழிபாடு, தோத்திரங்களைப் பாடுதல், இறை நாமம் உச்சரித்தல், நன்நூல்களை வாசித்தல், தன்னைப்பற்றி சிந்தித்தல் போன்வற்றைக் குறிக்கின்றது. விசேடமாக ஒவ்வொரு மாணவர்களும் 'பெருமைக்குரிய சாதனையாளர்' ஒருவரின் வரலாற்றை தினசரி வாசித்து வரவேண்டும். அது சுவாமி விவேகானந்தர், கலாநிதி அப்துல்கலாம், அன்னை திரேசா போன்றோர் பற்றியதாக இருக்கலாம். இவற்றிற்காகவும் 'சுயகற்றல் நேரசூசி'யில் நேர ஒதுக்கீடு செய்வது அதியுயர் பண்பாகும். சுய கற்றலின் நேரம் அதிகரிக்கப்படும்போது சாதனைகளும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் காரணமாக மாணவர் மட்டுமல்ல வாழ்நாள் மாணவர்களாகக் கருதப்படுகின்ற ஆசிரியர்களுக்கும் இவ் ஆக்கம் வழி காட்டும் என்பது எமது நம்பிக்கை.

உசாத்துணைகள்:

இலங்கை திறந்த பல்கலைக்கழகம். (2013). பல்தரக் கற்பித்தல். கொழும்பு.

கல்வித் துறை அபிவிருத்திச் சட்டமும் நிகழ்ச்சித் திட்டமும், 2012-2016.(2013), கல்வி அமைச்சு, கொழும்பு.

சந்திரசேகரன், சோ.(2017).மாற்றமுறும் கல்விமுறைமைகள். கொழும்பு-11: சேமமடு பதிப்பகம்.

சின்னத்தம்பி ,க.(2017) கல்வியில் அளவீடும் மதிப்பீடும். கொழும்பு: சேமமடு புத்தகசாலை.

சின்னத்தம்பி,மா.(2006),பாடசாலை முகாதைத்துவம், விஸ்டன் பப்ளிகேசன், இலங்கை.

ஞானரெத்தினம், க.(2013).ஆசிரியம் வெற்றிபெற. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

தனராஜ், தை.(2021). 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

தனராஜ், தை.(2011). மாற்ற முகாமைத்துவம். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

பாலசூரிய,ஏ.ஸ்.(1994),பாடசாலைகளில் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்,தேசிய கல்வி நிறுவகம்,மகரகம.

ஐயசேன புத்பிட்டிய.(1999),ஆசிரிய சேவையும் ஆசிரிய வாண்மையும், ஐனகா பிறின்றர்ஸ்,மகரகம.

Al-Ghadouni, A.M .(2021).Critical Thinking: Components, Skills, and Strategies. Revista Argentina de Clínica Psicológica XXX, (2) 1-16. Doi. 10.24205/03276716.2020.4000

Aripin, R., Mahmood, Z., Rohaizad, R., Yeop, U., & Anuar, M. (2003). Students' learning styles and academic performance. 22nd Annual SAS Malaysia Forum, 15th July 2008, Kuala LumpurConvention Center, Kuala Lumpur, Malaysia. http://ro.uow.edu.au / commpapers/174

Bartel,J.(2018).Office Soft Skills. 3 rd edition. https://wayzgoosepress.com

Giusti,Giuseppe(2008).Soft Skills , Chelsea Publishing,ISBN 978-0-9558926-0-8

Chris Forlin (2013), Inclusive Education for Students with Disability Australian. Research Alliance for Children of Youth.

EFA Global Monitoring Report. (2008) >Oxford University Press, UNESCO

Hairuzila,I.(2009)Challenges in the integration of soft Skills in teaching technical courses: Lecturers' perspectives. Asian journal of University Education.

Hattie, J. (2009). Visible learning: A synthesis of over 800 meta-analyses relating to achievement. London & New York: Routledge.

Hodges, L. (1980). A Study of therelationship of School Climate, Managerial System, Public Control Ideology and Student Academic Achievement. Psychological Abstracts,72 . http://mpra.ub.uni-muenchen.de/13621/

Journal of teacher education, 41 (3), 3–1 Proverb, C. (2014).Principles of Teaching:Different Methods and Approaches. Retrieved from https://www.slideshare.net/justindoliente/principles-of-teaching-33070911

Lawrence, A.S. (2012) School Environment and Academic Achievement of standard IXstudents, Journal of Educational and instructional studies in the world,Volume 2Issue 3 , (August 2012), pp2010-2015.OURNAL

Marks, R. (1990). Pedagogical content knowledge: From a mathematical case to a modified conception.

Peggy,Klaus(2008),The Hard Truth About Soft Skills: Work place Lessons Smart People Wish They'd Leamed Sooner,HarperCollins,ISBN 978-0-061-28414-4

Proverb, C. (2014).Principles of Teaching:Different Methods and Approaches. https://www.slideshare.net/justindoliente/principles-of-teaching-33070911

RaedZedan (2010), New Dimensions in the Classroom Climate, Learning Environments Research, Vol. 13(1), pp.75-88.

Special Education Cooling Criteria 2012 / 2013, Alberta Education Learning Support Branch, Boulevard.

Taraneh, E.,& Farshideh, Z.(2016). Classroom Management Strategies of Multigrade Schools with Emphasis on the Role of Technology. https://www.researchgate.net/publication/317255908

UNESCO (1994)> Salamanca Statement and Framework for Action Paries; UNESCO.

UNESCO (2001)> Inclusion in Education : World Education Forum, EFA 2000 Paries, NESCO.

https://www.indeed.com/hire/c/info/7-roles-of-a-teacher

https://www.etoninstitute.com/blog/the-7-roles-of-a-teacher-in-the-21st-century

https://www2.education.vic.gov.au/pal/roles-and-responsibilities-teaching-service/policy-and- guidelines/classroom-teachers

https://en.wikipedia.org/wiki/Soft skills

https://reasearchgate.net/publication/277971422